விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை (11.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## 20ஆவது சட்டத்தை நிறைவேற்ற
# பொது வாக்கெடுப்பு தேவையில்லை
## பெரும்பான்மையுடன் அடுத்த அமர்வில் நிறைவேற்றப்படும்

(கொழும்பு) அரசிலயமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபை பொது வாக்கெடுப்புக்கு விடுவதற்கு தேவையில்லை என்றும் அதனை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நிரூபிப்பதன் ஊடாக நிறைவேற்ற முடியும் என்றும் உயர்நீதிமன்றினால் சபாநாயகருக்கும் வியாக்கியானம் வழங்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

### இணுவிலைச் சேர்ந்த பல்கலை மாணவி கொழும்பில் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்.இணுவிலைச் சேர்ந்த களனிப் பல்கலை 15

### மீன்பிடிக்கச் சென்றவர் வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா மணியர்குளம் பகுதியில் குளத் 15

### கோண்டாவில் கிழக்கில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்து ஒரு வகை திர வத்தினை உட் 15

### கைதடியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் பிரான்ஸில் பலி



(கரணவாய்)
யாழ்ப்பாணம், கைதடி 15

### திடீர் சுகவீனம் வடமராட்சி இளைஞன் கட்டாரில் மரணம்



(கரணவாய்)
வடமராட்சி, கரவெட்டி பகுதியைச் சேர்ந்த இளம் 15

### மருந்து வில்லைகளை அருந்திய மாணவி
சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(தருமபுரம்)
தருமபுரத்தில் மருந்து வில்லைகளை அருந்திய 15

### கொழும்பு வைத்தியசாலையில் மூன்று பேருக்கு கொரோனா

(கொழும்பு)
கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள 16

### சிறுவர் வைத்தியசாலையில் தாதிக்கு தொற்று உறுதி

(கொழும்பு)
கொழும்பு - பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத் 16

### புலமைப் பரிசில் பரீட்சைக்கு அச்சமின்றி பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்
கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
"கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம், சுகாதார அமைச்சு, பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள் இணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவதற்கான 15

### மன்னாரில் 5 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

(மன்னார்)
மன்னாரில் 5 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை மாலை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.
மன்னார் ஆயர் இல்லத்தில் பணியாற்றிய கட்டடத் தொழிலாளி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.
அதனையடுத்து அவருடன் பணியாற்றிய ஏனையவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.
அவ்வாறு தனி 15



இன்று நடைபெறும்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும்
சிறந்த பெறுபேற்றைப் பெற
வாழ்த்துகின்றோம்
வலம்புரி கல்விப் பிரிவு

### 105 பேருக்கு மேலும் கொரோனா உறுதி
இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)
நாட்டில்மேலும் 105 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் மினுவாங் கொட ஆடைத்தொழிற்சாலை 15

### இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள் தமிழ் மக்களே என்று கூறியதற்காக
நீதியரசர் விக்னேஸ்வரனிடம் சி.ஐ.டி விசாரணை



(யாழ்ப்பாணம்)
வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனிடம் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் (சிஐடி) வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுள்ளனர்.
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த சிறப்பு பொலிஸ் குற்றவியல் விசாரணைப் பிரிவைச் 16

### 20ஆவது திருத்தம் தொடர்பான தீர்ப்பு
# சபாநாயகர், ஜனாதிபதிக்கு உயர்நீதிமன்றால் அனுப்பி வைப்பு

(கொழும்பு)
பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்த முடிவு உயர்நீதிமன்றத்தினால், சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
20ஆவது திருத்தச் 16

### 20 தொடர்பான தீர்ப்பை இல் அறிவிப்பேன்
சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன

(கொழும்பு)
20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக உயர்நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்மானம் தனக்குக் கிடைத்திருப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.
20ஆவது திருத்தச் 15

# வன்முறையுடன் தொடர்புடைய
# 20 வயது இளைஞன் கீரிமலையில் கைது
## வாள் ஒன்றும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 20 வயது இளைஞன் ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரிமலையில் உள்ள வீட்டில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் வாள் ஒன்றும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ம-03)

# முட்கம்பி வேலி விசமிகளால் சேதம்
## எழுதுமட்டுவாள் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காணி ஒன்றின் பாதுகாப்பிற்காகப் போடப்பட்டிருந்த சுமார் 20 அடி நீளமுடைய முடகம்பி வேலிகள் விசமிகளால் அறுத்தெறியப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை எழுதுமட்டுவாள் விழுபளை அம்மன் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் காணி உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ம-03)

**வேலை வாய்ப்பு**

ஆய்வு நிறுவனம் ஒன்றுக்கு பணிநிலை வெற்றிடம் காணப்படுவதால் தகுதியானவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (C-504)


( ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். )

சந்தை ஆய்வில் ( Marketing Research ) முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Tel : 077 454 2175**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரசாமி பகீரதன்

(XPERT MEDICS (PVT) LTD - நிறுவனத்தின் உரிமையாளர்)

சாவகச்சேரி, பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி பகீரதன் நேற்று முன்தினம் (09.10.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி - மனோன்மணி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் பிரியதர்சனாவின் அன்புக் கணவரும் கிஷோத்தனனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கோண்டாவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (4228)

கோண்டாவில் 077 394 6232 077 284 9686 தகவல்:- குடும்பத்தினர்

# பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை அரசு விரைவில் முன்வைக்க வேண்டும்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கானத் தீர்வை, அரசாங்கம் விரைவில் முன்வைக்க வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சஜித் பிரேமதாச மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனா அச்சுறுத்தல் காலத்தினால், இன்று பலருக்கு வேலை வாய்ப்பு இல்லாது போயுள்ளது.

ஏற்றுமதி- இறக்குமதி வர்த்தகமும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சிறிய முதல் பெரிய வர்த்தகர்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். மறு புறத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

சந்தையில் இன்று அரிசிக்கும் தேங்காய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பொருளாதாரரீதியாக நாட்டின் அனைத்துத் துறைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் தாக்கத்தை நாம் நீண்ட காலத்திற்கு அனுபவிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்தே, இந்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் தொடர்பாக எந்தவொரு அக்கறையும் இல்லை என்று தெரிகிறது.

மக்களை வாழ இந்த அரசாங்கம் இடமளிக்கவில்லை என்பதுதான் இதிலிருந்து தெரியவருகிறது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணங்களையும் வழங்கவில்லை.

எனவே, இதற்கான அரசாங்கத்தின் பதில் என்ன? என்று நாம் கேட்கவிரும்புகிறோம். இதற்கான திட்டங்கள் ஏதும் இருந்தால், அதனை அரசாங்கம் உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# கொரோனாவைத் தடுக்கும் வகையில்
# இலங்கையில் தயாரித்த மருந்து சபாநாயகரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக இலங்கை சுதேச மருத்துவ அமைச்சால் ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுதேச மருத்துவத்தை ஊக்குவித்தல், கிராமப்புற மற்றும் ஆயுர்வேத மற்றும் பொது சுகாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆயுர்வேத திணைக்களமும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனமும் இணைந்து நோய் எதிர்ப்புப் பானத்தையும் மருந்துத் தூளையும் அறிமுகப்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருந்துகள் அனைத்தும் 100 சதவீத உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டவை எனவும், அவை 'சுதங்க பானம்' மற்றும் 'சுவாதரணி நோய்த்தடுப்பு பானம்' எனப் பெயரிடப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்த மருந்துகள் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் சந்தையில் அறிமுகப்படுத்தப்படும்.

தற்போதைய நிலைமையில் மேற்கத்தேய மருத்துவத்தால் இன்னும் கொரோனா வைரஸுக்கு எதிரான மருந்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இருப்பினும், இந்தச் சவாலைச் சமாளிக்கக்கூடிய மருந்துகளை உற்பத்தி செய்யும் திறன் எமது சுதேச மருத்துவ அமைச்சுக்கு உள்ளது" என்றார்.

இந்த மருந்து கள் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சரினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டன. (ம-03)

**மணமகன் தேவை**

1989, யாழ். இந்து கௌரவ குடும்பம், உத்திரட்டாதி, 1 இல் சூரி - செவ், ஆங்கில ஆசிரியையாக கடமைபுரியும் பட்டம் பெற்ற மணமகளிற்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றோம். (C-503)

**தொடர்பு : 076 616 4886**

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில், இராஜ வீதிச் சந்திக்கு அண்மையில் 1 1/2 பரப்பு, 3 பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு. (4234)

**தொடர்பு : 077 601 1135**

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணைச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (4024)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# ‘20’ ஆல் ஏற்படவுள்ள சவால்கள் தொடர்பில் அரசாங்கம் மீள் மதிப்பீடு செய்ய வேண்டும்

**(கொழும்பு) அரசியலமைப்பின் 17 வது திருத்தம் நடைமுறையில் இருந்தபோதே உலகின் மிகவும் மோசமான பயங்கரவாதக்குழுவை இலங்கை தோற்கடித்தது. அதேபோன்று 19 வது திருத்தம் நடைமுறையிலுள்ள போதே போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதியினால் மேற்கொள்ள முடிந்தது. எனவே தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் 20 வது திருத்தத்தினால் ஏற்படத்தக்க சவால்களை அரசாங்கம் மீள்மதிப்பீடு செய்வது அவசியமாகும் என்று சமூகநீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

கொவிட் - 19 வைரஸ் தொற்றுப்பரவல் நெருக்கடி நிலையின் மத்தியில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயலாற்றுவது அவசியம் என்பதை வலியுறுத்தி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது, அண்மையில் எதிர்பாராத விதமாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பைத் தொடர்ந்து நாம் பாரிய சுகாதார நெருக்கடி நிலையொன்றுக்கு முகங்கொடுத்திருக்கிறோம். இந்த நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக இது 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து சர்வதேச நாடுகள் அனைத்திற்குமான சவாலாகவே இருந்து வருகிறது.

இச்சவாலை எதிர்கொள்வதற்கும் எமது சமூகத்தை இதிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் ஒவ்வொரு பிரஜையும் உரியவாறான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி தமது பங்களிப்பினை வழங்கவேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது.

இவ்விடயத்தில் அனைத்துத் தரப்புக்களுடனான தொடர்பையும் ஒத்துழைப்பையும் உறுதி செய்யும் அதேவேளை, சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் உதவியுடன் முக்கியமானதொரு மையநிலைப் பங்களிப்பை அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கிறது. அதேவேளை பல்வேறு புதிய சவால்களைத் தோற்றுவித்திருக்கும் இந்தத் தொற்றுநோய்ப்பரவலை எதிர்கொள்வதில் அரசியல் கட்சிகள், மதத்தலைவர்கள், வணிகங்கள், சிவில் சமூகங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பும் சம அளவில் பொறுப்பேற்றுச் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அதேவேளை அரசியலமைப்பின் 19 வது திருத்தம் நடைமுறையில் இருக்கும்போதே ஆரம்பத்திலேற்பட்ட கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்தினால் எடுக்கமுடிந்தமை மற்றும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதன் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் நடவடிக்கை எடுக்க முடிந்தமையை நாம் அவதானித்திருக்கின்றோம். அதுமாத்திரமன்றி அரசியலமைப்பின் 17 வது திருத்தம் நடைமுறையில் இருந்தபோதே உலகின் மிகவும் மோசமான பயங்கரவாதக்குழுவை இலங்கை தோற்கடித்தது.

எனவே தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் 20 வது திருத்தத்தினால் ஏற்படத்தக்க சவால்களை அரசாங்கம் மீண்டுமொரு தடவை மதிப்பீடு செய்வதுடன் அனைத்துத்தரப்பினருடனான கலந்துரையாடல் ஊடாக புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுந்தரப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளமையையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# விடுதலைப் புலிகள் காலத்து தங்கம் தேடி அகழ்வுப்பணி



(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்ததாகக் கூறப்படும் தங்கத்தினைத் தேடும் பணிகள் நேற்று சனிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு தேற்றாத்தீவு மயான வீதியில் கடற்கரையினை அண்டியுள்ள சவுக்கு மர காட்டிற்குள் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரைக் கைது செய்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளினால் குறித்த பகுதியில் தங்கம் உட்பட பல பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்ற நிலையில், களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றின் அனுமதிபெறப்பட்டுமண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம், தொல்பொருள்திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் புதையல் தேடும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்ட தங்கம் தேடும் பணிகளின்போது எவையும் மீட்கப்படாத நிலையில் தோண்டும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஐ-4)

# கொரோனாவிலிருந்து நாட்டை பாதுகாப்பதே அவசியம்-திஸ்ஸ

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தைவிட கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து நாட்டை பாதுகாப்பதே முக்கியமானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கப்பட்டால் அதனூடாக அரசாங்கத்தின் சுயநலமான போக்கை தெரிந்து கொள்ள முடியும்.

சர்வாதிகார ஆட்சிக்கான பண்புகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு நாங்கள் எப்போதுமே இணக்கம் தெரிவிக்கப்போவதில்லை.

20 தொடர்பான இரண்டாம் கட்ட வாசிப்புகள் பாராளுமன்றத்தில் ஆரம்பமானவுடன் எதிர்ப்பை வெளியிடுவோம். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இந்நிலையில் வைரஸ் பரவலிலிருந்து நாம் பாதுகாப்பாக இருப்பது தொடர்பிலே சிந்திக்கவேண்டும்.

வைரஸ் பரவலின் காரணமாக 20 இற்கு எதிராக ஏற்பாடு செய்திருந்த பேரணிகள். மற்றும் ஆர்ப்பாட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் 20 ஐ விட வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதே மிகமுக்கியமானதாகவும் எவ்வாறாயினும் பாராளுமன்றத்திற்குள் 20 இற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவோம் என்றார். (நி-7)

# நாட்டின் மீது அக்கறையுடையோர் 20 ஆவது திருத்தத்தை ஆதரிக்க மாட்டார்கள்



**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் கீழ் நாட்டின் மீது அக்கறை கொண்ட எவரும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஆதரிக்கமாட்டார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியுள்ள தாவது.

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பிலே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தற்போதுள்ள சூழ் நிலையில் அரசியலமைப்புக் கான 20 ஆவது திருத்த சட்ட மூலம் தொடர்பில் கவனம் செலுத்துவது பொருத்தமற்ற விடயமாகும்.

தற்போது நாடு இருக்கும் நிலைமையில் 20 ஆவது திருத்த சட்டமூலத்தை விட நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பிலே சிந்தித்து செயற்பட வேண்டும்.

இதேவேளை வைரஸ் பரவலின் காரணமாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தாது 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பில் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இந்நிலையில் இந்த திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் நாட்டின் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ள எந்த உறுப் பினர்களும் அதற்கு ஆதரவளிப்பார்கள் என்று எண்ணவில்லை என்றார். (நி-7)

# பிரான்ஸை உலுக்கிய கொடூரக்கொலை; கொலையாளி சுயநினைவுடனே இருந்துள்ளார்

## மருத்துவமனை வட்டாரங்கள் அதிர்ச்சித்தகவல்

(பாரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் மனைவி, இரு பிள்ளைகள் உட்பட ஐந்து பேரை கோரமாகக் கொலை செய்த இலங்கைத் தமிழர் சுய நினைவுடனேயே இந்தச் செயலைச் செய் திருக்கின்றார் என மருத்துவமனை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களை அதிர வைத்த இச்சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் அந்நாட்டு ஊடகங்கள் மூலம் வெளி வந்து கொண்டிருக்கின்றது. இதன்படி பாரிஸ் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

கொலைச் சந்தேக நபர் கடந்த சனிக்கிழமை பாரிஸிலுள்ள தன்னுடைய வீட்டில் வைத்து மனைவி, இரண்டு பிள்ளைகள், இரண்டு மருமக்கள் ஆகியோரை கோரமாகக் கொலை செய்திருந் தார்.

அதனைவிட நெருங்கிய உறவினர்களான சகோதரி, மைத்துனர், அவர்களுடைய இரு பிள்ளைகள் என மேலும் நால்வரை அவர் படுகாயங்களுக்கு உள்ளாக்கியிருந் தார்.

கடும் காயங்களுடன் தப்பிச் சென்ற சிறுவன் ஒருவன் கொடுத்த தகவலையடுத்து அப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் நிலைமைகளை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த னர்.

கொலைச் சந்தேக நபரும் தன்னைத்தானே தாக்கியதில் படுகாயமடைந்திருந்த நிலையில் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஐந்து கொலைகளை இவர் எதற்காகச் செய்தார் என்பதற்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் கொலை செய்யும் போது அவர் மனநலம் பாதிக்கப் பட்டவராக இருக்கவில்லை எனத் உறுதிப் படுத்தப் பட் டுள்ளது. (ஜ-4)

# இராணுவத்தின் மகத்தான சேவையை மதிக்கிறேன்- வாழ்த்திய ஜனாதிபதி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இலங்கை இராணுவம் மேற் கொண்டு வரும் அர்ப்பணிப்பை பாராட்டுவதாகவும் நாட்டின் இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் இராணுவம் வழங்கி வரும் பங்களிப்புக்கு மதிப்பளிப்ப தாக வும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 71ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

71 ஆண்டுகளில் நாட்டின் ஐக்கியம், இறையாண்மை,



ஒருமைப்பாட்டை பாதுகாப்பதில் இலங்கை இராணுவம் நேரடியான மற்றும் வெற்றிகரமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

அத்துடன் நிற்காமல் தாய் நாட்டிற்கு ஏற்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள், சவால்கள், இடர்களில் இருந்து பாதுகாக்கும் காவல் அரணாக செயற்பட்டுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில், இலங்கை இராணுவத்தின் அர்ப்பணிப்பை நான் மதிப்பாக கருதுகிறேன்.

நாட்டின் பாதுகாப்பு , இடர் முகாமைத்துவ உட்பட அபிவிருத்தசி செயற்பாடுகளுக்கு இராணுவம் வழங்கும் பலம் தொடர்பாகவும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று(நேற்று) கொண்டாடப்படும் 71வது ஆண்டு நிறைவு தினத்திற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# 465 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

தனிமைப் படுத்தலை நிறைவு செய்துள்ள 465 பேர் நேற்று வெளியேறியுள்ளனர்.

கொரோனாத் தடுப்பு செயலணி இந்த விடயத் தினைத் தெரிவித்துள்ளது.

முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப் படுத்தல் நிலையங்களில் இருந்து 122 பேரும், தனியார் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டிருந்த 343 பேரும் இவ்வாறு வெளியேறியுள்ளனர். (நி-7)

# மழை பெய்யக்கூடும்

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் கனத்த மழை பெய்யக் கூடு மென வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழைக்கான சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கிழக்கு - மத்திய வங்காள விரிகுடா கடற்பிராந்தியங்களில் குறைந்த அழுத்த தாழமுக்கம் வலுவடையக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் ஆழமான கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை தவிர்த்து அவதானமாக இருக்குமாறு மீனவ மற்றும் கடல்சார் சமூகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்


# பூஜிதவின் முறையற்ற செயற்பாடுகளுக்கு அவரை அழைத்து எச்சரிக்கை விடுத்தோம்

## சட்டவொழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பதவியில் இருந்த போது அவரின் முறையற்ற செயற்பாடுகள் குறித்து அமைச்சுக்கு அழைத்து எச்சரிக்கை விடுத்ததாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர் பத்மசிறி ஜயமன்ன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடந்த வியாழக்கிழமை முன்னிலையாகி சாட்சியம் வழங்கிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த மலல்கொட குழுவின் உறுப்பினரான சட்டம் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர் பத்மசிறி ஜயமன்ன இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியம் வழங்கினார்.

இதன் போது சாட்சியம் அளித்த. அவர் நான் பங்கேற்ற தேசிய பாதுகாப்பு பேரவை கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு குறித்த முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டனவா? என்பது தொடர்பில் ஞாபகம் இல்லை என்றும் அதேபோல் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கும். அரச புலனாய்வு பிரிவுக்கும் இடையில் தொழில் ரீதியான பிரச்சினைகள் நிலவியதை தனது சேவைக் காலத்தில் அவதானித்ததாகவும் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பங்கேற்ற பல நிகழ்வுகளில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பிரச்சினைகள் காணப்பட்டன. அதற்கு ஊடகங்கள் பலத்த பிரச்சாரங்களை வழங்கின. இது சரியான விடயம் அல்ல என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரை அழைத்து எச்சரித்தோம். அப்போது சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக செயற்பட்ட ரஞ்சித் மத்தும பண்டாரவும் அவருக்கு ஆலோசனை வழங்கினார் என கூறினார்.

தொடர்ந்து சாட்சியம் வழங்கிய சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர், நல்லாட்சி அரசாங்கத்தில் தமக்கு கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக கூறினார்.

அதேபோல், முன்னைய அரசாங்கம் சிறுபான்மை கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தால், சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தலையிட அதிகாரிகள் தயக்கம் காட்டினர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

### தென்கிழக்கு பல்கலை பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில் சார் கற்கைகள் நிலையத்தால் நடத்தப்படவிருந்த 2014 / 2015 ஆம் கல்வி ஆண்டுக்கான இரண்டாம் வருட, முதலாம் பருவ கலைமாணி. வெளிவாரிப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.


பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தின் உதவிப் பதிவாளர் எம்.எஸ். உமர் பாறூக் இது தொடர்பில் அறிவித்தார்.

நேற்று முதல் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைகள், தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா வைரஸ் தொற்று நோய் அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இப்பரீட்சைகள் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார். (நி-7)

# மரண அறிவித்தல்

## அமரர் பெரியான் சுந்தரம்

தோற்றம்
21 . 08 . 1941



மறைவு
09 . 10 . 2020

கல்லூரி வீதி இளவாலையைப் பிறப்பிடமாகவும் மதினாநகர் மகாறம்பைக்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பெரியான் சுந்தரம் 09.10.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற பெரியான்- லட்சுமி தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற துரைராசா, நாகேஸ், அன்னம் மற்றும் தங்கராணி, சிவஞானம் ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் சந்திரமோகன், சந்திரமாலா, சந்திரசேகர், சந்திரபாஸ், சந்திரசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகௌரி, ஞானசேகரன், பரமேஸ்வரி, றோஸ்மேரி அன்ரனிரா (மாலினி), சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் வம்சி, துஜன் சாரங்கன், செந்தனேஸ், செங்கரன், சங்கவின், கார்திகா, லக்சுமிகரன், பிரியங்கன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

மதினா நகர்,
மகாறம்பைக்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(4223)

# எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சீனாவுடனான நட்பை பயன்படுத்த முடியும்

## சீன உயர்மட்டக்குழு சந்திப்பில் பிரதமர்

(கொழும்பு)

முன்னாள் சீன வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பணியக உறுப்பினருமான யெங்ஜியேச்சி (Yang Jiechi) தலைமையிலான சீன உயர்மட்ட குழுவினர் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர். உலகளாவிய கொரோனா தொற்றுக்கு மத்தியில் சீன அரசாங்கத்தின் உயர்மட்ட இராஜதந்திர குழுவினர் தெற்காசிய பிராந்தியத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொவிட்-19 உலகளாவிய தொற்றுக்கு எதிராக போராடுதல் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துதல் ஆகிய துறைகளில் இலங்கை-சீன ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இச்சந்திப்பு இடம்பெற்றது. உலகளாவிய கொரோனா தொற்றுக்கு மத்தியில் சீன உயர்மட்ட இராஜதந்திர குழுவினர் தெற்காசிய பிராந்தியத்திற்கு சுற்றுப்பயணத்தில் ஈடுபட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இச்சுற்றுப்பயணத்தின் ஊடாக தற்போதுள்ள இருதரப்பு உறவை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக்கும், சீனாவிற்கும் சாத்தியமாகியுள்ளமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். கொவிட்-19 தொற்றுக்கு எதிராக போராடுவதற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் சீன அரசாங்கத்திற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட்-19 தொற்றுக்கு மத்தியில் இலங்கைப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புக் கருவிகள் மற்றும் மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கியமை குறித்து சீன அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது முதலீட்டாளர்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை நிலைநாட்டுவதற்கு சீன அரசாங்கத்துடனான எமது நீண்டகால நட்பை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று நான் நம்புகின்றேன். கொவிட்-19 தொற்று தாக்கத்தின் பின்னர், அரசாங்கம் உலகளாவிய ரீதியில் முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்கு ஆர்வம் காட்டுவதுடன், அதில் கொழும்பு துறைமுக நகரத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வருகைதந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீன நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு சீன அரசாங்கத்திற்கு முடியும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்த பிரதமர், அது ஏற்றுமதி வருவாயை உருவாக்குவதுடன், இலங்கையர்கள் விசேடமாக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உதவியாக அமையும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.


இந்த உலகளாவிய கொரோனா தொற்றை ஒழிப்பதற்கான போராட்டம் மற்றும் இலங்கை பொருளாதார உறவை மேம்படுத்துதல் உள்ளிட்ட தொற்றினால் ஏற்படும் சவால்களுக்கு தீர்வு காணுதல் தொடர்பில் கூட்டாக தீர்வு காணுவதற்கு சீன அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (நி-7)

# தொடர்ந்தும் அனலைதீவு முடக்கத்தில்

## மஞ்சள் கடத்தியோர் தனிமைப்படுத்தப்பட்ட சிறையில்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பிரதேசத்தில் மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட மூவர், நீதவான் அனுமதியுடன் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப் படுத்தப்பட்ட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



இதனையடுத்து அனலைதீவு பகுதியில் மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் நடமாடியதாக கருதப்படும் 10 குடும்பங்களைச் சேர்ந்த 39பேர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலையிலிருந்து அப்பிரதேசத்திலிருந்து யாரும் வெளியே றாதவாறும் பிரதேசத்துக்குள் புதிதாக யாரும் உட்பிரவேசிக் காதவாறும் முடக்கப்பட்டுள்ளது.

அந்த முடக்கம் நடைமுறையில் உள்ளது என ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

மஞ்சள் கடத்தலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட மூன்று நபர்களிற்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் வரும் வரை குறித்த முடக்கம் அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேருக்கு, உலர் உணவுப் பொருட்கள் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளதோடு, அப்பகுதியை ஊர் காவற்றுறை பொலிஸார் மற்றும் கடற்படையினர், சுகாதார பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

மேலும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் அவசர கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. கடல் மார்க்கமாக பொருட்கள் கடத்தி வருபவர்களின் தகவல் இருப்பின் பொதுமக்கள் 021 222 6666 எனும் இலக்கத்திற்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மஞ்சள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனலைதீவின் பல பகுதிகளில் நடமாடியதாலும் இவ்வாறான வேறு சிலர் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாலும் அனலைதீவிலிருந்து வெளியே வருவதும் உள்ளே செல்வதும் நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

மேற்படி நபர்களில் ஒருவர் தப்பிச்சென்று, காரைநகரில் தங்கியிருந்த வீடும் அந்த வீட்டினை சார்ந்தோரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக தீவகத்தில் கடல் மார்க்கமாக ஏற்படும் தொடர்புகளால் ஏற்படக்கூடிய கொரோனா நோய் பரம்பலைக் கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-4)



யாழ்ப்பாணம் - ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம் மற்றும் படிப்பகக் கட்டடம் புதிய அரசின் சப்ரிகம (நிறைவான கிராமம்) திட்ட நிதியில் புனரமைக்கப்பட்டு அண்மையில் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் சு.இராமநாதன் திறந்து வைத்தார். கழகத்தலைவர் கு.பிறேம்காந் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சா.சுதர்சன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துன்னாலை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் (ஜே/370) கொரோனா காரணமாக சுய தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு நெல்லியடி வர்த்தகர் சிவ சூரியகுமாரன் தயாபரன் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்கினார்.



"வேலையிலிருந்து வீடு நோக்கி" என்ற சமூக விழிப்புணர்ச்சிக்கான மிதிவண்டிப் பயணம் நேற்று யாழிலிலிருந்து கிளிநொச்சி வரை இடம்பெற்றது. யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு அஞ்சலி செலுத்தி ஆரம்பமான இப்பயணத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தனியார் உறுதிப்பத்திர காணிகள் தொடர்பான தகவல்கள் திரட்டு

## சுரேன் ராகவன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வனஜீவராசிகள் திணைக்களம், காட்டுத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் கையகப்படுத்தல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தனியார் காணி உரிமையாளர் களின் உறுதிப்பத்திர காணிகள் தொடர்பான தகவல்களை திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வனஜீவராசிகள் திணைக்களம், காட்டுத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் காரணமாக வடக்கு மாகாணத்தில் வசிக்கும் பொது மக்களின் தனிப்பட்ட உறுதிப்பத்திர காணிகளில் அல்லது, அவர்களின் வாழ்வாதாரத்தில் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தால் அதனை ஆவணப்படுத்துவதனூடாக குறிப்பிட்ட திணைக்களங்களுடனும் பாராளுமன்றிலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மட்டத்திலும் கலந்துரையாடல்களையும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டு அவற்றை தீர்த்துக் வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட திணைக்களங்களினால் பாதிப்புக்குட்பட்ட வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்கள் அது தொடர்பான தகவல்களை சுரேன் ராகவனின் யாழ்ப்பாண அலுவலகத்திற்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் இல. 104, பலாலி வீதி, ஊரெழு மேற்கு, உரும்பிராய், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-4)

# புதிய அனுமதிக்கான பதிவுகள் ஒத்திவைப்பு

(குப்பிழான்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெறவிருந்த 2020 - 2021 கல்வியாண்டின் புதிய அனுமதிக்கான பதிவுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பதிவுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி மீள இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இரண்டாம் வருடத்தில் உள்ள 380 ஆசிரிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# பிற்போடப்பட்டது

(குப்பிழான்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகத்தில் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகவிருந்த "எங்கட புத்தகங்கள்" கண்காட்சியும் விற்பனையும் தற்போதைய கொரோனா சுகாதார நடைமுறைகள் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொது நூலகப் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார். (5-4-18)

# சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எதிர்வரும் 12 - 16 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தமது காரியாலயம் மக்கள் சேவைக்காகத் திறக்க ப்படாது என்று மோட்டார் வாக னத் திணைக்களம் அறிவித்து ள்ளது.

மோட்டார்வாகனத்திணைக் களத்தின் ஆணையாளர் நாய கம் சுமித் சி.கே.அழகக்கோன் வெளியிட்டுள்ள அறிவித்தலி லேயே இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் கடந்த ஞாயி ற்றுக்கிழமை பெண்ணொருவ ருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதைத்தொட ர்ந்து நாடளாவிய ரீதியில் மேலும் பல இடங்களில் பெரு மளவானோர் வைரஸ் தொற் றுக்குள்ளாகியிருப்பது அடை யாளங்காணப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் வைரஸ் பர வலைக் கட்டுப்படுத்துவதற்காக பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பு இருக்கின்ற அரசகட்டமைப் புக்களின் சேவைகள் தற்காலி கமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் நாரஹேன் பிட்டி மற்றும் வேரஹெர ஆகிய இடங்களில்அமைந்துள்ள மோட் டார் வாகனத் திணைக்களத் தின் காரியாலயங்களை நாளை 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மக்கள் சேவைக் காகத்திறக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



பிரான்ஸையும் கடந்து ஈழத்தமிழர்கள் அனைவரையும் அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்த்திய குடும்பத்தவர் ஐவர் படுகொலைக்கு, உணர்வுபூர்வமாக பலின மக்களும் தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர். படு கொலை செய்யப்பட்ட உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது. படுகொலை செய்யப்பட்ட பிள்ளை களை நினைவுகூர்ந்து வரைபடங்கள், ஒளிப்படங்கள் தொங்க விடப்பட்டு, பூங்கொத்துக்கள், சுடர்கள் ஏற்றப்பட்டிருந்தன.

## குணமடைந்தோர் 3306

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற் றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 10 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இதுவரை 3,306 பேர் பூரணமாகக் குணமடை ந்து வீடுகளுக்கு திரும்பியுள்ள தாக சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது. இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயி ரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## 130 பொலிஸார் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் 130 பொலிஸ் அதிகாரிகளை தனி மைப்படுத்துமாறு உத்தரவிட ப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் உயர் டி.ஐ.ஜி. அலுவலகம் , மினு வாங்கொட , கடவத்த மற்றும் மாரதன பொலிஸ் நிலையங் களுடன் இணைக்கப்பட்ட அதி காரிகளையே முன்னெச்சரி க்கை நடவடிக்கையாக இவ் வாறு தனிமைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

கொரோனாவின் தீவிரம் காரணமாக மினுவாங்கொட பொலிஸ் நிலையத்தில் சிற் றுண்டிச்சாலை நடத்தி சென் றவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இந்நிலையில் மூடப்பட்ட மினுவாங்கொட பொலிஸ் நிலையம் விரைவில் திறக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இரு மாணவர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற ள்ள இரண்டு மாணவர்களுக்கு கொரோ னாத் தொற்று ஏற்பட் டுள்ளது.

மூன்று மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் மருத்துவ கண்காணி ப்பில் வைக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்நிலையில் குறித்த ஐவரும் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பா டுகள் ஐ.டி.எச். வைத்திய சாலை வளாகத்தில் ஏற் படுத்திக் கொடுக்கப்பட வுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவி த்துள்ளார். இதே வேளை, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை சுகா தார பாதுகாப்புடன் நடை பெறவுள்ளமை குறிப்பிட த்தக்கது. (ஜ-4)


**வேலை வாய்ப்பு**

இல. 46, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (கலட்டிச் சந்திக்கு அருகாமையில்) எனும் முகவரியில் இயங்கும் யாழ். மிருக வைத்திய சத்திரசிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

வயதெல்லை - 20 தொடக்கம் 35 வரை (4212)

தொடர்புகளுக்கு 077 263 9573

**விற்பனைக்கு**

பாவித்த ஓடுகள் விற்பனைக்கு உண்டு (4381)

தொடர்பு: 077 949 6948

**மணமக்கள் தேவை**

வெளிநாட்டு மணமகன், மணமகளுக்கு வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மணமகன், மணமகள் தேவை. உள்நாட்டு (சூரியன்,செவ்வாய்) மணமகளுக்கு படித்த உள்நாட்டு மணமகன் தேவை. உள்நாட்டு மணமகன், மணமகள் தேவை. (4224)

தொடர்புகளுக்கு: 077 023 7639

வட்ஸ் அப்: 004917643399372

**Canada VISA**

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA**

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் ❖ Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

**Sponsor Letters** Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute Stop Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: லண்டன் இல் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்<br>தொ.இ: B/11293 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 35 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. பயிற்றப் பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை.<br>எதிர்பார்ப்பு: மணமகள் விவாகரத்தா னவர். விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/1975 |
| பிறப்பு: 1984 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அனுசம் 4 செவ் 5 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11295 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 29 ¾ செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Technician in Norway.<br>எதிர்பார்ப்பு: படித்த தகுந்த மணமகன்<br>தொ.இ: G/899 |
| பிறப்பு: 1986 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. அரச சேவை.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11296 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 28¾ செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. விரிவு ரையாளர்.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/906 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 25 ¼ செவ் 10 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. Medical Representative (private)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் நிரந்தர உத்தியோகம்<br>தொ.இ: B/11298 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா:61 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. முகாமைத்துவ உதவியாளர்.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/908 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உலகளவில் கொரோனா பாதிப்பு உச்சத்தைத் தொட்டது

## ஒரு நாளில் மட்டும் 3 இலட்சத்து 38 ஆயிரத்திற்கு மேல் தொற்று

**(ஜெனீவா)**

**உலக அளவில் இதுவரை இல்லாத அளவு நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் பாதிப்பு உச்சத்தை தொட்டுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் சர்வதேச அளவில் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 779 பேருக்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது, இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.**



ஐரோப்பிய நாடுகளில் நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் நோய்த்தொற்று எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவது சர்வதே அளவில் அந்த எண்ணிக்கையை அதிகபட்சமாக்கியுள்ளது.

இதற்கு முன்னர், இந்த மாதம் 2ஆம் திகதிதான் உலக அளவில் அதிகபட்ச நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பதிவு செய்யப்பட்டது. அந்த நாளில் மட்டும் 3 இலட்சத்து 30 ஆயிரத்து 340 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது என்று உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் 3.6 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, சர்வதேச கொரோனா வைரஸ் நிலவரத்தைக் கண்காணித்து வரும் 'வேர்ல்டோமீற்றர்' இணையதள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், அந்த நோய்க்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10.6 இலட்சத்தைத் கடந்துள்ளது.

அதிகபட்சமாக ஆசியாவில் 1.15 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கு இதுவரை 2.08 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸ் தெற்றுக்கு உயிரிழந்துள்ளனர். (நி-7)

# மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்போது அவர், ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து பேசவுள்ளார். சீனாவின் உயர்மட்ட குழுவினர்இலங்கைவந்து திரும்பியுள்ள நிலையிலேயே, அமெரிக்காவும் பலம் பொருந்திய பிரதி நிதியொருவரை இலங்கைக்குஅனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90-100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 180 | 200 |
| தக்காளி | 160 | 180 | 160-180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 120 | 130 | 120 |
| கரட் | 120 | 180 | 180 | 200 |
| பூசணி | 60 | 80 | 70 | 80 |
| புடோல் | 80 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 200-220 | 260 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 240 | 260 | 240 | 250 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 140 | 90 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 260 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 90 | 80 |
| போஞ்சி | 200 | 260 | 220 | 280 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 90-100 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50-60 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-75 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | 250 |
| முள்ளங்கி | 50 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | -- | -- |

# அரசாங்கம் தடம் மாறினால் தூக்கி எறிய தயங்க மாட்டோம்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

சுட்டிக்காட்டும் குறைகளை சரி செய்து முன்நோக்கி செல்லவில்லை என்றால், அரசாங்கத்தை விரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு அபயராம விகாரையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

எவ்வித பதவி மற்றும் சிறப்புரிமைகளை எதிர்பார்த்து துறவிகள் குரல் தற்போது அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர பாடுபடவில்லை. நாட்டுக்கும், இனத்திற்கும் நன்மை பயக்கும் அரசாங்கத்தை அமைப்பதே ஒரே எதிர்பார்ப்பாக இருந்தது.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்கும், இனத்திற்கும் பிரச்சினைகள் ஏற்படும் வகையில் நாட்டின் ஆட்சியை முன்னெடுத்தன் காரணமாகவே அந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகளை துறவிகள் குரல் ஆரம்பித்தது.

தற்போதைய அரசாங்கம், அதனை ஆட்சிக்கு கொண்டு வர அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களின் ஆலோசனைக்கு அமைய செயற்படுவதில்லை என்பதை காணமுடிகின்றது. நாங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்த அரசாங்கத்தை நாங்கள் பாதுகாக்க வேண்டும். நாங்கள் சுட்டிக்காட்டும் தவறுகளை திருத்திக் கொண்டு முன் நோக்கி செல்ல வேண்டும்.

நாங்கள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தாலும் அரசாங்கத்துடன் நெருங்கி இருப்பவர்கள் வானும், மண்ணும் போல் இருக்கின்றனர்.

அரசாங்கம் தவறான வழியில் செல்கிறது என்பது எமக்கு தெரிவதால், அதனை சரி செய்வது எமது கடமை. பௌத்த பிக்குமாரின் பலத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம். கறியில் போட்ட கருவேப்பில்லை போல் தூக்கி எறிய வேண்டாம். அரசாங்கம் தடம் மாறினால், அதனை தூக்கி எறிய நாங்கள் தயங்க மாட்டோம்.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர எந்த வேலைகளை செய்யாதவர்கள் அரசாங்கத்தில் முன்னிலையில் உள்ளனர்.

பணம், உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு செய்தவர்கள் மறந்து போயுள்ளனர். இவர்களிடம் கவனமாக இருக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

## இராசிபலன்

11.10.2020
புரட்டாதி 25, ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 12.46 மணிவரை
பூசம் முன்னிரவு 9.21 மணிவரை
சுபநேரம் 9.02 - 10.32 மணிவரை
இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூராடம், உத்தராடம் வளவன்

**மேஷம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**மிதுனம்** — குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாடு காரிய வெற்றிதரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**கடகம்** — எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்** — உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள்.

**கன்னி** — யோகமான நாள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** — முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — பொது வாழ்வில் புகழ்கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**தனுசு** — கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மகரம்** — விட்டுப்போன உறவுகள் விரும்பி வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள்.

**கும்பம்** — கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்** — தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

அவநம்பிக்கையின் உச்சக்கட்டம் தான் தற்கொலை.

# இந்தியா போன்ற ஆபத்தான நிலை இலங்கைக்கும் ஏற்படலாம்

## வைத்தியர் ஜயருவன் எச்சரிக்கை

“(கொழும்பு)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் கொரோனாத் தொற்றாளர்கள் எங்குள்ளார்கள் என்பதனை உறுதியாகக் கூற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**”

இந்தத் தகவலை வைத்திய பரிசோதனை நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார். இவ்வாறான ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செய்யப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் அவதானமாக செயற்படவில்லை என்றால் எதிர்வரும் நாட்களில் இந்தியா போன்று இலங்கையிலும் நோயாளர்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அர்ப்பணிப்பு மேற்கொண்டமையினால் தன்னை அமைதியாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் அந்த பதவியை தான் ஏற்கமாட்டேன் என அவர் கூறியுள்ளார். எனினும் பதவியின்றி மக்களை காப்பாற்ற தன்னால் முடிந்தவற்றை செய்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

# கிரிக்கெட் அணி வீரர்கள் இருவர் இராணுவ மேஜர்களாக பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர்களான தினேஸ் சந்திமால் மற்றும் திசர பெரேரா ஆகியோர் இராணுவ மேஜர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் தன்னார்வபடையணியில் திசர பெரேரா மற்றும் தினேஸ் சந்திமால் ஆகியோர் இணைந்து கொண்டிருந்த நிலையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவினால் குறித்த இரண்டு கிரிக்கெட் நட்சத்திரங்களுக்குமான பதவி உயர்வு இலச்சினைகள் அணிவிக்கப்பட்டது.

மேஜர் தினேஸ் சந்திமால் இராணுவத் தளபாட படையணியையும் மேஜர் திசர பெரேரா கஜபா படையணியையும் தற்பொழுது பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இலங்கை இராணுவத்தின் 71 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவ அதிகாரிகள் 514 பேர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர். (நி-7)

# கியூபாவின் கருத்தை ஆதரித்து நடுநிலையை கைவிட்ட இலங்கை

(கொழும்பு)

இன, மத சிறுபான்மையினர் தொடர்பில் சீனாவினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கைகள் பற்றிய கியூபாவின் கருத்தை ஆதரித்தமையின் ஊடாக வெளியுறவுக்கொள்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடுநிலையை இலங்கை கைவிட்டிருக்கிறது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதுதொடர்பில், அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கின்றார்.

“இன, மத சிறுபான்மையினர் தொடர்பில் சீனாவினால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சின்ஜியாங் மற்றும் திபெத் கொள்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் கியூபாவினால் முன்வைக்கப்பட்ட கருத்தை ஆதரித்தமையின் ஊடாக இலங்கை அதன் வெளியுறவுக்கொள்கையில் கடைப்பிடித்து வந்த நடுநிலையைக் கைவிட்டிருக்கிறது” என்று அவர் அப்பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் சின்ஜியாங்கில் சீனாவினால் முன்னெடுக்கப்படும் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான




ஆதரவை வெளிப்படுத்தும் வகையிலான அறிக்கையை 45 நாடுகளின் சார்பில் கியூபா வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்

# எனது குரல் நசுக்கப்பட்டது

## பதவி நீக்கப்பட்ட மருத்துவர் கவலை



கொ (கொழும்பு) ரோனாவை தடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால் தனக்கு பரிசு கிடைத்ததாகவும் இதன் மூலம் தனது குரலை அடக்கியதாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அதிகமாக வேலை செய்தேன் என்பதே என் மீதுள்ள குற்றச்சாட்டாக உள்ளதாக உணர்கிறேன்.

ஊடகங்கள் வாயிலாக கருத்து வெளியிடக் கூடாது என்று எனக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் ஊடாக சில தனியார் நிறுவனங்கள் முன்வைத்த யோசனைகளை முற்றாக நிராகரிக்கிறேன். நான் மீண்டும் பதவியை ஏற்றுக்கொள்ள வில்லை.

பாராளுமன்றத்தில் அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்த கருத்து தவறானது. இவரது கருத்து எனக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் இதே போன்ற கருத்தை கூறியுள்ளார் என மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## மக்கள் பதற்றமடைய வேண்டாம்
## கொரோனா கொத்தணி குறைவடைகிறது

### சுதத் சமரவீர தகவல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து மக்கள் பதற்றமடைய தேவையில்லை என தொற்று நோயியல் பிரிவின் பிரதானி மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் நோய்த் தொற்றாளிகள் கொத்தணி தற்பொழுது குறைவடைந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், மக்கள் உரிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வைத்தியசாலை முறையில் நோயாளிகள் பதிவாகி வருகின்றனர் எனவும் சமூகத் தொற்றாக மாறுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் தொற்றாளிகள் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதனால் மக்கள்



இது குறித்து பீதியடைந்துள்ளதாகவும் எவ்வாறெனினும், நோய்த்தொற்று சமூகத்திற்கு பரவுவதனை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ரணிலின் புதிய வியூகம்
## முக்கிய பொறுப்பு சாகலவிடம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை அடுத்த கட்ட வெற்றியை நோக்கி நகர்த்த தேவையான திட்டங்களை உருவாக்கும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான உதவியை கலாநிதி கருணாசேன கொடித்துவக்கிடம் பெற்றுக் கொள்ளுமாறு சாகல ரத்நாயக்கவுக்கு அறிவித்துள்ளார். இதேவேளை கடந்த பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளராகவும் சாகல ரத்நாயக்கவையே கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## றிசாத்தின் சகோதரருக்கு வலுக்கும் எதிர்ப்பு;
## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரரான ரியாஜ் பதியுதீன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் 100 பேரினால் கையெழுத்திடப்பட்ட கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து கையளிக்கப்பட்டது.

2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு உதவியாக செயற்பட்ட சந்தேகத்தின் பேரில் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரரான ரியாஜ் பதியுதீன் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார்.

அவரது கைது தொடர்பில் வலுவான சாட்சிகள் காணப்பட்ட போதிலும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாது, எவ்வித சட்ட அனுமதியுமின்றி ரியாஜ் பதியுதீன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த தன்னிச்சையான செயற்பாடு தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பயங்கர வாதத்திற்கு துணையாக செயற்பட்ட ரியாஜ் பதியுதீனை மீண்டும் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளும் கட்சியின் 100இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட குழுவினர் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4)

# பரீட்சார்த்திகளின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த 7 ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

க.பொ.த உயர்தர மற்றும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியன நடைபெறும் தினங்களில் மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் சுமார் 7 ஆயிரம் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படவிருப்பதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, மாணவர்கள் தமது பரீட்சை அனுமதிப்பத்திரத்தை ஊரடங்கு நேர அனுமதிப் பத்திரமாகப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.



நாடளாவிய ரீதியில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவலுக்கான அச்சம் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட திகதிகளிலேயே க.பொ.த உயர்தரப்பரீட்சை மற்றும் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சை என்பன நடத்தப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்திருந்தது. இவற்றை உரிய சுகாதாரப்பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக நடத்துவது தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் கல்வியமைச்சில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில் உயர்தர மற்றும் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சைகள் நடத்தப்படவிருக்கின்றன. ஏனைய சந்தர்ப்பங்களை விடவும் இதுவிடயத்தில் பொலிஸாரின் உயர் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அந்தவகையில் பரீட்சை மத்திய நிலையங்கள், பரீட்சை தொடர்புபடுத்தல் நிலையங்கள் மற்றும் பரீட்சை வினாத்தாள்களை ஒன்றுசேர்க்கும் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்திலும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 7 ஆயிரம் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதேபோன்று கம்பஹா நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட 18 பொலிஸ் பிரிவுகளில் தற்போது ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கின்றது. அவ்வாறு ஊரடங்குச்சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில் விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் அப்பகுதியினூடாகப் பயணிக்கும் புகையிரதங்களை அங்குள்ள புகையிரத நிலையங்களில் நிறுத்துவதற்கு நாம் அனுமதி வழங்கியிருக்கவில்லை.

எனினும் பரீட்சைகள் நடைபெறும் தினங்களில் மாத்திரம் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள புகையிரத நிலையங்களில் புகையிரதத்தை நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பரீட்சை மத்திய நிலையங்களைக் கொண்ட வெளிமாவட்ட மாணவர்களுக்காக மாத்திரமே இவ்வனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், ஏனையோர் இதனைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

அதேபோன்று பரீட்சை நடைபெறும் திகதிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து ஊரடங்கு அமுலிலுள்ள பகுதிகளிலுள்ள பரீட்சை மத்திய நிலையங்களுக்கு மாணவர்களை ஏற்றிச்செல்வதற்காக அரச பேருந்துகள் விசேடமாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன், அதனை ஏனையோர் பயன்படுத்த முடியாது. அவ்வாறு மாணவர்களை அழைத்து வரும் போது பெற்றோர் அல்லது பாதுகாவலரில் ஒருவரை மாத்திரம் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு பிள்ளைகளை அழைத்துவந்த பெற்றோர்கள், வெளியில் காத்திருக்கும் போது முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயம் என்பதுடன் சமூக இடைவெளியைப் பேணுவதும் அவசியமாகும். பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் தாமதிக்காமல் உடனடியாக பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீடுகளுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம். பிள்ளைகளை மாத்திரம் அனுப்பி வைப்பவர்கள் அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவது கட்டாயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## சுதந்திர வர்த்தக வலயம் முழுமையாக முடக்கப்படாது

(கொழும்பு)

தற்போதைய கொவிட் தொற்று நிலைமையில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தை முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என இலங்கை முதலீட்டாளர்கள் சபை தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் கொரோனா தொற்றாளர் இனங்காணப்பட்ட தொழிற்சாலையை மாத்திரம் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கைத்தொழிற்சாலையின் ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் முடிவுகள் வரும் வரையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-7)

## மினுவாங்கொடவில் 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட பரிசோதனைகள்

(கொழும்பு)

மினுவாங்கொட கொவிட் - 19 கொத்தணியை அண்டிய பகுதிகளில் 16 ஆயிரத்து 400 பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் மூலம் இந்த கொத்தணியை அண்டிய 30 புதிய நோயாளிகள் பதிவாகியிருந்தனர்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய ஐந்து பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ள்து என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி நேற்று முன்தினம் மொத்தமாக 35 கொரோனா நோய்த்தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரையில் மொத்



தமாக 4523 பேர் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 3296 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாகவும் 1214 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுவரையில் இலங்கையில் சுமார் மூன்று லட்சத்து இருபதாயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் நிபுணத்துவ மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (நி-7)

## குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சலுகை

(கொழும்பு)

கொவிட் 19 தொற்று காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு, சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சலுகை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தொடர்ந்து தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால் அவர்களுக்கு சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார். (நி-7)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு சென்றவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட வேண்டும்

## முல்லை. மாவட்ட செயலர் உத்தரவு

(முல்லைத்தீவு)

கொழும்பு மாவட்டத்தின் கிரிபத்கொட பகுதியில், இளைஞர்சேவை மன்றத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக முல்லைத் தீவிலிருந்து சென்றவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்டச்செயலர் க.விமலநாதன் பிரதேசசெயலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை அன்று இடம்பெற்ற கொரோனாத் தொற்று விழிப்புணர்வு கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில்கலந்து கொள்வதற்காக ஆண்கள் அணி ஒன்று கடந்த 25 ம் திகதி கிரிபத்கொட பகுதிக்குச் சென்று, 27 ஆம் திகதி திரும்பியுள்ளது.

இப் போட்டியில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில், குறித்த போட்டியில் கலந்துகொள்ள முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து சென்றவர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் அவர்களுக்கு உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்டபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும் தெரிவித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(5-4)

# சுய தனிமைப்படுத்தலில் இரு குடும்பங்கள்

(நெளுக்குளம்)

பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இரு குடும்பங்கள் வவுனியா பூந்தோட்டம் சிறிநகரில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து புங்குடுதீவில் இடம்பெற்ற பிறந்த நாள் நிகழ்வொன்றில் கலந்து கொண்டார்.

இந் நிலையில் அந்த நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியாவை சேர்ந்த இரண்டு குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அவர்களிற்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் சுகாதார பிரிவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-4-299)



பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படும் பகுதியான வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தொற்று நீக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.நாடளாவிய ரீதியில் கோவிட் -19 தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் வவுனியாவில் அதனை கட்டுப்படுத்தும் முகமாக வன்னி இராணுவ தலைமையகத்தினால் தொற்று நீக்கும் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

# தரிப்பிடம் தவிர்ந்த வேறு இடங்களில் வாகனங்கள் நிறுத்த பொலிஸார் தடை

(நெளுக்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.



வவுனியா புதியபேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் அரச தனியார் பேருந்துகள் பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக உள்ள பகுதியில் தரித்து நின்று பயணிகளை ஏற்றுகின்றனர்.

இதனால் குறித்த பகுதியில் வாகன நெரிசலான நிலை ஏற்பட்டிருந்ததுடன், பல மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் இருக்கும் போது அதற்கு முன்பாக உள்ள பகுதியில் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிவந்தமை குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்தும் விசனங்கள் எழுந்துள்ளன.


இந்நிலையில் பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள 100மீற்றர் நீளமான பகுதியில் பேருந்துகள் உட்பட அனைத்து வாகனங்களையும் நிறுவனத்தில் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவித்தல் பலகையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வாகனங்களை நிறுத்துவதை தடை செய்யும் விதமாக போக்குவரத்துப்பொலிஸாரும் அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (5.4.299)

# காந்தீயம் வெளிவந்துள்ளது

(கிளிநொச்சி)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் உத்தியோகபூர்வ வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் ஒக்டோபர் -நவம்பர் மாத இதழ் மகாத்மா காந்தியடிகளின் 151 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. (5-4)

# பல லட்சம் பெறுமதியான கஞ்சா, மஞ்சள் மூடைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகள் மற்றும் மஞ்சள் கட்டி மூடைகளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

மன்னார்-வங்காலை கடற்கரையோர பகுதியில் பதுக்கி வைத்திருந்த ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதி களை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

புலனாய்வுத்துறையினரின் இரகசிய தகவல்களுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப் புரைக்கு அமைவாக மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் தலைமையில் சென்ற விசேட பொலிஸ் குழுவினர் குறித்த கடற்கரையோர பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 125 கிலோ 800 கிராம் எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை. மீட்கப்பட்ட கேரளக்கஞ்சா பொதிகள் ஒரு கோடி 25 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி மஞ்சள் கட்டி மூடைகளை நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளதோடு சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஸ தலைமையிலான பொலிஸ் குழுவினர் பருத்திப்பண்ணை பகுதியில் உள்ள வீட்டின் சமையல் அறையில் பதுக்கி வைத்திருந்த 154 கிலோ 500 கிராம் எடை கொண்ட மஞ்சள் கட்டி மூடைகளையும் 2250 மில்லி கிராம் கேரளக் கஞ்சாவினையும் மீட்டதோடு, சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் சுங்கத்திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட உள்ளதோடு,குறித்த நபர் தனிமைப் படுத்தப்பட்டும் உள்ளார்.

இதேவேளை வங்காலை நானாட்டான் பிரதான வீதி,நருவலிக்குளம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பின் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் 33 கிலோ 650 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் இரண்டு சந்தேக நபர்களை வங்காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் 36 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என பொலிஸார் தெரிவித்தனர். (285)



இலட்சியம் இருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மஞ்சள் இலையும் இஞ்சி இலையும் பொங்கல் பானையை அலங்கரிக்கட்டும்

மஞ்சளும் இஞ்சியும் தமிழர் வாழ்வில் முதன்மைமிக்க ஔடதங்கள்.

இதில் மஞ்சள் தமிழர்களின் வழிபாட்டிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

மஞ்சள் மாவை குழைத்து அதில் அறுகம் புல் சாத்தி அதனைப் பிள்ளையாராக ஆவாகணம் செய்து வழிபடுகின்ற நடைமுறை நம்மிடம் உண்டு.

இதற்கு மேலாக, திருமாங்கல்யதாரணத்தின்போது தாலியின் தகைமையை மஞ்சள் பெற்றுக் கொள்கிற அளவில் மஞ்சளின் மகிமை உணரப்படும்.

தமிழர் வாழ்வியலோடு மஞ்சள் இரண்டறக் கலந்தது என்பதற்கு அபரக்கிரியைகளின்போது மஞ்சள் மாவின் பயன்பாடு தக்க சாட்சியமாகும்.

கிரியை செய்யப்படும் இடத்தை சுத்தம் செய்வது தொடக்கம் அனைத்து அபரக் கிரியைகளிலும் மஞ்சள் மா பயன்படுத்தப்படுவதனூடு எங்கள் வாழ்வியலோடு மஞ்சள் இரண்டறக் கலந்தது என்பது உறுதி செய்யப் படும்.

இது மஞ்சள் பற்றியது என்றால், இஞ்சி எங்களின் உயிர் காக்கும் மருந்தாகும். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் இஞ்சி மருந்தாகப் பயன்படுகிறது.

இதனாலோ என்னவோ தைத்திருநாளில் நடைபெறும் சூரியப் பொங்கலின்போது, பொங்கல் பானையில் மஞ்சள் இலையும் இஞ்சி இலையும் சேர்த்துக் கட்டுகின்ற பண்பாட்டு மரபு இன்றுவரை நம்மிடம் தொடர்கிறது.

இந்தப் பண்பாட்டின் அடிப்படையில், நெல்லுக்கு இணையாக, முக்கனிகளுக்கு ஈடாக மஞ்சளும் இஞ்சியும் நம்மவர்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படுகிறதல்லவா?

என்ன செய்வது, எங்கள் விளைபொருளாக இருந்த மஞ்சளும் இஞ்சியும் இப்போது தைப்பொங்கல் பானையில் கட்டப்படுகின்ற இலைகளாக மட்டுமே நமக்குக் காட்சி தருகின்றன.

எனினும் இப்போது காலம் நமக்கொரு சந்தர்ப்பத்தை கட்டாயப்படுத்தலாகத் தந்துள்ளது.

அதில் இஞ்சி, மஞ்சள் செய்கையில் நாம் ஈடுபட்டு எங்களுக்குத் தேவையான உற்பத்தியைப் பெருக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எனவே அனைவரும் சிறு அள்விலேனும் மஞ்சள் மற்றும் இஞ்சிச் செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அதிலும் குறிப்பாக அரச, தனியார் அமைப்புக்களில் தொழில் புரிவோர் மஞ்சள், இஞ்சிச் செய்கையை வீட்டுத் தோட்டமாகச் செய்தால், உடல் ஆரோக்கியம் அதிகரிப்பதோடு வீட்டுத் தேவைக்கான மஞ்சளும் இஞ்சியும் வீட்டு வளவிலேயே கிடைப்பதாகவும் இருக்கும்.

ஆகையால் அடுத்த தைப்பொங்கலில் எங்கள் வீட்டில் வளருகின்ற இஞ்சியில் எடுத்த இலையும் மஞ்சளில் ஆய்ந்த இலையும் சேர்ந்து பொங்கல் பானையை அலங்கரித்து புதுப்பொலிவைத் தரட்டும்.

# அரசு இயலாமையை மறைப்பதற்காக கொரோனாவை பயன்படுத்துகின்றதா?

## எதிர்க்கட்சி சந்தேகம்

(கொழும்பு)

**அரசாங்கம் தனது இயலாமையை மறைப்பதற்காக கொரோனா வைரஸ் பரவலை பயன்படுத்தி வருகின்றதா? என்று சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலங்களில் இருந்த அரசாங்கங்கள் தங்கள்து இயலாமையை மறைப்பதற்காக யுத்தத்தையே பயன்படுத்தி வந்தன.

தற்போதைய அரசாங்கமும் அதன் இயலாமையை மறைப்பதற்காக கொரோனா வைரஸ் பரவலை பயன்படுத்தி வருகின்றதா? என்று சந்தேகம் எழுந்துள்ளது.

ஏன் என்றால் பொருளாதார வீழ்ச்சி தொடக்கம் அனைத்து சிக்கல்களுக்கும் அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலையே காரணம் காட்டி வருகின்றது.

எமது அயல் நாடான இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த வைரஸின் தாக்கம் எப்படியாவது எமது நாட்டுக்குள் வருவதற்கான வாய்ப்புள்ளது என்பதை உணர்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

எமது நாட்டில் கடல் மார்க்கமான கடத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது கொண்டுவரப்படும் போதைப் பொருள் மற்றும் மஞ்சள்தூள் உள்ளிட்ட பொருட்கள் அதிகளவில் இந்தியாவிலிருந்தே இந்நாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.

இதன்போது, வைரஸ் தொற்றுக்கான வாய்ப்பு ஏற்படுவதற்கு அதிகளவான வாய்ப்புள்ளது என்பதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இராணுவத்தினர் மாத்திரம் தனித்து செயற்படாது, சுகாதார பிரிவினரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு காலமும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள வைரஸ் பரவலின் இரண்டாம் அலை தொடர்பில் கவனம் செலுத்தும் போது, எங்கோ தவறு இடம் பெற்றுள்ளமை உணரக் கூடியதாக இருக்கின்றது.

அதனைக் கண்டறிந்து வைரஸ் தொற்றிலிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும். இதேவேளை, அரசாங்கம் தங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது என்று கூறிக்கொண்டு 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதிலே குறியாக இருக்கின்றது.

தற்போதுள்ள நிலைமையில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் நாட்டுக்கு தேவையா? அது சர்வாதிகார போக்கையே கொண்டு அமையப் பெற்றுள்ளது.

அதனால் மக்கள் மத்தியிலும் தற்போது 20 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு எதிராக எதிர்ப்பொலிகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் அரசாங்கம் அதனை மக்களிடமிருந்து மறைப்பதற்காகவா? கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான பேச்சுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது என்ற சந்தேகமும் எமக்கு எழுந்துள்ளது எனத் தெரிவித்தார். (ஜ-4)

## சான்றுப்பொருட்கள் எரிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நிறைவடைந்த வழக்குகளின் சான்றுப்பொருள்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று சனிக்கிழமை சான்றுப் பொருட்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன. கஞ்சா உள்ளிட்ட வழக்குகள் நிறைவடைந்த நிலையில் அவற்றின் சான்றுப் பொருட்களை அழிக்க மன்று உத்தரவிட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் ஜே. ஜெயரஞ்சனின் ஏற்பாட்டில் அவை எரியூட்டி அழிக்கப்பட்டன.(5-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகளே தேவையில்லை.- பிராங்க்ளின்

## மாரவில மீனவருக்கு கொரோனா; மீன்வளத் துறைமுகம் மூடப்படும்

(மாரவில)

மாரவில பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மீன்வள துறைமுகத்தை மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


கடந்த 8ஆம் திகதி குறித்த மீனவர், தொழிலுக்காக கடலுக்கு சென்றுள்ளார். இதன்போது. அவருடன் 5 மீனவர்கள் படகில் இருந்துள்ளனர்.

குறித்த மீனவருக்கு காய்ச்சல் அறிகுறி காணப்பட்டமையினால், ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது. அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என்ற பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


குறித்த பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு நேற்று வெளியிடப்பட்டபோதே, குறித்த மீனவருக்கு கொரோனா வைரஸ்தொற்றுள்ளமை அடை யாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-7)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நடக்க வேண்டிய வழியில் குழந்தையை பழக்கினால் வயதான பிறகு அந்த வழியிலிருந்து விலகாமலிருப்பான்.
- ஒரு சிறு குழந்தையைப் போலக் கடவுளின் ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழைய மாட்டான்.
- பொறாமையும் சச்சரவும் எங்கிருக்கிறதோ அங்கே குழப்பமும் சகலவிதத் தீச்செயல்களும் இருக்கின்றன.
- அறிவாளிகளோடு நடப்பவன் அறிவாளி ஆவான். முட்டாள்களின் தோழனோ அழிந்து போவான்.
- அசட்டுத்தனமான வீண்கேள்விகளைத் தவிர்த்துவிடு. அவை சச்சரவுகளையே பிறப்பிக்கின்றன.
- பாவம் செய்யாமல் கோபப்படுங்கள். உங்கள் கோபத்தின் மீது சூரியன் கீழே இறங்கி விடாதிருக்கட்டும்.
- கொலை செய்யாதே. களவு செய்யாதே. பொய்சாட்சி சொல்லாதே. வஞ்சனை செய்யாதே. உன் தந்தையையும் தாயையும் பெருமைப்படுத்து.

# டோனி பட்டிங்கில் ஏதோ தவறு நடக்கிறது அவரால் சரியாக ஆட முடியவில்லை



ஐ.பி.எல்.தொடரில் அண்மையில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதிய நிலையில் எளிதாக ஜெயிக்க வேண்டிய ஆட்டத்தை சென்னை அணி கோட்டை விட்டது.

சி.எஸ்.கேவில் டோனி, கேதார் இருவரும் மிக மோசமாக பட்டிங் செய்து விமர் சனங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் தற்போது டோனியின் பட்டிங் குறித்து முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், ஜாம்பவான்கள் விமர்சனங்களை வைத்து வருகிறார்கள். மேற்கு இந்திய தீவுகள் அணியின் முன்னாள் ஜாம்பவான் வீரர் பிரைன் லாரா டோனியின் பட்டிங்கை விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக லாரா பேசியதாவது.


டோனியின் பினிஷிங் ஆட்டங்கள் இப்போதெல்லாம் கேள்வி எழுப்புகிறது. அவர் தனக்கு விருப்பப்பட்ட பொஷிஷனில்தான் இறங்குகிறார்.

தனக்கு வசதியாக எந்த இடம் இருக்குமோ அங்குதான் பட்டிங் செய்கிறார் . ஆனாலும் அவரால் சரியாக பட்டிங் செய்ய முடியவில்லை.

ஆனால் டோனியிடம் சில விடயங்கள் சரியாக இல்லை. ஏதோ ஒரு தவறு நடக்கிறது. அதை அவர் சரி செய்ய வேண்டும் என கூறியுள்ளார். (ஜ-4)

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்

# இறுதிப் போட்டியில் நடால்-ஜோகோவிச்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிப்போட்டிக்கு ரபேல் நடால் மற்றும் நோவக் ஜோகோவிச் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த அரை இறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா), கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபானோஸ் சிட்சிபாஸை சந்தித்தார்.

இதில் ஜோகோவிச் 6-3, 6-2, 5-7, 4-6, 6-1 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டியில் ஜோகோவிச் ரபேல் நடாலை சந்தி க்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ராஜஸ்தானை வீழ்த்தியது டில்லி



ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 46 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டெல்லி கப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஷார்ஜாவில் நடைபெற்றது.

டொஸ் வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி டெல்லி அணியின் பிரித்வி ஷா, ஷிகர் தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

தவான் 5 ரன்னிலும், பிரித்விஷா 19 ரன்னிலும், ஷ்ரேயஸ் அய்யர் 22 ரன்னிலும், ரிஷப் பண்ட் 5 ரன்னிலும் அவுட் ஆகினர்.

மார்கஸ் ஸ்டாய்னிஸ் 39 ரன்களும், ஹெட்மையர் 24 பந்தில் 45 ரன்களும் அடிக்க டெல்லி 150 ரன்களை தாண்டும் வாய்ப்பை பெற்றது. அக்சர் பட்டேல் அதிரடியாக விளையாடி 8 பந்தில் 17 ரன்கள் அடித்தார்.

இறுதியில், டெல்லி அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 184 ரன்கள் எடுத்தது.

ராஜஸ்தான் அணியில் ஆர்ச்சர் 3 விக்கெட் எடுத்து அசத்தினார்.

இதையடுத்து, 185 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் ஓரளவு தாக்குப் பிடித்து 34 ரன்கள் அடித்து வெளியேறினார். ஸ்மித் 24 ரன்னில் ஆட்டமிழந்தார்.

டெல்லி அணியினர் துல்லியமாக பந்து வீசி அசத்தினர். இதனால் ராஜஸ்தான் அணியினர் ரன்கள் எடுக்கத் தவறினர்.

மற்ற ஆட்டக்காரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். ராகுல் டெவாட்டியா கடைசி வரை போராடினார். அவர் 38 ரன்னில் அவுட்டானார்.

இறுதியில், ராஜஸ்தான் அணி 138 ரன்களில் ஆல் அவுட்டானது. இதனால் 46 ரன்கள் வித்தியாசத்தில் டெல்லி அணி அபார வெற்றி பெற்றது.

டெல்லி அணி சார்பில் ரபாடா 3 விக்கெட்டும், அஷ்வின், ஸ்டாய்னிஸ் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். (ஜ-4)

# டோனியாகவே மாறிய தினேஷ் கார்த்திக்

## ஜடேஜா புகழாரம்



சென்னை அணிக்கெதிரான போட்டியில், தினேஷ் கார்த்திக்கின் ஆட்டத்திறனை பார்த்த போது, அவரிடம் டோனியைப் பார்த்தேன் என்று இந்திய அணியின் முன்னாள் வீரரான அஜய் ஜடேஜா கூறியுள்ளார்.

ஐ.பி.எல்.தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சென்னை அணிக்கெதிரான போட்டியில், கொல்கத்தா அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜெயிக்க வேண்டிய போட்டியை சென்னை அணி, அப்படியே கொல்கத்தாவிடம் கொடுத்து விட்டது.


இதற்கு முக்கிய காரணம் ஜாத்வ்வின் மந்தமான ஆட்டம், அவர் ஏன் இன்னும் அணியில் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில், இந்திய அணியின் முன்னாள் வீரரான அஜய் ஜடேஜா, கொல்கத்தா அணியின் தலைவரான தினேஷ் கார்த்திக் டோனி போன்று செயற்பட்டார் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், டோனி மற்ற அணிகளுக்கு என்ன செய்வாரோ, அதையே சென்னை அணிக்கு தினேஷ் கார்த்திக் செய்துவிட்டார் என்று புகழ்ந்துள்ளார்.

அதாவது, பேட் கம்மின்ஸை முன்கூட்டி பந்து வீச வைத்ததால் சென்னை அணி ஓட்டங்களை குவிக்கத் தடுமாறியது.

அதேபோல், சுனில் நரைன் டெத் ஓவர்களில் சிறப்பாகப் பந்துவீசி வோட்சன் விக்கெட்டைகைப்பற்றி சென்னை அணிக்கு நெருக்கடி கொடுத்தார். இது ஆட்டத்தில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. தினேஷ் கார்த்திக் இடத்தில் டோனியை பார்த்தேன் என்று கூறியுள்ளார். (ஜ-4)

# 2020 ஐ.பி.எல். தொடரிலிருந்து அமெரிக்க வேகப்பந்து வீச்சாளர் விலகல்



ஐ.பி.எல். அணியால் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதல் அமெரிக்க கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வேகப்பந்து வீச்சாளர் அலி கான் 2020 ஐ.பி.எல்.தொடரிலிருந்து விலகியுள்ளார்.

காயம்காரணமாக அலிகான் 2020 ஐ.பி.எல்.தொடரிலிருந்து விலகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் இன் ஊடக ஆலோசகர் அவரது காயத்தை உறுதிப் படுத்தினார். ஆனால் அவரது காயம் குறித்து எந்த விபரங்களையும் வழங்கவில்லை.

கொல்கத்தா அணி காயமடைந்த பந்து வீச்சாளர் ஹாரி கர்னிக்கு பதிலாக அலி கானை ஒப்பந்தம் செய்தது.

துரதிர்ஷ்டவசமாக, கான் காயமடைந்தார். மேலும் ஐ.பி.எல். 2020 சீசனின் எஞ்சிய போட்டிகளில் அவர் விளையாடமாட்டார் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நடந்த கரீபியன் பிரீமியர் லீக்கில் சம்பியன் பட்டத்தை வென்ற டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியில் 29 வயதான அலி கான் இடம் பெற்றிருந்தார். (ஜ-4)

## பல்கலை மாணவி...

கழக மாணவி ஒருவர் கொழும்பில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்த யாழ்.இணுவில் பகுதியைச் சேர்ந்த களனிப் பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவி செல்வி யதீசா ஸ்ரீதர் (வயது - 20) திடீரென சுகயீனமுற்று உயிரிழந்துள்ளார்.

கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். (ம-3)

## வவுனியாவில்...

தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பிறிதொரு நபருடன் நேற்றுக் காலை 7 மணியளவில் மணியர் குளம் பகுதியில் அமைந்துள்ள குளத்தில் மீன் பிடிக்க சென்றுள்ளார்.

இந்நிலையில் மீன்பிடித்து கொண்டிருந்தவரை காணாத அவரது நண்பர் தேடிச் சென்று பார்த்தபோது அவர் குளத்தில் சடலமாக கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவத்தில் பூவரசங்குளம் நித்தியநகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கறுப்பையா செல்வராசா (வயது - 50) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

### மெகா பவர்

திகதி 10/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0638
வெற்றி எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 26 | 34 38 41 50

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2020/10/10 | 1542 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கங்கள் 23 30 55 56

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2020/10/10
சீட்டிழுப்பு இலக்கம் 4271
ஆங்கில எழுத்து M | வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 9 7 3 2 3

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 10-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2566
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 02 22 47 68

தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 10-10-2020 | சீட்டிழுப்பு இலக்கம் 1062
ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் 2 3 3 4 5 2

தேசிய லொத்தர் சபை

## விபரீத முடிவெடு...

கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த முத்துக்குமார் பகீரதன் (வயது - 46) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 4ஆம் திகதி ஒரு வகை நச்சு திரவத்தினை உட்கொண்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மரணம் தொடர்பிலான விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## இளம் குடும்பஸ்...

நுணாவில் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் பிரான்ஸில் உயரமான இடத்தில் இருந்து தவறிவீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் குடும்பத்துடன் வசித்து வந்த குறித்த குடும்பஸ்தர் தேவை நிமிர்த்தம் வெளியில் சென்ற சமயம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

இச் சம்பத்தில் யாழ்.கைதடி நுணாவில் பகுதியைச் சேர்ந்த கதிரவேலு சந்திரன் (வயது - 38 ) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார். (ம-3,60)

## வடமராட்சி...

குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கட்டாரில் திடீரென சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

கட்டாரில் தொழில் புரிந்து வந்த குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் திடீரென சுகவீனமுற்ற நிலையில் அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பத்தில் அச்சுவேலியை சொந்த இடமாக கொண்டவரும் வடமராட்சி கரவெட்டி கன்பொல்லைப் பகுதியில் திருமணம் செய்து ஒரு பிள்ளையின் தந்தையான கனகலிங்கம் கலைச்செல்வன் (வயது - 38 ) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார்.

சடலத்தை இலங்கை கொண்டு வருவதற்கு குடும்பத்தினர் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## மருந்து வில்லை...

மாணவி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தொலைபேசியை கேட்டபோது தர மறுத்ததால் குறித்த மாணவி விபரீத முடிவெடுத்ததாக கூறப்படுகின்றது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முசுரம்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருந்து வில்லைகள் அருந்தியநிலையில் குறித்த மாணவி தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோதும் நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மட்டக்களப்பு தம்மலகாமம் செங்கலடியைச் சேர்ந்த சந்திரசேகரன் பிரியா (வயது - 15). இவர் உறவினர் வீடான தருமபுரம், முசுரம்பிட்டி பகுதியில் வசித்து வந்த நிலையில் தருமபுரம் மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,316)

## 105 பேருக்கு...

யில் பணிபுரிபவர்கள் எனவும் ஏனைய 103 பேரும் குறித்த தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை மினுவாங்கொட கோவிட் - 19 தொற்று கொத்தணியில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 188ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நான்காயிரத்து 628ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து இதுவரை மூவாயிரத்து 306 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இன்னும் ஆயிரத்து 307 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 13 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அச்ச...

பணிகளை நிறைவு செய்துள்ளன. மிகுந்த அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியால், பரீட்சையை இன்று வெற்றிகரமாக நடத்த முடியும்.

எனவே அச்சமின்றி பிள்ளைகளை பரீட்சைக்கு அனுப்புங்கள்"

இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை மாலபே யில் உள்ள ராகுல பாலிக வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மையத்தை கல்வி அமைச்சர் நேரில் ஆய்வு செய்தார்.

அதன் போதே அவர் ஊடகங்களிடம் இதனைக் கூறினார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்மேலும் தெரிவித்ததாவது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நடத்துவதில் நாடு முழுவதும் அனைவரிடமும் ஆர்வம் இருந்தது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அதிக நம்பிக்கை இருந்தது. பரீட்சையை ஒத்திவைப்பது அந்தப் பிள்ளைகளின் மனஉறுதியை முற்றிலுமாக உடைக்கும்.

எனவே சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, அந்தந்த அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பொது அதிகாரிகளின் அர்ப்பணிப்புடன் இந்த வேலையை நாங்கள் திட்டமிட முடிந்தது.

தற்போதைய சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் ஒரு பரீட்சையை நடத்துவது அரசுக்குக் கடுமையான சவாலாகும்.

ஆனால் இந்த பணியை அனைத்து சுகாதார விதிமுறைகளுக்கும் இணங்கவும், பொதுப் பாதுகாப்பில் விட்டுக் கொடுப்பின்றியும் பரீட்சையை ஏற்பாடு செய்ய முடிந்தது என்றார். (ம-3)

## மன்னாரில் 5...

மைப்படுத்தப்பட்டவர்களுக்கே கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 210 பேருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 5 பேருக்கு மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏனைய அனைவருக்கும் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3,18,285)

## 20 தொடர்பான...

சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இம்மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

### அத கோடிபதி ADA KOTIPATHI

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1067
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.10.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 77,170,770/-
SEASON
வெற்றி இலக்கங்கள் 09 46 66 71 | ஆங்கில எழுத்து B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7741
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 575
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.10
சீட்டிழுப்பு இல. : 3397
வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,000,000/-
வெற்றி இலக்கங்கள் 06 | 16 | 24 | 55 | ஆங்கில எழுத்து K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 5728
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம் — உத்தியோகபூர்வ முடிவுகள்

| வெற்றி வாரம் | திகதி | வர்ணம் |
| --- | --- | --- |
| 374 | 10.10.2020 | சிவப்பு |

ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 15 53 68 | விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,842,736
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 10/10/2020 | வெற்றி வாரம் 2948
சுப்பர் ஜக்பொட் ரூ. 27,48,890
வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 15 17 31 51 | கடகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 4311
ரூ.100 பரிசுக்குரிய 824
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,888,360

### SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1241 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 10.10.2020 | தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 16 50 60 67
5,31,77,637.20
SUPER 500 விசேட இலக்கம் 2 0 0 0
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

# கொரோனாவின் 2ஆம் அலையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை

## பாலித ரங்கே பண்டார குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்திய அரசாங்கம், இரண்டாம் அலையை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்கள் எதனையும் செய்யவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அதன் விளைவையே தற்போது மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

குறித்த ஊடக சந்திப்பில் பாலித ரங்கே பண்டார மேலும் கூறியுள்ளதாவது,

"உலகளாவிய ரீதியில் கோவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலையொன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், அதன் விளைவாக இலங்கையும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம் என்றும் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்திருந்தார்.

அது மாத்திமன்றி முகக்கவசங்களையும் செயற்கை சுவாசக்கருவிகளையும் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்தும் ஐ.டி.எச்.வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலதிகமாக ஒரு பிரிவை ஸ்தாபிப்பது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் அவர் கூறிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியதா? என்பது தற்போது மிகமுக்கிய கேள்வியாக மாறியிருக்கிறது.

ஏனென்றால் எமது நாடு கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலைக்கு முகங்கொடுத்தபோது அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப்பிரிவுகள் ஒன்றிணைந்து செயலாற்றின.

அதில் அடைந்துகொண்ட வெற்றியைப் பயன்படுத்தி, நாட்டுமக்கள் மத்தியிலும் சர்வதேசத்தின் மத்தியிலும் அரசாங்கம் தமது பெருமையைப் பறைசாற்ற முயற்சித்ததே தவிர, வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படும் பட்சத்தில் அதனைக் கையாள்வதற்கான தயார்ப்படுத்தலைச் செய்யவில்லை என்பதை தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைவரங்களின் ஊடாகப் புரிந்துகொள்ள முடிகின்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# மறு அறிவித்தல் வரை

# கல்வியியற் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

மாணவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டதை அடுத்து கல்வியியற் கல்லூரி மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி - கஹவத்த வெல்லந்துர பகுதியில் அமைந்துள்ள ருவன்புர கல்வியியற் கல்லூரியே மூடப்பட்டதாகும்.

இந்த கல்லூரியில் கற்கும் சுமார் 100 வரையான மாணவர்களுக்கு திடீரென ஏற்பட்ட நோய் காரணமாகவே மேற்கண்ட முடிவை எடுத்துள்ளதாக கொடக்காவெல சுகாதார. சேவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் அவர்களுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் மாணவர்கள் உட்கொண்ட உணவு ஒவ்வாமை காரணமாகவே அவர்களுக்கு தொண்டை கரைப்பு போன்ற நோய் அறிகுறி தென்படுவதாக அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ம-03)

## சபாநாயகர்...

சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 39 மனுக்கள் மற்றும் 7 எதிர்மனுக்கள் குறித்து ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழாம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இதையடுத்து, உயர் நீதிமன்றம் தமது முடிவை,சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தில் உள்ள சபாநாயகர் செயலகத்துக்கு உயர்நீதிமன்றத்தின் முடிவு அடங்கிய கடிதம், கிடைத்திருப்பதாகவும், திங்கட்கிழமை அதனை திறந்துப் பார்க்கவுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கொழும்பு...

தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் மூவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதனையடுத்து, இரண்டு நோயாளர் பிரிவுகள் மற்றும் சிகிச்சை பிரிவு ஆகியன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## சிறுவர் வைத்திய...

தியசாலையில் தாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் 10 மாத குழந்தைக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையில் உள்ள அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் தாதிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)

## இலங்கையின்...

சேர்ந்த அதிகாரிகளே அவரிடம் இந்த வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர்

மேலும் இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழ் மக்களே என கூறிய கருத்து தொடர்பில் விசாரணைகளை பொலிஸ் குற்றவியல் விசாரணைப் பிரிவு முன்னெடுத்துள்ளது.

யாழ்.நல்லூர் கோவில் வீதியில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் வைத்தே இந்த விசாரணை இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை 4.00 மணியளவில் ஆரம் பமான விசாரணைகள் நீண்ட நேரம் தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலுக்கு முன்னரும் சி.ஐ.டியினர் இதேபோன்ற விசாரணை ஒன்றை விக்னேஸ்வரனிடம் நடத்தியிருந்தா ர்கள்.

தமிழ் மக்கள்தான் இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள் என்ற கருத்தில் அவர் நிகழ்த்திய உரை ஒன்று தொடர்பாகவே இந்த விசாரணை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## பொது வாக்...

உயர் நீதிமன்றின் வியாக்கியானம் வரும் 20ஆம் திகதி பாராளுமன்றில் வெளியிடப்படும் என்று சபாநாயகரால் அறிவிக்கப்பட்ட நிலையில் இணையத்தளங்களில் கசியவிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஊடாக மேற்படி தகவல் வந்துள்ளது என்று அரசியலமைப்புச் சட்டவாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

உயர் நீதிமன்றின் இந்த அறிவிப்பு ஏமாற்றமளிப்பதாக அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20ஆவது திருத்தச் சட்டவரைவு குறித்து உயர் நீதிமன்றத்தின் தீர்மானமாக இருக்கும் ஒரு ஆவணம் இணையத்தில் கிடைக்கிறது.

அரசியல் கட்சிகள், மனித உரிமை ஆர்வலர்கள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் ஏனையோர் தாக்கல் செய்த 39 மனுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் உள்ளடக்கிய இந்த தீர்மானம், பாராளுமன்ற சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அலுவலகத்திற்கு வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டது.

சபாநாயகர் தனது அடுத்த அமர்வில் ஒக்டோபர் 20ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு இந்த தீர்மானத்தை அறிவிக்கவிருந்தார். மேலும் கசியவிடப்பட்டுள்ள ஆவணம் குறித்து பாராளுமன்ற வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் அது உண்மையான ஆவணம் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தமாட்டார்கள்.

அடிப்படையில் இந்த ஆவணம் "உண்மையானது என்று தோன்றுகிறது" என்று சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

"உயர் நீதிமன்றின் தீர்மானம் ஏமாற்றமளிக்கிறது. அவர்களில் உயர் நீதிமன்றம் பொது வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் பெற அரசைக் கட்டாயப்படுத்தும் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் இந்த ஆவணத்தின்படி, 20ஆவது திருத்தச் சட்டவரைவில் செய்யப்பட்ட பெரும்பாலான திட்டங்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் ஒப்புதல் அளிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது" என்று அரசியலமைப்புச் சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-03)


**மணமகள் தேவை**

1981, யாழ். இந்து
கௌரவ குடும்பம், மிருகசீரிடம்,
3 இல் சூ, செவ் 10 இல்.
கிரகபாவம் 20
தொழில் - கடை
( உதிரிப்பாக விற்பனையாளர் )
(4217)
தொடர்பு : 021 221 6201

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம்
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-308)

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பம்
08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244
(C-308)

**வேலை வாய்ப்பு**

விளம்பரத்துறையில் துண்டுப்பிரசுரம் விநியோகம் மற்றும் பனர் கட்டுதல் போன்ற வேலைகள் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
நாள் சம்பளம் 1000/=
(30 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
(C-308)
0768226244

**காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நவக்கிரி
பாடசாலை முன்பாக
வங்கி வீதியில், 14 பரப்புக்
காணி உள்ளது.
2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
1 பரப்பு பின்பகுதி 5 இலட்சம் ரூபாயும்.
முன்பகுதி 6 இலட்சம் ரூபாயும்.
(நிலாவரை கிணற்றுப் பகுதியில் இருந்து
1 1/2 கிலோ மீற்றர் தூரத்தில்)
தொடர்பு : 077 805 1655

யாழ்ப்பாணம், கொட்டடி
சீனிவாசகம் வீதியில்
2 பரப்புக் காணி உள்ளது.
(4222)
தொடர்பு : 077 190 4814

**அமெரிக்கா லொத்தர் விசா**

2021ம் ஆண்டுக்கான விசா பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
விசா மற்றும் பொதிகள் சேவை
LANKA CARGO WORLDWIDE EXPRESS
315, Kasthuriyar Veethy, Jaffna.
(4391)
Tel : 076 485 4092

**மணமகள் தேவை**

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும்.
(4204)
Jeyaratnam1988@gmail.com 077 219 4331


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 279

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 11.10.2020 தொலைபேசி : 021 222 3378



# 4 கோடியை நெருங்கும் கொரோனாத் தொற்று



# பிரான்ஸை நடுங்கவைத்த கொடூரக் கொலைகள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பார்த்தியளோ! இதற்கு முந்தின ஆலடி மாநாட்டில மாஸ்க் அணியுங்க என்று வாத்தியார் சொன்னவரல்லோ. இப்ப எல்லோரும் மாஸ்க் அணிய வேண்டியதாய்ப் போச்சுது. ஆலடியில மூப்பர் தொடக்கவுரை ஆற்றினார்.

உண்மைதான்.கம்பஹாவில ஏற்பட்ட கொரோனா நாடு முழுவதையும் ஆட்டிப் படைக்குது. மூப்பரின் உரையை கங்காணி கார்த்திகேயன் வழிமொழிந்தார்.

விதானையார்: என்னதான் இருந்தாலும் எங்கட வடபகுதி புண்ணிய பூமிதான்.

சிறாப்பர்: இதென்ன சொல்லுறியள் விதானையார்.

விதானையார்: எங்கட வடபகுதியில சமூகத் தொற்று என்பது ஏதோவொரு வகையில இல்லா மல் போகுது. தாவடியில முதலாவது தொற்று ஏற்பட்டாலும் அவரில இருந்து மற்றவர்களுக்குத் தொற்று ஏற்படல்ல.

அதுபோல புங்குடுதீவு பெண்ணுக்கு கம்பஹாவில கொரோனா ஏற்பட்டு அவர் இங்க வந்திருந்தாலும் அவரில் இருந்து மற்றவர்களுக்குத் தொற்று ஏற்பட்டதான பதிவுகள் இதுவரை இல்லை.

சாத்திரியார்: ஏதோ எங்கட சனங்கள் என்ன கஷ்டம் இருந்தாலும் கடவுளை நினைக்காமல் இருக்கமாட்டினம். இந்தப் பெரிய யுத்தம் நடந்த காலத்திலும் முருகன் காப்பாற்றுவார், மாதா கைவிடமாட்டார் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறதே அதுதான் எங்கட ஆத்மபலம்.

பண்டிதர்: அப்ப சாத்தியார். உலக நாடுகளில ஏனைய மக்கள் கடவுளைக் கும்பிடுறதில்லை எண்டு சொல்லுறியளோ.

சாத்திரியார்: பண்டிதர் ஐயா, அப்படி நான் சொல்லல்ல. உலகத்தில பெரும்பாலான மக்கள் தங்கட மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில வழிபாட்டுத் தலங்களுக்குப் போகினம்.



## கொரோனா சமூகத்தொற்று வடபகுதியில குறைவுதான்

அதைவிட, அவையின்ர மத அமைப்புக்கள் விதிக்கின்ற கட்டுப்பாடுகளும் அவையள வழிபாட்டு இடங்களுக்கு வரவேண்டும் எண்டு கட்டாயப் படுத்துது.

ஆனால் எங்களிட்ட அப்படி ஒரு கட்டுப்பாடும் இல்லை. அப்படியிருந்தும் ஒவ்வொருவரும் தாங்களாக நினைத்து எங்களை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் எங்களைக் காப்பாற்றுவான். பாவம்-புண்ணியம், நரகம்- மோட்சம் என்றெல்லாம் இருக்கிறது எண்ட நினைப்போட கடவுளை வழிபடுகினம் என்பதைத் தான் சொன்னனான்.

விதானையார்: சாத்திரியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. கைதடிப் பிள்ளையார், வல்லைவெளி விநாயகர், முறிகண்டியான் எனப் பயணவழியில ஒருக்கா இறங்கிக் கும்பிடாவிட்டால், எங்கட மனம் நிம்மதியடையாது. பயணத்தில எவ்வளவு அவசரம் இருந்தாலும் முறிகண்டியானிட்ட இறங்காவிட்டால் அன்று முழுக்க நிம்மதி இராது என்கிற அளவில எங்களிட்ட கடவுள் நம்பிக்கை இருக்குது.

(இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்)

கங்காணி: என்ன இருந்தாலும் இப்ப ஏ-9 வீதியில செல்கிற வாகனங்கள் முறிகண்டிப் பிள்ளையாரிட்ட நிறுத்தாமலல்லோ போகினம்.

வாத்தியார்: காலாகாலமான நம்பிக்கை; முறிகண்டியானை ஒருக்காப் பார்த்திட்டுப் பயணத்தைத் தொடர்வது.

கடவுள் நம்பிக்கைகள் குறையக் குறைய ஆபத்துக்களும் அதிகமாகும் என்பதுதான் எனக்குத் தெரிந்தது.

மூப்பர்: அதுசரி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கலைப்பீட மாணவர்கள் அடிதடிப்பட்டவியள் எண்டு கேள்விப் பட்டன். என்ன மாதிரியாக நிலைமை இருக்குது.

பண்டிதர்: அதைக் கதைத்தால் கனக்கக் கதைக்க வேணும். பரீட்சை வினாத்தாள் விடையோட வைபர்களில அனுப்பபப்பட்டது முதல் நுண்கலையில பரீட்சை எழுதத் தேவையில்லை என்று மாணவனுக்குக் கூறியது வரையான அத்தனை குற்றச்சாட்டுக்களையும் போஸ்மோட்டம் செய்ய வேணும். அப்படிச் செய்ய வெளிக்கிட்டால், மன்னார் புதைகுழி மாதிரித் தான் நீண்டு செல்லும். ஆகையால அதனை அப்படியே விட்டிடுவம்.

விதானையார்: நாட்டு நிலைமை தொடர்பில இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விடுக்கிற அறிக்கைகளைப் பார்க்கும் போது அதற்குள்ள புத்திஜீவிகளின்ர கடமை பளிச்சிடுகுது. ஆனால் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களில ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் அது விடயத்தில மௌனமாகத்தான் இருக்கினம்.

சிறாப்பர்: விதானையார் சொல்லுறது உண்மைதான். 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில அண்மையில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட விடுத்த அறிக்கையைப் பார்த்தன்.

அது காலத்தின் தேவை. ஒரு பேராசிரியரின் கடமை. பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் தாங்கள் சார்ந்த மக்கள் சமூகத்தின் நன்மைக்கான கருத்துக்களைத் துணிந்து வெளியிட வேணும்.

வாத்தியார்: அப்படிச் செய்யவேண்டும் என்பதற்காகத்தானே பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு நிறைந்த சம்பளமும் இதர கொடுப்பனவுகளும் நேர ஒதுக்கீடுகளும் கொடுக்கப்படுகுது.

கங்காணி: கிடைக்கிறவற்றை எங்களுக்கான கொடை எண்டு நினைக்கிறதும் அது எங்களுக்கான சமூகப் பொறுப்பு எனக் கருதுவதும் அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

இதில மனச்சாட்சியைத் தவிர வேறு எதுவும் வேலை செய்யாது. கங்காணி இவ்வாறு கூறியதும் மீண்டும் ஆலடியில் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைத்து, எழுமின்! விழிமின்! எண்ணிய கருமம் நிறைவேறும் வரை உழைமின்! என்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# வாள்வெட்டுக் குழுக்கள்; மறைந்திருந்து இயக்கும் மர்மம் என்ன?



ஒருபுறம் வேடன். மறுபுறம் நாகம். இரண்டிற்கும் நடுவே அழகிய கலைமான் என்பது அந்தக் காலத்துச் சினிமாப் பாடல்.

அந்தப் பாடல் ஒரு கதாபாத்திரத்தின் அவலத்தை சித்திரிப்பதற்கானது.

ஆனால் யதார்த்தத்தில் வடபுலத்துத் தமிழர்களின் நிலைமையை அந்தச் சினிமாப் பாடல் மிகத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

ஆம், வடபுலத்துத் தமிழ் மக்கள் அழகிய கலைமான்கள் போல ஏங்கி நிற்கின்றனர். பாடலில் வேடனும் நாகமும் கலைமானை அச்சுறுத்தியதெனில், எங்களை கொரோனாவும் வாள்வெட்டுக் குழுவும் அச்சுறுத்தி வருகிறது.

இதில் கொரோனா நாடு தழுவிய- உலகம் தழுவிய பிரச்சினை என்றால், வாள் வெட்டுக்குழு என்பது வடபுலத்திற்கு மட்டுமானது.

வாள்வெட்டுக் குழு எங்கிருக்கிறது? அதில் அங்கம் பெற்றிருப்பவர்கள் யாவர்? அதன் தலைவர் யார்? அதை இயக்குவது தனிநபரா? அல்லது அமைப்பா? என்ற கேள்விகளுக்கு இதுவரை எவரிடமும் பதிலில்லை.

ஆனால் வாள்வெட்டுக்குழுவில் இருப்பவர்கள் எங்கள் பிள்ளைகள்- தமிழ் இளைஞர்கள் என்பது மட்டும் தெரிந்த விடை.

பொதுவில் வாள்வெட்டுக் குழுக்களை படைத் தரப்பினரே இயக்குகின்றனர் என்பதுதான் தமிழ் மக்களின் அபிப்பிராயம்.

இதில் இருக்கக்கூடிய உண்மைகள் பற்றி நமக்கு எதுவும் தெரியாதாயினும் வாள்வெட்டுக் குழுக்களைப் படைத்தரப்பினரே இயக்குகின்றனர் எனத் தமிழ் மக்கள் நினைப்பதையேனும் படைத்தரப்பும் அரசும் அறிந்திருக்க வேண்டும் என்பதுதான் நம் விருப்பம்.

இங்கு வாள்வெட்டுக் குழுக்களின் பின்னணியில் படையினர் இருக்கின்றனர் எனத் தமிழ்மக்கள் நம்புவதற்கு வலுவான காரணம் உண்டா? என்றால் ஆம் என்பதுதான் பதில்.

இதை நாம் கூறும்போது வாள்வெட்டுக் குழுக்களுக் கும் படைத்தரப்புக்கும் எந் த் தொடர்பும் இல்லை என்றால்,

இதுவரை வாள்வெட்டுக் குழுக்களை அடக்கமுடியாமல் போனது ஏன்?

வாள்வெட்டுக் குழுக்கள் மோட்டார் சைக்கிள்களில் பவனியாகச் செல்லும்போது, அந்த இடங்களில் பொலிஸாரோ, படையினரோ பிரசன்னமாகாமல் இருப்பது எங்ஙனம்?

வடபகுதியில் இருக்கக்கூடிய வாள்வெட்டுக் குழுக்கள் போல தென்பகுதியிலும் வாள்வெட்டுக் குழுக்கள் இருக்கின்றனவா? அவ்வாறு இல்லையென்றால், வாள்வெட்டு தமிழர்களுக்கு மட்டும் உரிய கலாசாரமா? என்றவாறான கேள்விக்கணைகள் ஏவப்படும்.

ஆக, இதை நாம் கூறும் போது வாள்வெட்டுக் குழுக்களின் பிரசவம் வடபகுதியில் இயங்கும் சில லீசிங் கம்பனிகளினுடையது என்றும் லீசிங் கம்பனிகள் தம்மிடம் கடன் அடிப்படையில் வாகனங்களைப் பெற்றவர்கள் உரிய தவணையில் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்காகச் சண்டித்தனக் குழுவாக வாள்வெட்டுக் குழுக்களை இயக்கின என்றும்,

எனினும்அவை இப் போது வெறொரு திசையில் இயங்கத் தலைப்பட்டுள்ள தென்றும்கூறுகின்றவர்களும் இருக்கவே செய்வர்.

இதுதான் நிலைமை என்றால், அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் நபர் ஒருவர் தெரிவித்த தகவலில்; பிரான்ஸில் உள்ள ஒருவரே தம்மை இயக்குவதாகவும் அவரின் உத்தரவுக்கமையவே வாள்வெட்டுக்குழு தனது கட மையைச் செய்வதாகவும் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

இந்த வாக்குமூலம் உண்மையானதா? அல்லது சோடிக்கப்பட்டதா? என்பது கண்டறியப்படவேண்டும்.

எனினும் பிரான்ஸில் இருக்கும் ஒருவரே வாள்வெட்டுக் குழுவை இயக்குவதாக இருந்தால், நிலைமை மிக மோசமாக அமையும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எது எவ்வாறாயினும் இருபத்தொரு வயது தொடக்கம் இருபத்து மூன்று வயதுக்கிடைப்பட்டவர்களே வாள்வெட்டுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர் என்பதும்

வடபுலத்தில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் கற்று வெளியேறியவர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்ற தகவல்களும் மிகப் பெரும் அதிர்ச்சிக்குரியவை.

ஆக, நம் மத்தியில் பேசுபடு பொருளாகியுள்ள வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசங்களைக் கடந்து, எங்கள் இளம் சமூகத்தை நல்வழிப்படுத்த ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூக மும் முன்வர வேண்டும் என்பது தான் இங்கு முக்கியமான விடயம்.

**திருநீலகண்டன்**

## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

### மோர்



பாட்டி பசுவில் பால் கறந்தாள்-அந்தப்
பாலைக் காய்ச்சி உறையிட்டாள்
பாலைக் காய்ச்சி உறையிட்டாள்

இட்ட பாலும் தயிராச்சு-பின்பு
எடுத்து மத்தை அதில் வைத்து
எடுத்து மத்தை அதில் வைத்து

சில சில என்று மோர் கடைந்தாள்-அங்கே
சிதறிப் பரவுது வெண்ணெய் எல்லாம்
சிதறிப் பரவுது வெண்ணெய் எல்லாம்

சிதறிய வெண்ணெயைக் கைவைத்து-நன்றாய்
திரட்டி எடுத்தாள் திரளாக
திரட்டி எடுத்தாள் திரளாக

வெண்ணெயை உருக்க நெய்யாச்சு-பின்பு
வேண்டிய மோரைக் குடியென்றாள்
வேண்டிய மோரைக் குடியென்றாள்

மொர மொர வென்று புளித்தது மோர்-நான்
மொட மொட என்று குடித்தேனே
மொட மொட என்று குடித்தேனே

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்



# சிறுவர் அரங்கம்

## மூலிகைகளின் அரும் பயன்கள்



**கருஞ்சீரகம்**

குழந்தைகள் தலையில் ஏற்படும் மண்டைக் கரப்பான் புண்ணை ஆற்றும். வயிற்றுப் பொருமல், மார்பு வலி, இருமல், வாந்தி, வீக்கம், கண்ணோய், சிரங்கு முதலிய பிணிகளுக்கும் நல்லது.



**சதகுப்பை**

நுரையீரல், ஈரல், இரப்பை ஆகிய உறுப் புகளில் தோன்றும் எந்தக் கோளாறையும் குணமாக்கும் இயல்பைக் கொண்டது.இது ஆசனக் கடுப்பு , சூலை நோய் போன்றவற்றிற்கும் நலமளிக்கும். வெப்ப உடம்பு உடையவர்க ளுக்கு இது ஆகாது.



**லவங்கப்பட்டை**

லவங்கத்தைப் பொடி யாக்கி, பல் வலியுள்ள ஈறுகளில் வைத்து அடக்கிக் கொண்டு உமிழ்நீரை கீழே உமி ழ்ந்து கொண்டிருந்தால் கடுமையான பல்வலி அடங்கும். வயிற்றுக் கடுப்பு, தொண்டைப் புண், பேதி, தலைவலி போன்றவற்றையும் இது குணப்படுத்தும்.

**ஓமம்**

கபத்தையும் வாதத் தையும் குறைக்கும் இய ல்பு படைத்தது இது. குடலிரைச்சல், சீதசுரம், செரியா மாந்தம், சுவாச காசம், சீதபேதி, ஆசனக் கடுப்பு, தந்த ரோகம் முத லியவற்றுக்குச் சரியான மருந்துப் பொருளாகும்.



**சாதிக்காய்**

மேகநோய் காரணமாக உடம்பெங்கும் தோன்றும் வலிகளை இது கண்டிக்கும்.

சாதிக்காயை ஐம்பது கிராம் வாங்கித் தூள் செய்து நல்லெண் ணெயில் காய்ச்சி வலி இருக்கும் இடங்களில் தேய்த்தால் மேக நோய் தொடர்பான வலிகள் நீங்கும், உஷ்ண சம்பந் தமான நோய்கள், தலை வலி , இரைப்பு ஆகிய நோய்களும் விலகும்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்



திருநெல்வேலி நெல்லையப்பர்

ராஜராஜன் காலத்தில் பல திருக்கோயில்களில் ஆய்வுகள் நடைபெற் றுள்ளன. கோயில் வழி பாடு, கணக்குகள் ஆகி யவை சரியாக நடை பெறுகிறதா? என்பதைக் கவனிக்க ஸ்ரீ கார்யம் ஆராய்கின்ற என்ற அதி காரிகள் நியமிக்கப்பட் டார்கள்.

**திருமணம்**

ஒரு பெண்ணின் கையைப் பற்றுவதற் கான முதல் உரிமை தாய்மாமனுக்கு வழங் கப்பட்டது. பெண் வீட் டார் மணமகனுக்கு வர தட்சணை கொடுக்கிற வழக்கம் இல்லை.

ஆனால் நிலங்களைப் பெண் வீட்டார் சீதன மாகக் கொடுத்தார்கள்.

சீதனச் சொத்தைச் செலவு செய்வது குற்ற மாகக் கருதப்பட்டது. பன் னிரண்டு வயதில் பெண்க ளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

திருமணப் பந்தலில் அக்னி சாட்சியாக மண மக்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அந்த ணர்கள் திருமணச் சடங் குகளை ஏற்று நடத்தும் பொறுப்பில் இருந்தார் கள்.

மணமகளின் மலரடி களை மணமகன் பாலால் கழுவ வேண்டும். மன் னர்கள், பல திருமணங் கள் செய்து கொள்ளும் வழக்கம் சோழர் காலத் தில் நிலவியது. மன்னர் கள் பல திருமணங்கள் செய்து கொண்டாலும் குடிமக்களிடம் அந்தப் பழக்கம் இல்லை.

**பெண்கள்**

ராஜராஜன் காலத்தில் அடக்கமே பெண்களின் சிறந்த குணமாக இருந் தது. கற்பு ஒழுக்கம் பெண்களின் அணிகலன் என்று போற்றப்பட்டது.

ராஜராஜன் காலத்தில் நிலவிய மோசமான ஒரு பழக்கம் உடன்கட்டை ஏறுதல். ராஜராஜனின் தாய் வானவன்மாதேவியார் உடன்கட்டை ஏறித் தன் உயிரைப் போக்கியிருக் கிறார். இதற்காக அக்கா லத்தில் வானவன்மாதே வியார் மிகவும் போற்ற ப்பட்டிருக்கிறார் (ஆனால், வானவன்மாதேவியாருக் குப் பிறகு, வேறெந்த சோழ அரசியும் உடன்கட்டை ஏறவில்லை)

முதலாம் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் வீர சோழ இளங்கோவேள் என்கிற கொடும்பாளூர் சிற்றரசனின் மனைவி கங்காதேவியார் என்கிற வர் உடன்கட்டை ஏறியி ருக்கிறார்.


கணவனுக்குப் பிறகு தனக்கு இனிமேல் அடிமை வாழ்க்கை என்று பய ந்தே பெண்கள் இம்மு டிவை எடுத்தார்கள். ஆனால், சோழர் காலத் திலேயே காலப்போக் கில் உடன்கட்டை ஏறு தல் விலக்கப்பட்டுள் ளது.

நிலவுடைமை முழு க்க முழுக்க ஆண்களின் கைக்குச் சென்றது. ஒரு வேளை, பெண்களுக்கு நிலம் வழங்கப்பட்டிருந் தால் திருமணத்தின் போது நிலம் அவர் கணவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. பல பெண்கள் கல்வி கற்கா மல் இருந்தார்கள். அதே சமயம், தேவரடியார்க ளுக்கு நல்ல கல்வி கிடைத்தது.

(தொடரும்)





அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பது பயங்கரவாதம் ஆகுமா?

நகர்ப்புறத்திலிருந்து கிராமங்களை நோக்கி படையெடுக்க ஆரம்பித்து விட்டனரே?

இலங்கையில் கொரோனா இரண்டாவது அலை எப்பேற்பட்டது?

**ஆகாஸ் — யாழ்ப்பாணம்**

**சிரியாவின் அவலக்குரல் ஐ.நாவுக்குக் கேட்காதா?**

இலங்கையின் அவலக்குரல் கேட்காமல் போனவர்களுக்கு எப்படி சிரியாவின் குரல் கேட்கும்.

ஐ.நாவை நம்பும் அவ நம்பிக்கையைக் கைவிட்டுவிட்டு எம்மில் நம்பிக்கை கொண்டு முன்னேறுவோம்.

**நேதாஜி — வதிரி**

**திலீபனின் நினைவேந்தலை தடுக்கும் சிலர் தேரர்களின் அடாவடியை ஏற்கிறார்களா?**

தேரர்கள் என்ன செய்தாலும் அமைதி காப்பதே இலங்கையின் நிலை.

இது சிங்கள பௌத்த நாடு. இங்கு அவர்கள் சொல்வது தான் சட்டம்.

அதனால் நீர் வாயை மூடும்.

**தாரா — வதிரி**

**இலங்கையில் கொரோனா இரண்டாவது அலை எப்பேற்பட்டது?**

இரண்டாவது அலை என்பதன் அர்த்தம் கொத்தணி தொற்று. அதாவது ஒருவரில் இருந்து ஐவருக்குத் தொற்றுகிறது என வைத்துக் கொண்டால் அந்த ஐவரில் இருந்து இருபத்தைந்து பேருக்கு. அந்த இருபத்தைந்து பேரில் இருந்து 125 பேருக்கு. இப்படி கட்டுக்கடங்காமல் சென்று கொண்டே இருக்கும்.

கொத்தணித் தொற்றை கட்டுப்படுத்துவதென்பது மிகச் சாதாரணமான விடயமன்று.

**தரன் — வடமராட்சி**

**நகர்ப்புறத்திலிருந்து கிராமங்களை நோக்கி படையெடுக்க ஆரம்பித்து விட்டனரே?**

ஒருவர் விடும் மூச்சுக்காற்று அடுத்தவரில் படும் அளவு நெருக்கத்தில் இருந்து இயந்திரமாய் இயங்கிக்கொண்டு பணம் பணம் என அலைந்தவர்களுக்கு கொரோனா தகுந்த பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறது.

நகர்ப்புற அரியண்ட வாழ்க்கையிலும் கிராமப்புற ஆரோக்கியமான வாழ்க்கை சிறந்தது என மனிதன் புரிந்து கொண்டான். படையெடுக்கிறான் கிராமங்களை நோக்கி.

**நிலா — சுழிபுரம்**

**தியாகராஜபாகவதருக்கும் ரஜனிக்கும் என்ன வேறுபாடு?**

தியாகராஜ பாகவதர் பாட்டுப்பாடி சுப்பர்ஸ்ரார் ஆனார். ரஜனிகாந்த் பஞ் பேசி சுப்பர் ஸ்ரார் ஆனார்.

**தரன் — பளை**

**விவசாயப் புரட்சி ஒன்று ஏற்பட்டால் மாத்திரமே இப்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

உண்மைதான். கொரோனா முதல் நோயாளி தென்பட்டதைத் தொடர்ந்து நாடுபூராக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் வீட்டுத்தோட்டம், இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு என்கின்ற எண்ணங்கள் மக்களிடம் உதித்தன. செயற்படுத்தவும் பட்டன.

ஆனால் கொரோனா அச்சம் அற்றுப்போக அந்த முயற்சியும் அற்றுப் போய்விட்டது.

உண்மையில் வீட்டில் உண்டாக்கி உண்ணும் திருப்தியை மனதார நான் உணர்ந்தேன்.

விவசாயம் நாட்டின் ஆணிவேர். அதை யாரும் அவமானமாய் நினைக்கக்கூடாது.

வியாசர் பதில்கள்
உங்கள் எண்ணத்தில்
தோன்றும் கேள்விகளை
021 567 1532
என்ற இலக்கத்துக்கு
SMS
அனுப்புங்கள்

**சிவம் — மானிப்பாய்**

**கொரோனாவிலும் பட்டினி கொடுமையானதாமே?**

அண்மையில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தவிடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதை நாம் சர்வசாதாரணமாகக் கடந்துவிட முடியாது.

வங்கியில் நிறையப் பணம் இருப்பவர்கள் மூடை மூடையாய் பொருட்கள் வாங்கி வீட்டில் பதுக்கி வைத்து வயிறு வளர்க்கிறார்கள்.

ஆனால் அன்றாடம் உழைத்து உண்ணும் பாமரனைப் பற்றிய சிந்தனை யாரிடமும் இல்லை என்பது மட்டுமே உண்மையானது.

**கேதீஸ் — தெல்லிப்பழை**

**அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பது பயங்கரவாதம் ஆகுமா?**

காலம் காலமாக வந்த அரசுகள் தமிழனின் உச்சந்தலையில் அடித்தது இதை வைத்துத்தானே.

உலகின் விடிவுக்காக போராடிய சேகுவேராவை சுட்டுக் கொல்லத் தயாராகிறான் ஒரு சிப்பாய்.

சேகுவேரா சொல்கிறார், முட்டாளே சுடு. நீ சுடுவது சேகுவேராவை அல்ல. சாதாரண ஒரு மனிதனை என்று.

அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தால் அவனுக்கு பேரினவாதங்கள் கொடுக்கும் பட்டம் பயங்கரவாதி.

இதுவே நியதி.

**தமிழன் — யாழ்ப்பாணம்**

**வன்னிப்பெருநிலப்பரப்பில் மணல் கொள்ளை அள்ளக் கொள்ளையாய் நடக்கிறதே?**

ஒரு காலத்தில் இயற்கை வளங்களை உயிராய் மதிக்கப்பட்ட மண் வன்னிமண்.

இப்போது மாபியாக்களின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது.

வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் மணல் அள்ள அனுமதி வழங்கவில்லை எனப் பேசப்படுகிறது.

ஆனால் அடுக்கடுக்காய் டிப்பர்கள் மணல் அள்ளிச் சென்றுகொண்டே இருக்கிறது.

அப்படியென்றால் அள்ளுவது யார்? யாரிடம் அனுமதி பெற்று அள்ளப்படுகிறது? என்ற கேள்விகள் எழும்.

இப்போது நீங்கள் பதிலைக் கண்டுபிடித்திருப்பீர்களே.

**சேகரன் — மானிப்பாய்**

**தமிழ்ப்பற்று உங்களிடம் இருக்கா வியாசரே?**

நிறையவே இருக்கிறது. இறைச்சி சாப்பிடுகிறோம் என்பதற்காக எலும்பை கழுத்தில் மாட்டித் திரிய முடியாது தானே.

சிலரைப் பார்த்தால் சிரிப்புதான் வரும். முகப்புத்தகத்தில் தமிழ் எங்கள் உயிர் என்று போடுவதையும் அணியும் ரீ சேர்ட்டில் "தமிழன்டா" என்று இருப்பதாலும் தமிழ் வளர்ந்து விடாது. இது புரியாத பலர் தாடி தமிழன் அடையாளம் என்று அதற்கு தண்ணீர் ஊற்றி வளர்த்து அலைகிறார்.

## கொவிட்-19

வட்டவடிவமான கொரோனா அது
பல உயிரைப் பறிக்கும் கொரோனா
சின்னச் சின்னக் கொரோனா அது
பெரிய பெரிய உடல்களை
நோய்ப்படுத்தும் கொரோனா
யமனின் வாசலில் நிற்கும்
கொரோனா அது
ஆனால் இப்பொழுது
எம் வீட்டு வாசலில் அது நிற்கிறது
இரவுகளோ பல கடக்க
பல மக்களே இறக்கின்றனர்
நாம் வீதியில் நடமாடும் போது
அது எமது வீட்டில் நடமாடும்
நாம் எமது வீட்டில் இருக்கும் போது
அது வீதியில் நடமாடும்

ஸ்ரீ.ஸ்ரீஜனனி
தரம்–6
சுண்டிக்குளி ம.க.

## விடியும் வரை

அரசியலும்
அநியாயங்களும்
தன் வழியே நீண்டு செல்ல

ஏக்கமும் ஏமாற்றமும்
நிலையானதால்

முதுமையின்
முகவரியோடும்
விழிமூடா கனவுகளை
சுமந்தபடி காத்திருப்பது
நாளையாவது
விடியுமென்றா

நுவீனூர் தேன்நிலா

## கல்லறை காட்டிவிடு




சிறையது கொண்டு நிறை உருத் தந்தாய்
மறைத்துயிர் காப்பாயா –பெண்ணே
விறைத்துயிர் கொல்ல கறைத்துளிபோல
நிறைத்தெனை வைப்பாயா?
நிறத்துரு தேடும் நீந்திடும் நீரில் நீ
நிம்மதி கலைந்தாயே புறத்தொரு வாழ்க்கை
அகத்தொரு பார்வை ஆவது வாழ்க்கையதோ
முகத்திரை கிழிக்க நித்திரை குழப்பும் உன்
நிம்மதி பாவமடி மதத்தினில் நீயும்
பதத்தினில் நானும் பல்லுக்கு-இதங்களடி
முள்ளினில் சேலை முட்டிய நூலாய்
முதுகெலும்பானதுவே பனங்கள்ளது மதுவில்
மயங்கிய வண்டாய் என் உயிர் போனதுவே
சொல்லது பிழைத்தோ சேர்வது அலைத்தோ
கலைத்தது காதல் ஏதோ உடல் மெய் உயிர் நீயே
வல்லவன் நீர் போ என்னில்
வறுமைகள் இல்லையல்லோ
கல்லினில் பயிராய் காத்திருக்கின்றாய்
என் கண்ணீரை மென்றுவிடு
இல்லை கல்லறை காட்டிவிடு– பெண்ணே

யாழ்வாகீஷ்

## பலாத்காரம்

ஆசைப்பட்டு அநாகரிகம்
செய்யும் காடையரே!
அவலம் மட்டும்
அபலைப் பெண்களுக்கா...?
அற்பமோ
உங்கள் ஆடைகளை
கழற்றி மாற்றும்
கடைப்பொருட்களல்ல கற்பு...
விட்டுவிடு எனக் கெஞ்சியும்
விடக்கூடத் துணியவில்லையே
உங்கள் மனச்சாட்சிகள்...
நடந்து முடிந்த பின்
"நடத்தை கெட்டவள்" எனும் பட்டம்
அவளா சுகம் கேட்டாள்
நீங்கள் தானே
பலாத்கார நகங்களை
முகத்தில் நங்கூரமாய்
பாய்ச்சினீர்கள்...

ற.கீர்த்திகா
யா/ இணுவில் இ.க.

## பெண்ணவள்

அன்பின் ஆரமுதே
ஆயிரத்தில் ஓரழகே
இதயத்தில் இடம்பற்றி
ஈரமாய் நனைந்தவளே
உயிரைத் தந்து உறவாகி
ஊணினை ஊட்டி தாயானவளே
எல்லையிலா அன்பு கொண்டு
ஏட்டெல்லாம் கவி கொண்டவளே
ஐம்பெரும் காப்பியத்தின் நாயகியாகி
ஒளிகுன்றா அறிவின் பெருங்கடலானவளே
ஓர்முறை எனைப்பார்த்து
ஃபிரிவு காண இதயத்திற்கு
பரிவு காட்டாயோ

தே.ஆகாஷ், எழுதுமட்டுவாழ்

## வெல்வோம் மீள்வோம்

அன்பனே எங்கே ஓடுகிறாய்?
இயற்கைக்குப் பயந்து
உன்னைக் காத்திட
நீ ஓடும் பாதை சரியானதா?

ஒரு நிமிடம் நில்
சிந்தனை செய்
எதற்காய் ஓடுகிறேன் என
உன்னிடம் நீ கேள்விகேள்

இந்த உலகில் எவரும்
இறக்காமல் இல்லைதான்
ஆனாலும்
நம் அலட்சியத்தால் இறந்தால்
எதிர்காலம் எம்மை
பழி சொல்லும்

எடு மாஸ்க்கை
இடு முகத்திற்கு
கைகளைக் கழுவுவதில்
அடிக்கடி கவனம் செலுத்து
சமூக இடைவெளியை
தொடர்ந்து பேணு
கொரோனா மட்டுமல்ல
கொடு காலனே
உன் அருகில் வரமாட்டான்
இது சத்தியம்

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்– 498



## எண்ணங்களின் ஓலங்கள்

சுருக்கம் விழுந்த
முகத்தினனின்
எண்ணச் சிறகுகள் நீண்டு
பறப்பதேனோ
பத்துமாதம்
சுமந்து பெற்றெடுத்த மகன்
என்னை முதியோர்
இல்லத்திற்கு வழியனுப்ப
ஐந்து நிமிடத்தில்
முடிவெடுத்தானே
என்ற ஏக்கமா
இமைகளின் ஓரத்தில்
விழிநீர் சொரிவதன்
காரணத்தை யாரறிவார்

செ.தர்சிகா
சுண்டிக்குளி
மகளிர் கல்லூரி

## மௌனத்தின் தேடல் –499



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## தனிமை

காலை
உணவுமில்லை
காசுமோ
கையிலில்லை
ஓலைக்
குடிசையிலே
ஒண்டியாய்
வாழ்கின்றேன்
சோலைக்கிளியாக
அன்று வாழ்ந்த
எந்தனிடம்
காலம்
கனிந்து வந்தால்
காலனும்
வந்திடுவான்

சி.சிவானந்தராசா
பண்டத்தரிப்பு

## பிணைப்பறுந்த நூல்பட்டம்

துணையை
இழந்தனையோ
சூழ்ந்திருந்த உறவும்
பிரிந்தனையோ
அணைத்து வளர்த்து
ஆதரித்த
அரும் செல்வங்கள்
பிரிந்தனையோ
பிணைப்பறுந்த
நூல்பட்டம் வானில்
பேதலித்து அலைந்து
உழலுவதாய்
கணப்பொழுதும்
ஓயாமல் மனம்
கலங்கித் தான்
போயினையோ

வாகை வளவன்
நாரந்தனை

## படையிடம் ஒப்படைத்த

கன்னத்தில் கைவைத்துக்
காத்திருக்கும் முதுமைகூட
என்னது என வினவ இங்கு
எவ்வுயிருமே இல்லைப் போலும்
படையிடம் ஒப்படைத்த பேரன்
பதியிடம் திரும்பா உயிரின்
கடைசியின் நிமிடம் கூட
கண்ணீர்தான் மிஞ்சிடுமா

தமிழமுதன்
தாவடி

## முதியோரின் இல்லம்

முதுமையில்
தனிமை வாட்டின
முறை அறி
தெரியாப் பாதை
எது சுகம் துக்கம்
என்ற வேற்று
இயலுமே புரியாச் சூழல் நின்
மதி இழந்து
எந்த உறவும் நினை
முதியோரின் இல்லம் சேர்த்து
விதிவலி நினைத்தோ தாயே
வேதனை வாழ்நாள் வாட்டும்

த.சிவகாமி
நல்லூர்

## பெண்மைக்கு ஈடாகா...

தாயாகத் தாரமாகத்
தளராத் தளிர்
மகவாய்ச் சோதரியாய்
ஆயாவாய்
அனுசரித்து அன்பால்
அன்னை திரேசாவாய் ஆனாய்
குருதியினைப்
பாலாக ஊட்டி
குலம் காக்கும்
குளிர் நிலவே
பெரும் பேறாய் பெண்மைக்கு
ஈடாக இறைதானும்
ஒப்புமாமோ

வைகதன்
கொக்குவில்

# பிரான்ஸை நடுங்கவைத்த கொடூரக் கொலைகள்

**“எங்கட மாமா வீட்டில இருந்த எல்லாரையும் கத்தியால குத்தியும் சுத்தியலால அடிச்சும் சாக் கொண்டு போட்டார் தயவு செய்து காப்பாத்துங்கோ எனப் பதற்றத்துடன் கதறினான் அந்தச் சிறுவன்.”**

மனித உயிர்களின் விலை சாதாரணமானதல்ல. அது விலை மதிப்பற்ற ஒன்று. மனிதன் இயந்திரமயமாகி ஓடி ஓடி உழைப்பது எதற்காக என்கின்ற கேள்வியே வாழ்வின் தத்துவத்தை உணர்த்திவிடும்.

‘‘வயிற்றுக்காக மனிதன் இங்கே கயிற்றில் ஆடுறான் பாரு. அவன் ஆடி முடித்து இறங்கி வந்தா அப்புறம் தாண்டா சோறு” எனும் வாலியின் வைரவரிகள் ஒருசாண் வயிற்றை நிறைக்க உயிரை பணயம் வைத்து உழைப்பதை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்.

தற்போதைய இயந்திரமயமான மனித வாழ்வும் உணவு என்கின்ற எல்லை கடந்து அந்தஸ்து, கௌரவம் என்பவற்றிற்காக உழைப்பை நகர்த்திச் செல்வதை அவதானிக்க முடியும்.

இவ்வாறு மனங்களை இரும்பாக்கி ஓடி ஓடி பணம்தேடும் உயிர்களின் மனங்கள் பாரிய நெருக்கீடுகளைச் சந்திக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

அதுவும் வெளிநாட்டு வாழ்க்கை என்பது சொல்லத் தேவையில்லை.

வீட்டில் கணவனும் மனைவியும் உழைத்தே ஆக வேண்டும். இல்லையேல் அங்கு வாழ முடியாது. அதனால் எங்கு என்ன வேலை கிடைத்தாலும் சலிக்காமல் செய்து குடும்பத்துடன் ஒன்றாய் குதூகலமாய் இருப்பதை தவறவிட்டு பெரிதும் உள நெருக்கீட்டிற்கு ஆளாகிறார்கள்.

வெளிநாட்டில் கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் வீடுகளில் இருவரும் வெவ்வேறு நேரங்களில் வேலை செய்வதை அவதானிக்க முடியும்.

கணவன் வீட்டில் நிற்பார். அந்தநேரம் மனைவிக்கு வேலை நேரமாகவும் மனைவி வீடு வர கணவன் வேலைக்குச் சென்றுவிடும் நிலையே அதிகம்.

இவ்வாறான நிலைமை கணவன்- மனைவிகளிடையே பாரிய பிளவுகளையும் உள நெருக்கீட்டையும் ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.





அண்மையில் பிரான்ஸில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றின் நான்கு குழந்தைகள் உட்பட ஐவர் கத்தியால் குத்தியும் சுத்தியலால் அடித்தும் கொடூரமாக கொலை செய்யப்பட்டதுடன் மேலும் ஐந்து பேர் படுகாயமடைந்த செய்தி நெஞ்சை உறைய வைத்தது.

யாழ். திருநெல்வேலியைச் சேர்ந்த தனது மனைவி, 5 வயது மற்றும் 18 மாதங்களே ஆன தனது இரண்டு பிள்ளைகள், தனது சகோதரியின் 5, 9 வயதுடைய இரண்டு பிள்ளைகளை கொடூரமாகக் கத்தியால் குத்தியும் சுத்தியலால் அடித்தும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை முயற்சி செய்த செய்தியைப் படிக்கும் போது இரத்தம் உறைந்து போனது.

கொலை என்பது சடுதியாக வரும் ஆத்திரத்தில் செய்து முடிப்பதாகும்.

ஆனாலும் பச்சைக் குழந்தைகளைக் கொடூரமாகக் கொலை செய்வதென்பது சர்வசாதாரணமான விடயமல்ல.

அப்படி கொலை செய்யும் அளவிற்கு அந்த நபருக்கு மன அழுத்தம் இருந்திருப்பதை யாரும் அறியவுமில்லை. எவருக்கும் அது தெரியவுமில்லை.

வீட்டில் அநேகர் கோவிலுக்குப் போன நேரத்தை சாதகமாகப் பாவித்த கொலையாளி இந்தக் கொடூரத்தைப் புரிந்திருக்கிறார்.

இந்தக் கொலைவெறித் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்து அவரிடமிருந்து தப்பி வந்த சிறுவன் ஒருவன் வீட்டுக்கு எதிரே இருந்த கடை ஒன்றிற்கு ஓடுகிறான்.

இரத்தக் காயத்துடன் சிறுவன் வருவதைக் கண்ட கடைக்காரர் என்னாச்சு எனப் பதற, எங்கட மாமா வீட்டில இருந்த எல்லாரையும் கத்தியால குத்தியும் சுத்தியலால அடிச்சும் சாக்கொண்டு போட்டார் தயவுசெய்து காப்பாத்துங்கோ என பதற்றத்துடன் கதறினான் அந்தச் சிறுவன்.

கடை உரிமையாளர் உடனடியாக பொலிஸிற்கு தகவல் வழங்க, அடுத்த ஐந்து நிமிடங்களில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

உள்பூட்டு பூட்டியிருந்த கதவை உடைத்து உள்ளே சென்ற பொலிஸார், இரத்த வெள்ளத்தில் கிடந்த பிஞ்சுக் குழந்தைகளைப் பார்த்து உறைந்து போய் விட்டனர்.

அவ்வளவு கொடூரமான முறையில் அந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என பொலிஸ் அதிகாரி தெரிவித்ததுடன் பிரான்ஸ் வரலாற்றில் இப்படி ஒரு கொலை நடைபெறவில்லை எனவும் தெரிவித்தார்.

படுகாயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் கொலை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர் பிரான்ஸ் பொலிஸார்.

ஆரம்பகட்ட விசாரணையில் இக்கொலை குடும்ப முரண்பாட்டால் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

நடைபெற்ற விசாரணைகளில் குறித்த பிள்ளைகளின் தந்தையே கொலையைச் செய்திருக்கிறார் என்றும் வேறுயாரும் இக்கொலையை மேற்கொண்டனரா எனும் கோணத்திலும் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும் கொலை நடந்த அக்கம் பக்கத்து வீட்டு உரிமையாளர்கள் பேசும்போது,

மிகவும் அன்பான குடும்பம் அது. குறித்த நபர் (கொலையாளி) அமைதியானவர். யாருடனும் சண்டைக்கு போகாதவர். தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பார். அவரா இந்தக் கொலைகளை செய்தார் என நினைக்கும் போது நம்பவே முடிய வில்லை என்றனர்.

குறித்த நபர் சிறுவயதில் தனது கண்முன்னே ஒரு படுகொலையைக் கண்ணுற்றதாகவும் அதனால் அவருக்கு உளநெருக்கீடு ஏற்பட்டதாகவும் அதில் இருந்து அவர் தப்பிப்பிளைத்து வந்தது கடவுள் சித்தம் என்றும் அவரது உள்நாட்டு உறவினர் தெரித்தனர்.

வெளியில் பார்ப்பதற்கு அன்பாய், அமைதியாய் தெரிந்த அந்த நபரின் மனதுக்குள் இப்படி கொலை செய்யும் அளவிற்கு அதுவும் தனது மனைவி, பிள்ளைகளையே கொலை செய்யும் அளவிலான கொடூர மனநிலை இருந்ததை யாரும் அறியாமல் விட்டது யார் தவறு.

வெளிநாட்டு வாழ்க்கை இயந்திரமயமானதன் விளைவு இன்று இந்தக் கொடுமையில் முடிந்து விட்டது.

எப்படித்தான் பணம் சொத்துப்பத்துடன் வாழ்ந்தாலும் சொந்த பந்தத்துடன் வாழும் வாழ்க்கை போல வரமாட்டாது.

பணம் பணம் என ஓடி ஓடி உழைத்து மனஅழுத்தத்தை விலைக்கு வாங்கி கண்டமிச்சம் என்ன.

கடைசியில் தனது மனைவி, பிள்ளைகள், சகோதரியின் பிள்ளைகள் என ஐந்து பேரைக் கொலை செய்யும் நிலைக்கு தள்ளியிருக்கிறது.

வெளிநாட்டு பகட்டு வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு பகல்கனவு கண்டுகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் இது நல்ல பாடம்.

இக்கரைக்கு அக்கரைப் பச்சையாய் அங்கு ஓடிச் சென்றதும் எப்போது எங்கள் சொந்த நாட்டிற்குச் செல்வோம் என ஏங்கித் தவிக்கும் மனங்களே அதிகம்.

சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா என்பது மட்டுமே உண்மையாகிறது.

அபிமன்யு

# ஆட்கொல்லி கொரோனா!

# முடங்கி சாவோமா எதிர்த்து வாழ்வோமா?



**கொவிட்-19 தொற்றுநோய்க்கு முறையான தடுப்பு மருந்து உருவாக்கப்படும் வரை காத்திருத்தலை விடவும், சமூகத்தில் இயல்பாக எதிர்ப்பு சக்தி உருவாக இடமளிக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில், கொவிட்-19 ஆட்கொல்லியால் நிகழக்கூடிய இறப்புக்களையும், சமூக தாக்கங்களையும் குறைப்பது அவசியம் என்று பெரிங்டன் பிரகடனம் கூறுகிறது.**

ஒரு சமூகமோ, நாடோ அறிவியல் ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு ஆழமான கருத்தாடல்கள் அவசியம். அப்படியானதொரு கருத்தாடலுக்கு கடந்த வாரம் பிள்ளையார் சுழி போடப்பட்டிருக்கிறது. போட்டவர்கள் விஞ்ஞானிகள். ஒன்றல்ல, இரண்டல்ல. 12,000 மேற்பட்ட விஞ்ஞானிகள்.

இவர்கள் முடக்கநிலைக்கு எதிரான இயக்கம் என்றொரு முயற்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்காக பிரகடனமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் கிரேட் பெரிங்டன் பிரகடனம் என்பதாகும். அமெரிக்காவின் கிரேட் பெரிங்டன் நகரில் உருவானதால், அந்தப் பெயர். இதுவொரு மகஜராக இணையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் பிரகடனத்திற்கு ஆதரவாக கைச்சாத்திட்டு வருகிறார்கள். இதன் காரணமாக, இந்த ஆவணம் கவனத்தை ஈர்த்து வருகிறது.

பிரகடனம் கூறும் விடயம் எளிதானது. கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்த முடக்க நிலையை அமுலாக்குவது பொருத்தமற்றது என்பது பிரதானமான வாதம். முடக்கநிலைகள் ஆட்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தில் விரும்பத்தகாத தாக்கங்களை ஏற்படுத்தி ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கிறது என்று ஆவணம் வாதிடுகிறது.

எனவே, நச்சுயிரி பரவிய சமூகத்தில் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீது கவனத்தை செலுத்தி, ஆரோக்கியமானவர்கள் இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும்என விஞ்ஞானிகள்விவாதிக்கிறார்கள். இந்த விவாதத்திற்காக, முடக்கநிலை மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பட்டியல் இடப்படுகின்றன.

இவற்றில் முக்கியமானது ஒக்ஸ்பாம் நிறுவனம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை. உலகம் முழுவதும் முடக்கநிலையின் விளைவுகளால் உணவு விநியோகம் பாதிக்கப்பட்டு, வழமையை விடவும் கூடுதலாக 13 கோடி பேர் வரை உயிரிழக்கலாம் என்பது அறிக்கையின் சாராம்சம். இந்தப் புள்ளிவிபரத்தை ஒப்பிட்டு ஆராய்ந்தால், கொவிட்-19 தொற்றுநோய் பலி கொள்ளக்கூடிய உயிர்களை விடவும், பட்டினியால் அதிக மக்கள் இறப்பார்கள்.

சிறு உதாரணம். அமெரிக்காவில் முடக்க நிலை பிரகடனம் செய்யப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது, போதிய மருந்துகளையும் முறையான சிகிச்சைகளையும் பெற முடியாமல், மேலதிகமாக 93,000 பேர் மரணிக்கலாம் என எதிர்வு கூறப்படுகிறது.

உலக வங்கியும் கொவிட்-19 நெருக்கடி பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைப் பட்டியலிடுகிறது. இந்த தொற்றுநோய் காரணமாக, உலகளாவிய ரீதியில் கொடிய வறுமை தீவிரம் பெறலாம். ஏற்கனவே வறுமையால்வாடும்மக்களில்15 கோடி பேர் அடுத்தாண்டு தீவிர வறுமைக்குள் தள்ளப்படலாம் என்று உலக வங்கி கூறியிருக்கிறது.

இது தவிர, முடக்கநிலைகள் உளவியல் ரீதியாக ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை உலக சுகாதார ஸ்தாபனம் பட்டியலிட்டுள்ளது. அவசர வாழ்க்கைக்கு பழக்கப்பட்டுப் போன மக்கள் வீடுகளில் முடங்க நேர்வதால், மன அழுத்தம் தீவிரம் பெற்றுள்ளது. தற்கொலை எண்ணங்களும், குடும்ப வன்முறைகளும் அதிகரித்துள்ளன. அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் விவாகரத்து பெறுவோரின் எண்ணிக்கை சடுதியாக உயர்ந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டுகிறது.

இத்தகைய விளைவுகள் பற்றிய தொலை நோக்கு இல்லாமல், அரசுகள் அவசரப்பட்டு முடக்கநிலையைப் பிரகடனப்படுத்துவதில் உள்ள நியாயம் என்ன என்பது கிரேட் பெரிங்டன் பிரகடனத்தை எழுதிய விஞ்ஞானிகளின் கேள்வி.

முடக்கநிலை பயனற்றது என்பதை விஞ்ஞான பூர்வமாக நிரூபிப்பதற்காக பல விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றில் நோய் எதிர்ப்பு சக்தி என்ற விடயம் முக்கியமானது. தமிழில் மந்தை நிலை நோய் எதிர்ப்பு சக்தி என்ற பொருள் தரக்கூடிய **Herd Immunity** என்ற பதத்தை விஞ்ஞானிகள் பயன்படுத்துகிறார்கள்.

இது டார்வினின் கூர்ப்புக் கொள்கையுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடியதொன்றாகும். ஒரு உயிரினம் கூட்டமாகப் புழங்குகையில், அது இயல்பாகவே நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்திக் கொள்கிறது. இதனைத் தொடர்ந்து, ஒருவரில் இருந்து மற்றவருக்கு கிருமித் தொற்றக்கூடிய நிலை இல்லாமல் போகிறது. இதன் மூலம் முழு சமூகமும் பாதுகாப்பானதாக மாறுகிறது என்பது இதற்குரிய விளக்கம்.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு முறையான தடுப்பு மருந்து உருவாக்கப்படும் வரை காத்திருத்தலை விடவும், சமூகத்தில் இயல்பாக எதிர்ப்பு சக்தி உருவாக இடமளிக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில், கொவிட்-19 ஆட்கொல்லியால் நிகழக்கூடிய இறப்புக்களையும், சமூக தாக்கங்களையும் குறைப்பது அவசியம் என்று பெரிங்டன் பிரகடனம் கூறுகிறது. பெரிங்டன் பிரடகனத்தை விமர்சிப்பவர்கள், இந்த விடயத்தையே கையில் எடுக்கிறார்கள். மனிதர்கள் மந்தைகள் அல்ல என்பது முக்கியமான விமர்சனம். மனிதர்களின் வாழ்க்கை முறை வித்தியாசமானது என்பதால், இந்தக் கருதுகோள் எடுபடாதென விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

இன்னொரு விமர்சனமும் உண்டு. ஒட்டுமொத்த சமூகமும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாக மாறுவது படிப்படியாக நிகழ வேண்டிய விடயம். அதற்கு நோய்த்தொற்று சார்ந்த எல்லைகள் உண்டு. சின்னம்மையை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த நோய் ஒருவரில் இருந்து மற்றவருக்கு தொற்றாத நிலை உருவாக வேண்டுமாயின், சனத்தொகையில் 94 சதவீதமானவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களாக இருக்க வேண்டும். கொவிட்-19 தொற்றுநோயைப் பொறுத்தவரையில், இந்த எல்லை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென விமர்சிப்பவர்கள் வாதிடுகிறார்கள்.

ஒரு நோய் சமூகத்தில் தீவிரமாக பரவுவதைக் கட்டுப்படுத்த தடுப்பு மருந்தால் முடியும். அதற்கு முறையான தடுப்பு மருந்து இருக்க வேண்டும். ஒட்டுமொத்த உலகினதும் நம்பிக்கையை வென்ற அத்தகைய மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக இதுவரை தெரியவில்லை.

எனவே, மந்தைநிலை நோய் எதிர்ப்பு சக்தியின் மூலம் ஒரு சமூகம் பாதுகாப்பானதாக மாற வேண்டுமென்றால், அது நோய் தொற்றுவதன் ஊடாக மாத்திரமே நிகழ முடியும். இதன்போது, இந்த மேலும் எத்தனை பேர் பலியாவார்கள் என்ற கேள்வி எழுவதாக பெரிங்டன் பிரகடனத்தை எதிர்ப்பவர்கள் வாதிடுகிறார்கள். இந்த வாதம் மற்றொரு உணர்வுபூர்வமான பிரச்சினையைக் கிளப்புகிறது. வைரஸால் கூடுதல் பாதிப்பை எதிர்கொள்ளக்கூடியவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தி, நோய்க்கு பலியாகும் ஆபத்து குறைந்தவர்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்து, நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள இடமளிப்பது இதன் தத்துவம் என பெரிங்டன் பிரகடனம் வலியுறுத்துகிறது.

இங்கு பாதிக்கப்படக்கூடியவர்கள் என்ற வரையறைக்குள் அடங்கக்கூடியவர்கள் பெரும்பாலும் முதியவர்களே. நோயாளிகள், வலது குறைந்தவர்கள் போன்றவர்களும் அடங்குவார்கள். அத்தகைய பலவீனமான ஆட்கள் மீது கூடுதல் கவனம் செலுத்துதல் என்பதன் அர்த்தம், அவர்களை ஒதுக்கி வைப்பதா என்ற கேள்வி உணர்வுபூர்வமானதே. இன்று முடக்கநிலை என்ற வார்த்தை முழுமையான அர்த்தத்தை இழந்திருக்கிறது. ஒட்டுமொத்த சமூகத்தையும் முடக்கி விட்டு சகலரையும் வீட்டுக்குள் அடைத்து விடுவது தான் சில மாதங்களுக்கு முன்னர் முடக்கநிலையாக இருந்தது. இப்போது, பகுதியளவில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளையும் முடக்கநிலை என்றே கூறுகிறோம்.

இத்தகைய பின்புலத்தில், பெரிங்டன் பிரகடனம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இதனூடாக கூறப்படும் விடயங்கள் எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானவை, சமூக விழுமியங்களுக்கு எந்தளவு பொருத்தமானவை என்ற கேள்விகளைப் புறக்கணிக்க முடியாது தான். எனினும், இந்தப் பிரகடனத்தில் கூறப்படும் விடயங்கள் சார்ந்த அறிவுபூர்வமான கருத்தாடல்கள் முக்கியமானவை. கருத்தாடல்கள் வாயிலாக முன்வைக்கப்படும் விடயங்கள் அரசியல் ரீதியான தீர்மானங்களை சரியான திசையில் நகர்த்த உதவும்.

பெரிங்டன் பிரடகனம் ஒரு தரப்பைப் பற்றியது மாத்திரமல்ல. சகலரையும் பற்றி பேசும் ஆவணமாகும். இதில் பேசப்படும்விடயங்கள் தத்தமது சமூக, கலாசார பின்புலத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் தாம் எந்தளவு அபாய நிலையில் இருக்கிறோம் என்பதை மதிப்பிட்டு, சுதந்திரமான தீர்மானங்களை எடுக்க உதவுகிறது. தாம் எதிர்கொள்ளும் அபாய நிலை, இயல்பாக வாழ்க்கையைத் தொடர்வதற்கான அவர் தனிமைப்படுத்தல் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்கள் போன்றவற்றை அறிந்து சகலவற்றிற்கும் மத்தியில் சமநிலையைப் பேணுவது பற்றி அறிவை விருத்தி செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. எனவே, இந்த ஆவணத்தையும், கருத்தாடலையும் முற்றுமுழுதாக புறக்கணிக்காமல் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்வதே அறிவுபூர்வமான விடயமாக அமையும்.

# கடல் புறா

## ஸ்ரீவிஜய சாம்ராச்சியம்




இதுதான் கதை இளைய பல்லவரே! ஆனால் கதை போகிற போக்கைப் பார்த்தீரா?" கருணாகர பல்லவன் அந்த நீண்ட கதையைக் கேட்டதால் துயிலிலிருந்து எழுபவன் போல் எழுந்தான். "ஏன் கதை போகிற போக்குக்கு என்ன?" என்று கேட்டான்.

"சோழநாடு செல்ல கலிங்கம் வந்தேன். ஆனால் இங்கு என் அதிர்ஷ்டம் என்னைத் தொடர்ந்து வந்திருக்கிறது. இங்கு கலிங்கத்துக்கும் சோழ நாட்டுக்கும் போர் ஏற்படும் போலிருக்கிறது" என்றான் குணவர்மன். "ஆம், அப்படித்தான் தெரிகிறது" என்றான் இளைய பல்லவன்.

"உங்களைப் பற்றியும் அநபாய சோழரைப் பற்றியும் எங்கள் நாட்டில் கதைகள் உலாவுகின்றன இளைய பல்லவரே! உங்கள் இருவரில் ஒருவர் வந்து என் படைகளுக்குத் தலைமை வகித்தாலே ஜெயவர்மனை வெற்றி கொள்ள முடியுமென்று மக்கள் நினைக்கிறார்கள். என் மந்திரிகளும் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் இங்குள்ள நிலையைப் பாரும். இங்கு நீர் துரத்தப்பட்டு நானிருக்கும் மாளிகையில் பதுங்கியிருக்கிறீர். அநபாயர் ஏற்கனவே சிறைப்பட்டிருக்கிறார். என் அதிர்ஷ்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்?" என்றான் குணவர்மன், துன்பப் புன்முறுவல் கோட்டி.

குணவர்மனின் அதிர்ஷ்டம் நன்றாக விளங்கியது. இளைய பல்லவனுக்கு "இவன் அதிர்ஷ்டம் தான் என்னையும் அநபாயரையும் இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது" என்று மனதிற்குள் சபித்த இளைய பல்லவனை மட்டுமின்றிக் குணவர்மனையும் ஏன் காஞ்சனா தேவியையுங்கூட வியப்பில் அழுத்தவல்ல விசித்திர சம்பவமொன்று திடீரென அந்த அறையில் நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சியின் காரணமும் திறந்திருந்த சாளரத்தின் மூலமாக வெகு வேகமாக உள்ளே வந்தது.

### காட்டுப் புறாவும் வீட்டுப் புறாவும்

கலிங்கத்திற்குத் தென் கிழக்கிலும் தமிழகத்துக்கு நேர் கிழக்கிலும் வங்கக் கடலுக்கு அக்கரையில் விரிந்த ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தின் பெரும் சரித்திரத்தையும் துன்பமும் துரதிர்ஷ்டமும் கலந்த அதன் சோகக் கதையையும் குணவர்மன் சொல்லி முடித்ததும் முடிக்காததுமாக அவன் துயரத்தைத் துடைக்க வந்த தேவதூதன்போல் சாளரத்தின் மார்க்கமாக ஏதோ புயலால் உந்தப்பட்டது போல் வெகுவேகமாகச் சிறகடித்துக் கொண்டு வெண்புறா ஒன்று உள்ளே வந்து சற்று அப்பாலிருந்து ஒரு மஞ்சத்தின் முகப்பில், உட்கார்ந்து அறையிலிருந்த மூவரையும் இரண்டு மூன்று முறை தலையை அசைத்து அசைத்து உற்றுப் பார்த்தது.

வீடுகளில் புறாக்கள் வளர்க்கப்படுவதோ தப்பிய ஓரிரு புறாக்கள் எதிர் இல்லங்களுக்குப் பறந்து சென்றுவிடுவதோ அப்படியொன்றும் வியக்கத்தக்க விடயமல்லவென்றாலும் உள்ளே வந்த புறாவின் அபரிமித வளர்ச்சியும் அதன் கால்களுக்கிருந்த அளவுக்கதிகப்பட்ட நீளமும் மிகப் பெரிய அலகும் சாதாரணமாக அது கலிங்கத்திலோ தமிழகத்திலோ காணப்படும் புறாவல்ல வென்பதை நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்ட இளைய பல்லவனே மற்ற இருவரும் வியப்பிலிருந்து மீளுமுன்பாகத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சரேலென்று எழுந்து சென்று அந்தப் பெரும் புறாவைத் தன் இரு கைகளாலும் பிடித்து எடுத்தான்.

அப்படி அவன் எடுத்துப் பிடித்துத் தடவிக் கொடுத்த போதும் அது எந்த வித சத்தத்தையும் கிளப்பாமல் திரும்பத் திரும்ப விழித்ததைக் கண்ட காஞ்சனாதேவி மஞ்சத்திலிருந்து எழுந்து அவனிடம் வந்து "அதோ அந்தப் புறாவை இப்படி என்னிடம் கொஞ்சம் கொடுங்கள்" என்று கொஞ்சும் சொல்களைக் கொண்டு கெஞ்சினான்.

ஆனால் இளையபல்லவன் அவளுக்குப் பதிலேதும் சொல்லாமலும் அவள் கேட்டபடி புறாவைக் கொடுக்காமலும் அந்தப் புறாவைத் திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்து விட்டுத் திடீரென சாளரத்தை நோக்கிச் சென்று வெளியே எட்டி நீண்ட நேரம் எதிர் சாரியிலிருந்த மாளிகைகளில் கண்களை ஓட்டினான். தப்பிச் சாளரத்துக்குள் ஓடிவந்து விட்ட புறாவைக் கண்டு முதலில் வியப்புக்குள்ளான குணவர்மனும் காஞ்சனா தேவியும் இளைய பல்லவனின் அந்தப் புறா ஆராய்ச்சியையும் சாளரத்திடம் ஓடி வெளியே பார்த்து அவன் நடத்திய சோதனையையும் கண்டு அவற்றுக்குக் காரணம் புரியாதவர்களாய் அவனே வந்து விபரிக்கட்டுமென்று பேசாமலே நின்றுகொண்டிருந்தனர்.

நீண்ட நேரம் வெளியே யாரையோ பார்க்க முயன்றும் முடியாமையால் ஏமாற்றப் பெருமூச்சு விட்டுக் கொண்டு மீண்டும் அறையின் நடுவுக்கு வந்த இளைய பல்லவன் கடாரத்தின் அரசகுமாரியை நோக்கி "காஞ்சனாதேவி! அதோ அந்த மூலையிலுள்ள தீபத்தைச் சற்று அருகில் கொண்டு வாருங்கள். இந்தப் புறாவைப் பரிசோதித்துப் பார்ப்போம்" என்று கூறினான்.

அரசகுமாரியின் அஞ்சன விழிகள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. "இன்னும் சோதிப்பதற்கு என்ன இருக்கிறது அதில்? இத்தனை நேரந்தான் துருவித் துருவிப் பார்த்தீர்களே" என்று அவள் சொற்கள் இனிமையுடன் உதிர்ந்தன. சாதாரண சமயமாக இருந்தால் அந்த இனிமையில் இளைய பல்லவன் இதயத்தைப் பறிகொடுத்திருப்பான்.

ஆனால் அவன் இதயமும் சித்தமும் அந்தப் புறாவிடமே லயித்திருந்ததால் அந்த இனிமையைக் கூட கவனிக்காதவனாய் "அரசகுமாரி! இந்தப் புறாவை அத்தனை எளிதில் சோதித்துவிட முடியாது. சற்று அந்த விளக்கை எடுத்து வாருங்கள். நம்மூவர் கதியையும் இந்தப் புறாவே ஒருவேளை நிர்ணயிக்கக்கூடும்" என்றான்.

இதைக் கேட்ட அரசகுமாரி மட்டுமின்றி அதுவரை சோகத்தின் பிம்பமாயிருந்த குணவர்மன்கூட வியப்புக்குள்ளானதால் அவனும் கேட்டான், "இதென்ன விசித்திரம் இளைய பல்லவரே? இந்தப் புறாவா நமது கதியை நிர்ணயிக்க முடியும்? என் நாட்டின் பெரும்படைகளே அதை நிர்ணயிக்க முடியும்?"

இளைய பல்லவனின் இடது கை புறாவைப் பிடித்திருந்தது. வலது கை அதை மெல்லத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது. அத்துடன் குணவர்மன் கூறியதைக் கேட்டதும்? அவன் இதழ்கள் இளநகை புரிந்தன. "ஆண்டவன் படைப்பில் எது அதிக பலமுள்ளது. எது சொற்பப் பலமுள்ளது என்பதை மனிதன் நிர்ணயிக்க முடியாது. குணவர்மரே மனிதனுக்குச் சிறு அலுவலைப் புரிவதற்கும் பெரும் ஆயுதங்கள் தேவை.

ஆண்டவன் இஷ்டத்துக்கு வளைந்து கொடுக்கச் சிறு துரும்பும் போதும். உமது படைகள் சாதிக்க முடியாததை இந்த அற்பப் பறவை சாதித்தாலும் சாதிக்கும்" என்ற கருணாகர பல்லவன் "குணவர்மரே! உமது நாட்டில் புறாக்கள் இருக்கின்றனவா?" என்று ஏதோ சந்தேகம் கேட்பவன் போல் கேள்வியொன்றையும் விடுத்தான்.

இந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாத குணவர்மன் தன் மகளின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு பிறகு கருணாகர பல்லவனை நோக்கி "புறாக்கள் இருக்கின்றன. அதற்கென்ன?" என்று வினவினான். (தொடரும்)

# தண்ணி காட்டும் பன்னீர் எகிறி அடிக்கும் எடப்பாடி



உச்சகட்ட பரபரப்பிலிருக்கிறது அ.தி.மு.க முகாம். 1989இல் ஜெ-ஜானகி பிரச்சினை. 2017இல் சசிகலா-பன்னீர் தர்மயுத்தம் ஆகிய பிரளயத்துக்குப் பிறகு, மூன்றாம் முறையாகக் கலகலத்துக் கிடக்கிறது எம்.ஜி.ஆர். உருவாக்கிய பேரியக்கம். 'கழகம் எந்நேரமும் பிளவுறலாம்' என்ற பதைபதைப்பிலிருக்கிறார்கள் தொண்டர்கள். நாற்காலிச் சண்டையால் நாட்டை மறந்த சுயநலகோஷ்டிகளின் பதவி வெறியுத்தம் கண்டு முகம் சுளிக்கிறார்கள் மக்கள். இவ்வளவுக்கும் இடையேதான் எடப்பாடிக்கும் பன்னீருக்கும் இடையிலான பங்கீடுகள் ஓரளவு முடிந்திருப்பதாகக் கடைசி கட்டத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

ஒக்டோபர் 3 ஆம் திகதி கடும் டென்ஷனிலிருந்தார் பன்னீர். அன்றைய தினம் பெரியகுளம், கைலாசபுரம் பண்ணை வீட்டிலிருந்தவர், வழக்கமாக மதிய உணவுக்கு பெரியகுளம் அக்ரஹாரத்திலுள்ள தனது வீட்டுக்குச் செல்வதையும் தவிர்த்து விட்டார். உதவியாளர்களிடம், "மனசு சரியில்லை..."என்றவர், கொஞ்சம் மோர் சாதம், வாழைப்பழத்துடன் மதிய உணவை முடித்துக்கொண்டார். மதியம் ஓய்வெடுக்க அறைக்குள் சென்றாலும், உறங்காமல் வீடு முழுக்க தனிமையில் உலாத்திக் கொண்டிருந்தார் என்கிறார்கள் பணியாட்கள்.

அன்றிரவு வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், மேலூர் எம்.எல்.ஏ.பெரியபுள்ளான், சோழவந்தான் எம்.எல்.ஏ.மாணிக்கம், மதுரை தெற்கு எம்.எல்.ஏ.சரவணன், உசிலம்பட்டி எம்.எல்.ஏ. நீதிபதி ஆகிய ஐவரும் பண்ணை வீட்டுக்கு வந்தனர். சுமார் அரைமணி நேரம் அவர்களுடன் ஆலோசித்தார் பன்னீர்.

கூட்டம் முடிந்து வெளியே வந்த உதயகுமார், "உசிலம்பட்டியில் மூக்கையாத் தேவரின் சிலை அமைப்பது குறித்துப் பேசினோம். இது அரசியல் சந்திப்பல்ல" என்று விளக்கமளித்தார். ஆனால், 'சிலை அமைப்பதற்கான சந்திப்பு என்றால், எதற்கு இத்தனை எம்.எல்.ஏக்களை அழைத்து வர வேண்டும், அரை மணிநேரம் என்ன பேசியிருப்பார்கள்?' போன்ற கேள்விகள் அ.தி.மு.கவினரை உலுக்கியெடுத்தன.

**பன்னீரின் 'சமூக' ஆயுதங்கள்!**

இதுகுறித்து பன்னீர் ஆதரவாளர்களிடம் விசாரித்தோம்."எடப்பாடியா, பன்னீரா என உதயகுமாரிடம் கேட்டால், சட்டென 'பன்னீர்தான்' என்று கூறிவிடுவார். முக்குலத்தோர் சமூகப் பிணைப்பு அப்படி. அதன் அடிப்படையில் அமைச்சர்கள் சிலரும் பண்ணை வீட்டுக்கு வரவிருந்தனர். அப்படி நடந்தால், தேவையில்லாத குழப்பம் ஏற்படும் என்று பன்னீர் மறுத்து விட்டார். அதேசமயம், தென் மாவட்டங்களில் முக்குலத்தோர் நிர்வாகிகளும், பன்னீர் பின்னால் அணிதிரளத் தயாராக இருக்கிறார்கள். இந்த ஆயுதத்தை பன்னீர் எந்நேரமும் எடுக்கக்கூடும்.

இதுமட்டுமல்ல... ஏற்கனவே கட்சியின் செயற்குழுவில், வன்னியர் சமூக அமைச்சர்கள் சிலரும் சமூக ரீதியாகத் தாங்கள் புறக்கணிப்படுவதாகக் கொந்தளித்திருந்தார்கள். இவர்களை வளைக்கும் வேலையையும் பன்னீர் தரப்பு செய்து வருகிறது. அதன்படி அமைச்சர் சி.வி.சண்முகம், வீரமணி ஆகியோரின் மனதைக் கரைக்கும் வேலையை கே.பி.முனுசாமி மூலமாக பன்னீர் கச்சிதமாகச் செய்து வருகிறார். 'எடப்பாடியின் ஆட்சியில் கவுண்டர் சமூகத்தினரைத் தவிர்த்து மற்ற சமூகத்தினர் ஓரங்கட்டப்படுகின்றனர்' என்று கொம்பு சீவிவிடுவது தான் பன்னீரின் நோக்கம். இதையெல்லாம் அமைதியாகக் கணக்கு போட்டுத்தான், ஒக்டோபர் 7 ஆம் திகதி உச்சகட்டத்தை எட்டினால், சமூக பலத்தைக் காட்டி மோதிப் பார்க்கும் மனநிலைக்கு பன்னீர் வந்து விட்டார்.

இதையேதான், செயற்குழு முடிந்த பிறகு சமாதானத்துக்காகத் தன்னைச் சந்தித்த அமைச்சர்கள் சிலரிடம், 'இந்தக் கட்சியை ஒரு சமூகத்துக்கான கட்சியாக மாற்றிவிட்டார்கள். முதல்வர் வேட்பாளர் குறித்தெல்லாம் நான் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. கொங்குமண்டல அமைச்சர்களின் ஆதிக்கத்தை முடிவு கட்டுவதற்காகவே 'வழிகாட்டுதல் குழுவை அமையுங்கள்' என்று சொன்னேன். எனக்காகவா இவ்வளவு போராடுகிறேன்... வழிகாட்டுதல் குழு அமைத்தால் அனைத்து சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும்' என்று அவர் தூபம் போட்டதும், சமாதானத்துக்குப் போயிருந்த அமைச்சர்கள் மனதிலும் சஞ்சலம் தோன்றிவிட்டது"என்றார்கள்.

**பிளவா, சரண்டரா?**

இந்த நிலையில் தான் ஒக்டோபர் 5 ஆம் திகதி காலை, தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டார் பன்னீர். அதில், 'தமிழக மக்கள் மற்றும் கழகத் தொண்டர்களின் நலனைக் கருத்தில் கொண்டே எனது முடிவுகள் இதுவரை இருந்துள்ளன. இனியும் அவ்வாறே இருக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார். தொடர்ச்சியாக, பகவத்கீதை வசனத்தையும் மேற்கோள்காட்டியிருந்தார். அணிகள் இணைந்த போது, கட்சியின் நலன்கருதி இணைவதாகக் குறிப்பிட்டார். துணை முதல்வர் பதவியை ஏற்றுக்கொள்ளும் போதும் இதே டயலொக்கைத்தான் உதிர்த்தார். இப்போதும் அதேவசனத்தை உச்சரிக்கிறார். எனவே, பன்னீரின் இந்தப்பதிவை, 'சரண்டருக்கான முன்னறிவிப்பு' என்கிறது எடப்பாடி வட்டாரம்.

ஆனால், பன்னீரின் ஆதரவாளர்களின் மனநிலை வேறு மாதிரியாக இருக்கிறது. அதாவது, "பன்னீரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றால், கட்சி மீண்டும் பிளவை நோக்கியே செல்லும் என்கிறது" அவரது ஆதரவு வட்டம். "எடப்பாடியை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தினால், அதற்குரிய விலையை பன்னீருக்கு எடப்பாடி தந்துதான் ஆக வேண்டும். அதாவது, கட்சியின் மொத்த கட்டுப்பாட்டையும் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பன்னீர் எதிர்பார்க்கிறார். இதற்கு எடப்பாடி ஒப்புக் கொள்ளப் போவதில்லை. எந்தச்சூழலிலும் இரட்டை இலைக்குக் கையெழுத்திடும் உரிமையை இருவரும் விட்டுத்தர மாட்டார்கள். கட்சிப்பிளவை நோக்கித்தான் பயணிக்கிறது"என்கிறார்கள் அவர்கள்.

**வழிகாட்டுதல் குழுவுக்கு ஒப்புதல்?**

அதேநேரம் இந்த இதழ் அச்சுக்குச் செல்லும் ஒக்டோபர் 5 ஆம் திகதியன்று நள்ளிரவில், கட்சி மேலிடத்தில் எடுக்கப்பட்டதாக சில முடிவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்கள் மூத்த நிர்வாகிகள். "ஒருவழியாக வழிகாட்டுதல் குழுவை அமைக்க எடப்பாடி தரப்பில் ஒப்புக்கொண்டார்கள். இதற்கு பிரதி பலனாக எடப்பாடியை முதல்வர் வேட்பாளராக பன்னீர் ஏற்றுக் கொண்டார். வழிகாட்டுதல் குழுவை அமைத்து விட்டால், கட்சியைத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, வேட்பாளரின் தேர்வின் போது எடப்பாடி தரப்புக்கு செக் வைக்கலாம் என்று பன்னீர் தரப்பில் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது, கட்சியின் 'பி போர்ம்' இல் கையெழுத்து போடுவதற்கும் பன்னீர் முரண்டு பிடிக்கலாம் தன் ஆதரவாளர்கள் அதிகமானோர் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில், அவர்களை வைத்தே தன்னை முதல்வராக முன்னிறுத்திக் கொள்ளலாம் என்றெல்லாம் பன்னீரிடம் திட்டங்கள் இருக்கின்றன. அதேசமயம், மேற்கண்ட கடைசி கட்ட முடிவுகள் எந்நேரமும் மாறக்கூடும்" என்றார்கள்.

ஒருபுறம், சாதி அரசியலைக் கையிலெடுத்து, கொங்கு அதிகாரத்தை உடைக்கப் பார்க்கிறார் பன்னீர். மறுபுறம், கட்சி நிர்வாகிகளையும் எம்.எல்.ஏக்களையும் கையில் எடுத்துக்கொண்டு எகிறி அடிக்கிறார் எடப்பாடி. கொரோனா கொடும் துயரம் தீராத நிலையில், கடந்த ஒரு மாதமாகவே ஆட்சியாளர்கள் இருவரும் மக்களைப் பற்றி துளியும் சிந்திக்கவில்லை என்பதுதான் சாபக்கேடு!


**"ஆட்சிக் கலைப்பு!" - பா.ஜ.க.அஸ்திரம்...**

அ.தி.மு.கவில் நடந்துவரும் மோதலின் க்ளைமாக்ஸ் காட்சியாக, ஒக்டோபர் 5 ஆம் திகதியன்று மாலை, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை முதல்வர் பழனிச்சாமியும் சில அமைச்சர்களும் சந்தித்தனர். 'கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்துப் பேசியதாக' சொல்லப்பட்டாலும், பேசப்பட்ட விவகாரமே வேறு என்கிறார்க்ள். "எடப்பாடி - பன்னீர் பிரச்சினை 7 ஆம் திகதியன்று முடிவுக்கு வரவில்லையென்றால், மத்திய அரசு முக்கிய முடிவெடுக்க வேண்டியிருக்கும். ஆட்சியைக் கலைக்கவும் தயங்கமாட்டோம்" என்று கடுமையாக அவர்களிடம் ராஜ்பவன் தரப்பு எச்சரித்ததாம். இதற்கு முத்தாய்ப்பாகவே, கடந்த ஒருவாரமாகத் தமிழக பா.ஜ.க.தலைவர் முருகன் டில்லியில் முகாமிட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது. அடுத்து, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சென்னை வருகிறார். அவரிடமும் தமிழக அரசியல் சூழலை விசாரித்து வரும்படி கட்சி மேலிடம் உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.


ஜூனியர் விகடன்

# இலக்கு வைக்கப்படுவது யார்?

**2015 ஆட்சி மாற்றம் இந்தியாவுக்கும் அவப் பழியை ஏற்படுத்தி இருந்தது அதற்கு ஒரு காரணம். அந்த ஆட்சி மாற்றத்தின் ஊடாக இந்தியா எதிர்பார்த்த நலன்களை அடைய முடியவில்லை என்பது இன்னொரு காரணம்.**







இலங்கை அரசியலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பலமிழந்து வருகின்ற ஒரு சூழலில், இந்திய பிரதமர் நரேந்திரமோடி இருதரப்பு மெய்நிகர் மாநாடு ஒன்றை அவருடன் நடத்தியிருக்கிறார்.

20ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம், ஜனாதிபதி தனது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ள தருணத்தில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அதிகாரங்கள் முழுவதையும் ஜனாதிபதியிடம் இழந்து போயிருக்கின்ற இந்த தருணத்தில், இந்தியப் பிரதமரின் இருதரப்பு மாநாடு, முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை இந்தியா பெரிதும் விரும்ப வில்லை. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக போவதை இந்தியா முன்னரே அறிந்திருந்தது. ஆனால் அதை தடுக்க இந்தியா முயற்சிக்கவில்லை.

ஆட்சிமாற்றம் கிட்டத்தட்ட தவிர்க்க முடியாத ஒன்று என்பதை உணர்ந்து விட்ட பின்னர், அதில் தலையைக் கொடுத்து மாட்டிக்கொள்ள இந்தியா விரும்பவில்லை. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வருவதை இந்தியாவினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை.

ஆயினும், அவர் பதவிக்கு வந்தவுடன் - மிகக்குறுகிய நாட்களுக்குள் இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று டில்லிக்கு பயணம் மேற்கொள்ளக்கூடிய சூழல் இருந்தது. அதனைத்தான் இந்தியா தமக்கு சாதகமானதாக கருதியது.

தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடியவராக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பார் - அவ்வாறு இருந்தால் அவரை அனுசரித்துச் செல்வது தவறில்லை என்று அதிகாரிகள் நம்புகின்ற அளவுக்கு நிலைமைகள் காணப்பட்டன.

ஆனால் கிட்டத்தட்ட கடந்த 10 மாதங்களுக்கு மேலான கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி இந்தியாவுக்கு பாதகமானது என்று கூறமுடியாவிட்டாலும், அதனை நீண்டகால நோக்கில் தமக்கு சாதகமான ஒரு அரசாங்கமாக இருக்கும் என்று இந்தியாவினால் நம்பமுடியாதிருக்கிறது.

2015இற்கு முன்னரே, கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்தியாவின் அதிகார வர்க்கத்துக்கும் இடையில் சுமுகமான உறவு காணப்பட்டிருக்கவில்லை. சீன நீர்மூழ்கிகள் கொழும்புக்கு வந்தமை குறித்து, கோட்டாபய ராஜபக்ஷ திரும்பத் திரும்ப அளித்த உறுதி மொழிகளை டில்லி ஏற்கத் தயாராக இருக்கவில்லை.

குறிப்பாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் அவரது வாக்குறுதிகளை நம்பவில்லை. இவர்கள் இருவருக்கும் இடையில் சுமுகமான உறவு அப்போது இருக்கவும் இல்லை.

அதைவிட இலங்கை பாதுகாப்பு ரீதியாக தன்னை பலப்படுத்திக் கொள்வதையும், இந்தியா அதிகளவில் விரும்பவில்லை. போர் முடிவுக்கு வந்த பின்னர் பாகிஸ்தானின் போர் விமானங்களை வாங்க முயன்றபோது, இந்தியாவே அதற்கு தடைபோட்டது.

அதற்குப்பின்னர், இதுவரையில் இலங்கை விமானப்படைக்கு போர் விமானங்கள் வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடயத்தில் இந்தியா ஒருவரையறையை வைத்திருக்கவே விரும்புகிறது.

ஏனென்றால், சிங்களத் தேசியவாத தலைவராகவே அவர் செயற்படுகிறார். தேசியவாத சிந்தனை கொண்டவர்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு அரசாங்கத் துடன், செயற்படுவது நீண்டகால நோக் கில் ஆபத்தானது.

இப்போதுகூட பகிரங்கமாக இந்தியாவை எதிர்க்கும், இந்தியாவுக்கு எதிராக கருத்து வெளியிடும் அமைச்சர்களை கொண்ட அரசாங்கம் தான் பதவியில் இருக்கிறது. இவ்வாறான நிலை இந்தியாவைப் பொறுத்தவரை நீண்ட கால நோக்கில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

இவ்வாறான நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ பலமடைவது இந்திய நலன் களுக்கே ஆபத்தாக அமையும் என்ற அச்சம் இந்திய கொள்கை வகுப்பாளர்க்ள் மத்தியில் உள்ளது. ஆனால், பிர தமர் மகிந்த ராஜபக்ஷ அவ்வாறானவர் அல்ல. அவர் நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர்.

உள்நாட்டில், வெளிநாட்டில் அரசியலை கையாளுவதில் இராஜதந்திர அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கக்கூடியவர். எனவேதான், இந்தியப் பிரதமர் மோடி, இருதரப்பு மாநாட்டுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அழைத்திருக்கிறார்.

20 ஆவது திருத்தச்சட்டத்தில் ஒன்றுபட்டிருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தாலும், பிரதமரின் அதிகாரங்களை இந்தத் திருத்தச்சட்டம் பறிக் காது என்று அவர் கூறியிருந்தாலும், அது எந்தளவுக்கு உண்மை என்பது கேள்விக்குரியது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியாக பலமானவராக இருந்தாலும், அதிகார ரீதியாக அவர் வலுவிழந்து வருகிறார். இவ்வாறான ஒருநிலையில், இந்தியா தனக்கு யார் அதிகம் பயனைக் கொடுக்கக்கூடியவர், யாரை வைத்து காரியம் சாதிக்கலாம் என்றுதான் முடிவுகளை எடுக்கும்.

அவ்வாறானவர்களைப் பலப்படுத்துவதிலும், அவர்களை காப்பாற்றுவதிலும் இந்தியா மாத்திரமன்றி எந்தவொரு நாடுமே தீர்மானங்களை எடுக்கும்.

இப்போதைய நிலையில் இந்தியா எடுத்துள்ள நகர்வுகள், இலங்கை அரசாங்கத்துக்குள் இருக்கக்கூடிய அல்லது உருவாகக் கூடிய பிளவுகளை சாதகமாக்கிக் கொள்வதற்கான ஒரு நகர்வு என்றும் கூறலாம்.

பிராந்திய ரீதியாக தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்கு, இலங்கையில் வலுவான ஒரு அரசாங்கம் இருப்பதையே இந்தியா வரவேற்கும். அவ்வா றான ஒரு அரசாங்கம் தன்னுடன் இணங்கிச் செயற்படாத ஒன்றாக இருப்ப தையும் இந்தியா விரும்பாது.

இவ்வாறான பின்புலக் காரணிகளில் இருந்து நோக்கினால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையே அதிகம் கையா ளக் கூடிய தலைவராக இந்தியா தெரிவு செய்திருக்கும். இலங்கையில் இப்போதைய நிலையில் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வரக்கூடிய நிலையில் பலமானதாக இல்லை.

எனவே, சஜித் அணியினரையோ ரணில் அணியினரையோ பலப்படுத்தும் வேலைகளில் இறங்க முடியாது. இருக்கின்ற தெரிவுகளில் எது மிகச் சிறந்ததோ அதனை கையாளுவதே சரி யானது என்ற முடிவுக்குத்தான் இந்தியா வந்திருக்கிறது.

இந்தியாவின் இந்த முடிவு, இலங்கையின் ஆட்சியாளர்களை வலுப்படுத்தும் என்று கூற முடியாது. இது உள்ளக புகைச்சல்களை அதிகரிக்கச் செய்யும், அரசுக்குள் புதிய பிரச்சினைகளையும் அணிகளையும் உருவாக்கும்.

இந்தியா இதனை விரும்பித்தான் செய்கிறதா? அல்லது தவிர்க்க முடியாத கட்டத்தில் இந்த முடிவை எடுக்கிறதா? என்று தெரியவில்லை.

சீனாவின் தலையீடுகளுக்கு எதிராக இந்தியாவும், ஜப்பானும், இணைந்து செயற்படும் சூழலில், கிழக்கு கொள் கலன் முனைய திட்டத்தை இந்தியா வுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப் பதும், ஜப்பானின் இலகு ரயில் திட்டத்தை ரத்து செய்ததும் கோட்டாபய ராஜபக்ஷ தரப்புதான்.

இந்தப் பின்னணியில் இருந்து நோக்கும் போது இந்தியா ஏன் மகிந்த ராஜபக்ஷவை முன்னுரிமைக்கு கொண்டுவர விரும்புகிறது என்பதை புரிந்து கொள்வது கடினமல்ல.

**ஹரிகரன்**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வானம்பாடி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்: பி.சுசீலா



கங்கைக் கரைத் தோட்டம்
கன்னிப் பெண்கள் கூட்டம்
கண்ணன் நடுவினிலே...ஓஓ...
கண்ணன் நடுவினிலே

காலை இளம் காற்று
பாடி வரும் பாட்டு
எதிலும் அவன் குரலே...ஓஓ...
எதிலும் அவன் குரலே

கண்ணன் முகத்தோற்றம் கண்டேன்
கண்டவுடன் மாற்றம் கொண்டேன்
கண்மயங்கி ஏங்கி நின்றேன்
கன்னி சிலையாகி நின்றேன்

என்ன நினைந்தேனோ...
தன்னை மறந்தேனோ!
கண்ணீர் பெருகியதே...ஓ...
கண்ணீர் பெருகியதே!!
(கங்கைக்கரை)

கண்ணன் என்னைக் கண்டுகொண்டான்
கை இரண்டில் அள்ளிக் கொண்டான்
பொன்னழகு மேனி என்றான்
பூச்சரங்கள் சூடித் தந்தான்


கண் திறந்து பார்த்தேன்
கண்ணன் அங்கு இல்லை!
கண்ணீர் பெருகியதே...ஓ...
கண்ணீர் பெருகியதே!!

அன்று வந்த கண்ணன் அவன்
இன்று வர வில்லை அவன்!
என்றோ அவன் வருவான்...ஓ...
என்றோ அவன் வருவான்!

கண்ணன் முகம் கண்டகண்கள்
மன்னன் முகம் காண்பதில்லை
கண்ணனுக்குத் தந்த உள்ளம்
இன்னொருவர் கொள்வதில்லை

கண்ணன் வரும் நாளில்,
கன்னி இருப்பேனோ...
காற்றில் மறைவேனோ!
நாடி வரும் கண்ணன்,
கோல மணி மார்பில்
நானே தவழ்ந்திருப்பேன்!!
கண்ணா...!!கண்ணா...!!கண்ணா...!!

# கோப்பியின் சிறப்பு



நம்மில் பலருக்கும் பிடித்த பானம் கோப்பி. 'கோப்பி' என்ற வார்த்தையைக் கேட்டாலே அதைப் பருகும் முன்பே பலருக்கும் உற்சாகம் வந்து விடும். கோப்பிக்கு நீண்ட வரலாற்றுப் பின்னணியும் பரிணாம வளர்ச்சியும் அரசியலும் உள்ளன. கோப்பி முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டதே ஒரு சுவாரஷ்யமான கதை. வருடம்தோறும் ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச கோப்பி தினமாகக் கொண்டாடும் நிலையில் அதன் கமகம வரலாற்றையும் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

14 ஆம் நூற்றாண்டின் மத்தியில், ஆபிரிக்காவிலுள்ள எதியோப்பியா நாட்டில் ஆடு மேய்த்து வந்த கல்டி என்ற மனிதர் தன்னுடைய ஆடுகள் ஒரு வகையான பழத்தைத் தின்ற பின் இரவு முழுவதும் தூங்காமல் புத்துணர்வுடன் இருப்பதைக் கவனித்தார். அது தான் கோப்பிக் கொட்டையாக இருக்கலாம் என்றும் அங்கிருந்து தான் கோப்பியின் கதை தொடங்குகிறது என்றும் நம்பப்படுகிறது.

முதலில் கோப்பிக் கொட்டையைத் தண்ணீரில் வேக வைத்து, வடிநீர் எடுத்துக் குடிக்கும் பழக்கம், எதியோப்பியாவிலிருந்து இதை எடுத்துச் சென்ற ஏமன் நாட்டு வியாபாரிகளிடமிருந்து வந்தது. ஏமனிலிருந்து மற்ற அரேபிய நாடுகள், துருக்கி மற்றும் பெர்ஷியாவுக்கும் கோப்பி பரவியது.

இஸ்லாத்தில் மது தடை செய்யப்பட்டுள்ளதால், கோப்பி பானம் அங்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. இருந்தாலும் 1511 இல் கோப்பி ஒருவித தூண்டும் பானம் என்று மெக்காவில் தடை செய்யப்பட்டு பின்னால், அந்தத் தடை விலக்கப்பட்டது.

முதன் முதலில் எகிப்தின் தலைநகரமான கெய்ரோவில் தான் கோப்பி கிளப் தொடங்கப்பட்டது. அங்கு கோப்பி, இசை, அரட்டை, ஆட்டம் பாட்டம் என்று கிளப் கலாசாரம் உருவானது. மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு மால்டா தீவு மூலம் கோப்பி சென்றது.

பின் ஐரோப்பாவிலுள்ள முக்கிய நாடுகளுக்கு வெனிஸ் நகரம் மூலமாக 1645 இல் கோப்பி சென்றடைந்தது. அன்று முதல் மத்திய கிழக்கு நாடுகளைவிட ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில்தான் கோப்பி அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### கோப்பிக்கு முன் கொக்கோ!

கோப்பிக்கு முன் கொக்கோ தான் உலகை ஆண்டு வந்தது. கொக்கோ விதைகளிலிருந்து பானம் தயாரித்துக் குடித்தனர். இதுபோன்ற விளை பொருட்களுக்காக நாட்டை அடிமைப்படுத்தும் சம்பவங்கள் வரலாற்றில் பல அரங்கேறின. அதைவிட கோப்பி சற்று அதிக 'போதை' தந்ததால், கோப்பி பக்கம் கவனம் திரும்பியது.

பெரும்பாலும் குளிர்ப் பிரதேசங்களான ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் சூடான கோப்பி வெற்றி பெற்றது. அங்கு அதன் தேவையும் இருந்தது.

ஆனால், குளிர்நாடுகளில் கோப்பியை விளைவிக்க முடியாது. இப்படித்தான் ஆபிரிக்க நாடுகள், தென் அமெரிக்க நாடுகளான பிரேசில் போன்ற தேசங்கள் அடிமைப்படுத்தப்பட்டதற்கு கோப்பியும் ஒரு காரணமாயிற்று கும்பகோணம் டிகிரி கோப்பியில் டிகிரினா என்ன?

கும்பகோணம் என்றால் கோயில்களையும் தாண்டி பலருக்கும் நினைவுக்கு வருவது டிகிரி கோப்பி. அதென்ன டிகிரி கோப்பி? டிகிரி கோப்பிக்கு பெயர் பெற்ற கும்பகோணம் 'ஞானம் கோப்பி பார்' உரிமையாளர்களில் ஒருவரான பிரவீன் சொல்கிறார்...

"1927 ஆம் ஆண்டு கடையைத் தொடங்கினோம். நாலாவது தலைமுறையா கடையை நடத்திக்கொண்டு வருகிறோம். தண்ணி கலக்காத சுத்தமான பசும்பால்தான் டிகிரி கோப்பியோட தனிச் சிறப்பு.

தரமான கோப்பித் தூளில பில்டர் பாத்திரத்தில டிக்காஷன் ரெடி செஞ்சு, அதை டிகிரி பாலில கலக்குறதுதான் கும்பகோணம் டிகிரி கோப்பியோட தனிச்சுவைக்குக் காரணம்.

அந்தக் காலத்துல, வியாபாரிகளிடமிருந்து பால் வாங்கும் போது அதில தண்ணி கலந்திருக்கான்னு பார்க்க, கண்ணாடி கிளாஸ்ல பாலை ஊத்தி 20 நிமிஷம் வைப்பாங்களாம். கிளாஸ்லயிருந்து பாலை வேற பாத்திரத்துக்கு மாத்துனதுக்கு அப்புறம், அந்தக் கிளாஸ் கண்ணாடியில பால் பிசுபிசுன்னு அடர்த்தியா ஒட்டியிருந்தா, அது தண்ணி கலக்காத பால்னு உறுதி செய்வாங்க.

தண்ணி கலந்த பால்ல கோப்பி போட்டா முழுமையான டேஸ்ட் கிடைக்காதுங்கிறதால, கோப்பி கடைக்காரங்க எல்லாரும் பால்ல டிகிரி பார்க்குற இந்த முறையைப் பின்பற்றி வந்தாங்க. மக்கள் அந்தச் சுவையை "டிகிரி கோப்பி கொடுங்க"ன்னு குறிப்பிட்டுக் கேட்க, அந்தப்பெயர் வந்துடுச்சு.

இப்பவும் பால்ல டிகிரி பார்க்கும் பழக்கம் இருக்கு. பால்ல தண்ணி கலந்திருக்கானு கண்டு பிடிக்க, லேக்டோ மீற்றர் கருவியைப் பயன்படுத்துவோம். ஒரு கிளாஸ்ல பாலை ஊற்றி, அதில் லேக்டோ மீற்றரை வைக்கணும். ஐந்து நிமிடம் கழிச்சு லேக்டோ மீற்றரை எடுத்துப் பார்த்தா, பாலின் தரத்தை பர்சென்டேஜ்ல அது காட்டும்.

டிக்காஷனை பொறுத்தவரை, கோப்பிக் கொட்டையை மொத்தமா வாங்கிப் பக்குவமா வறுத்து பதமா அரைச்சுக்குவோம். கோப்பிக்கொட்டை கொஞ்சம் கருகினாலும் கோப்பியின் டேஸ்டே மாறிடும். அரைச்ச கோப்பித்தூளை, பித்தளை பில்டர் பாத்திரத்துல தண்ணி ஊத்தி அதுல சேர்ந்து, கொதிக்க வெப்போம்.

கிட்டத்தட்ட 45 நிமிடம் கழிச்சு சொட்டு சொட்டா வழியும் கோப்பி டிக்காஷனை தேவைக்கேற்ப பால்ல கலப்போம். இதுவும் கும்பகோணம் கோப்பி சுவைக்குக் காரணம்.

கும்பகோணத்தில தயாரிக்கப்படும் கோப்பித்தூள் கடல்கடந்தும் மணம் வீசுது. கும்பகோணத்துக்கு வந்துட்டு டிகிரி கோப்பி சாப்பிடாம பஸ் ஏறினவங்க இருக்க மாட்டாங்க!"

# தமிழில் ரீ என்ட்ரியாகும் லட்சுமிமேனன்




தமிழ்த் திரையுலகத்தில் ஒரு சில ஆண்டு களுக்கு முன்பு முன்னணி நடிகைகளில் ஒருவராக இருந்தவர் மலையாள நடிகை லட்சுமி மேனன். குடும்பப்பாங்கான கதாபாத்திரங்களில் நடித்து வரவேற்பைப் பெற்றவர்.திடீரென தமிழ்ப் படங்களிலி ருந்து மொத்தமாக ஒதுங்கிவிட்டார். அவர் கதாநாயகியாக நடித்து முடித்த "யங் மங் சங்" படம் முடிந்தும் இன் னும் வெளியாகாமல் முடங்கிக் கிடக்கிறது.சமீப காலங்களில் அவருடைய பல புகைப்படங் களைத் தொடர்ந்து இன்ஸ்டாகிரா மில் வெளியிட்டு வருகிறார். மேலும், பிக்போஸ் நிகழ்ச்சி பற்றி சர்ச்சையான வீடியோ ஒன்றைப் பதிவிட்டு மீடியாக்களின் கவனத்தை ஈர்த்தார். இப்போது மீண்டும் தமிழில் ரீ-என்ட்ரி ஆகிறார். முத்தையா இயக் கத்தில் விக்ரம் பிரபு நாயகனாக நடிக் கும் "பேச்சி" படத்தில் இவர்தான் கதாநாயகி. இப்படம் தியேட்டர்களில் வெளியாகாமல் ஓடிடியில்தான் வெளியாகும் என்கிறார்கள். அடுத்த வருடம் இப்படம் வெளியாக உள்ளது.

# ஈழத்தமிழ் பாடகிக்கு வாய்ப்பளித்த இசையமைப்பாளர் - டி.இமான்



பிரபல மக்கள் செல்வன் நடிகர் விஜய்சேது பதியின் தயாரிப்பு நிறுவனமும்,இயக்குநர் ஆறுமுக குமாரின் 7சி.எஸ் என்டர்டைன் மெண்ட் நிறுவனமும் இணைந்து தயாரிக் கும் திரைப்படம் லாபம். இந்த படத்தில், ஹீரோவாக விஜய் சேதுபதியும், அவரு க்கு ஜோடியாக நடிகை ஸ்ருதிஹாசனும் நடித்துள்ளனர். மேலும் அவர்களுடன் ஜெகபதிபாபு,கலையரசன் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித் துள்ளனர்.மேலும்,இந்த படத்திற்கு டி. இமான் இசையமைத்துள்ளார். இந்நிலை யில், இப்படத்தில் இடம்பெற்றுள்ள ராப் பாடல் ஒன்றை பாடுவதற்காக தமிழ் ஈழப் பாடகி கிலியோ என்பவருக்கு டி இமான் வாய்ப் பளித்துள்ளார். இதனை அவர் மிகவும் மகிழ்ச் சியுடன் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள் ளார்.

# O.T.T யில் வசூலை அள்ளிய க.பெ.ரணசிங்கம்



க.பெ.ரணசிங்கம் திரைப்படத்தை 4,70,000 பேர் புக் செய்துள்ளதாகவும் 9.20 கோடிக்கும் வசூல் செய்துள்ளதாக வும் தகவல் வெளியாகியுள்ளது.

# டிசெம்பரில் மாறா



வெகுநாட்களாக, ரசிகர்களின் எதிர்பார்ப்பில் உள்ள படம், மாறா. மாதவன், ஷ்ரத்தா ஸ்ரீநாத், சிவதா, அபிராமி, குருசோமசுந்தரம், எம்.எஸ்.பாஸ்கர், மவுலி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்தை திலீப்குமார் இயக்கியுள்ளார். படம் குறித்து, அவர் கூறியதாவது: ஒவ்வொரு மனிதரின், 50 ஆண்டு வாழ்க்கையில் சந்தித்த நல்ல மனிதர்களை, ஒரே படத்தில் பார்த்தால் எப்படி இருக்குமோ, அப்படியே இந்த, மாறா இருக்கும். அன்பு என்ற விடயத்தை, வேறு ஒரு கோணத்தில் சொல்லியுள்ளோம். படத்திற்கு ஜிப்ரான் இசையமைத் துள்ளார். படப்பிடிப்பு முடிந்து, இறுதிக்கட்ட பணிகள் நடக்கின்றன. டிசெம்பரில் படம் வெளியாகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சின்னத்திரையில் சிறந்த வில்லியாக வலம் வரும்-சைத்ரா



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சுப்பர் ஹிட் சீரியல்களில் ஒன்று யாரடி நீ மோகினி. இதில் சின்னத்திரை நடிகர் ஸ்ரீகுமார், நடிகை நட்சத்திரா மற்றும் சைத்ரா ரெட்டி ஆகியோர் இணைந்து நடித்து வருகிறார்கள். இத்தொடரில் வில்லியாக நடித்ததன் மூலம் தமிழ் சின்னத் திரை ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற் பைப் பெற்றார் நடிகை சைத்ரா ரெட்டி. சில மாதங்களுக்கு முன் நடந்த ஜீ சின்னத் திரை விருதில் சிறந்த வில்லி எனும் விருதை வென்றார்.மேலும் கன்னட திரையுலகில் ' Rugged ' எனும் படத் தில் நடிகர் த்ரில்லர் மஞ்சு என்பவருடன் இணைந்து நடித்துள்ளார் சைத்ரா ரெட்டி.

# உதயமானது விஜய் மியூசிக்

குறுகிய காலத்தில் வேகமான வளர்ச்சி யைப் பெற்ற சனல் விஜய். புதுமையான நிகழ்ச்சிகள், பிரமாண்ட தொடர்கள் மூலம் முன்னணி சனல்களை பின் னுக்குத் தள்ளி விட்டு முன்னேறியது. பிக் போஸ், நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி என பிரமாண்ட நிகழ்ச்சிகளையும் நடத் தியது. இம் மாதம் விஜய் டிவி-யின் மற்று மொரு புதிய சனலான "விஜய் மியூசிக்" என்ற சனலை அறிமுகப்படுத்தியுள்ளது. ஏற்கனவே இந்த சனலின் முன்னோட்டம் சில மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட் டது. இந்த சனல் பற்றி கமலஹாசனால் பிக்போஸ் நிகழ்ச்சியின் போது அறிவிக்கப் பட்டது.

# பிறந்தநாளை கொண்டாடிய எஸ்.எஸ். ராஜமௌலி



"பாகுபலி" படங்களின் மூலம் இந்திய அள வில் பரபரப்பை ஏற்படுத்தியவர் தெலுங்கு இயக்குநர் ராஜமௌலி. தற்போது ஜுனியர் என்.டி.ஆர். , ராம் சரண் மற்றும் பலர் நடிக்கும் "ஆர்.ஆர்.ஆர்" படத்தை இயக்கி வருகிறார். ராஜமௌலி நேற்று அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடினார்.அதை முன்னிட்டு அவருக்கு "ஆர்.ஆர்.ஆர்" படக்குழுவினரும் திரையுலகி னரும் வாழ்த்துக் களைத் தெரிவித் துள்ளனர்.

# சிங்கத்தின் பிடறியைப்பிடித்தே உலுக்கியவன்

## வி.வி.எஸ்.லட்சுமண்



> " **இ**ந்தியாவுக்காக அவர் பல வெற்றிகளை பெற்றுத்தந்திருக்கிறார். பல அவமானகரத் தோல்விகளைத் தவிர்த்திருக்கிறார். ஆனால், அவரை ரசிகர்களோ, அணி நிர்வாகமோ, ஏன் மீடியாக்களோ கூட பெரிதாக மதித்ததில்லை. ஆனால், அவர் ஒருபோதும் ஒருவரையும் மதிக்காமல் கடந்துபோனதில்லை. சிறியவர், பெரியவர் எனப் பாகுபாடு, பாரபட்சம் காட்டியதில்லை. லட்சுமணை நீங்கள் எப்போது சந்தித்தாலும் ஒரு புன்னகை பரிசாகக் கிடைக்கும்! "

"கடலுக்குள் மூழ்கினேன், ராட்சத அலைகளில் நீந்தினேன், மிகவும் சிரமப்பட்டேன்" எனக்கடலுக்குள் முத்து எடுக்க மூழ்கியவன் என்னகதை சொன்னாலும் அதைக்கேட்க யாரும் தயாராக இருக்கமாட்டார்கள். "முத்து எடுத்தியா, இல்லையா?" என்பது தான் எல்லோரின் கேள்வியாகவும் இருக்கும். பிசினஸ் மொழியில் சொல்ல வேண்டும் என்றால் எண்ட்ரிசல்ட் என்ன என்பது தான் முக்கியம்.

டெஸ்ட்ஸ் பெஷலிஸ்ட், வன்டேஸ் பெஷலிஸ்ட், இருபது-20 ஸ்பெஷலிஸ்ட் என கிரிக்கெட்டில் ஸ்பெஷலிஸ்ட்டுகள் மூன்று வகைப்படுவர். ஆனால், இந்த மூன்று வகை ஸ்பெஷலிஸ்ட்டும் இல்லை லட்சுமண். இவர் அவுஸ்திரேலிய ஸ்பெஷலிஸ்ட். அதுவரை "அவுஸ்திரேலியான்னா பயம் சேர்" என்றவர்களின் மனதில் மாற்றங்களை விதைத்தது லட்சுமணின் பல இன்னிங்ஸ்கள். சிங்கத்தை அதன் பிடறியைப் பிடித்தே உலுக்கிய வெரி வெரிஸ் பெஷல் பட்ஸ்மன் வி.வி.எஸ்.லட்சுமண்.

சச்சின், கங்குலி, டிராவிட், லட்சுமண்... இந்த லைன் அப்பை ஃபென்டாஸ்டிக் ஃபோர் என்பார்கள். 2000 - 2005 காலகட்டத்தில் இந்த நான்கு பேரும் தான் இந்திய கிரிக்கெட்டின் அடையாளம். இந்த நான்கு பேருமே தனித்திறமையாளர்கள். இந்திய கிரிக்கெட்டின் பொற்காலத்தை தொடங்கி வைத்தது இந்த நால்வர் கூட்டணி தான். சச்சின் மாஸ்டர் ஆஃப் ஆல்சப்ஜெக்ட்ஸ்... கங்குலி துடுக்கானவர், துணிச்சலுடன் விளையாடக் கூடியவர். டிராவிட் தூண், அரணாக நின்று அணியைக்காப்பவர்... இதில் வி.வி.எஸ்.லட்சுமண் என்பவன் போராளிக் கலைஞன். ஒரு சிற்பி சிற்பத்தை செதுக்குவதைப் போல, ஓர் ஓவியன் பேரழகு ஓவியத்தை தீட்டுவதைப் போல, ஒரு டிசைனர் ஒரு காரை வடிவமைப்பதைப் போல, தன்னுடைய இன்னிங்ஸை அவ்வளவு அழகுடன், நேர்த்தியுடன், பக்குவத்துடன், பொறுமையுடன் வடிவமைப்பவர். இப்படிப்பட்ட ஒரு கலைஞன் இந்திய அணிக்குள் அதன்பிறகு வரவேயில்லை.

கங்குலி, டிராவிட்டைப் போலவே 1996 இல் இந்திய அணிக்குள் வந்தவர்தான் லட்சுமண். கமன்டேட்டர்களின் வசதிக்காக "வி.வி.எஸ்.லக்ஸ்மன்". ஐதராபாத்தைச் சேர்ந்த வலது கை பட்ஸ்மேன். பிரமாதமான ஃபுட்வொர்க் பட்ஸ்மன் அல்ல லட்சுமண். டைமிங்கும், ரிஸ்ட்வொர்க்கும் தான் லட்சுமணின் பலம். அசாருதினோடு தொடர்ந்து விளையாடியவர் என்பதாலோ என்னவோ, ஃபிளிக் எல்லாம் அவ்வளவு அசால்ட்டாக ஆடுவார். ஓஃப்சைடில் எவ்வளவு விலகிப் பந்தைப் போட்டாலும், அதை லெக்சைடுக்கு திருப்பி விடக்கூடிய திறமைசாலி. பந்து தன்னை நோக்கி வரும் வரை காத்திருந்து, அதன் வீரியத்தைப் புரிந்து அதற்கேற்றபடி ஆடக்கூடியவர். அதே போல் வேகப் பந்து வீச்சாளர்களின் பவுன்சர்களுக்கு புல்ஷொட்களால் பதில் சொல்லக் கூடியவர்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தான் முதன் முதலாகக் களமிறங்கினார் வி.வி.எஸ். பட்டிங் ஓடரில் 6 ஆவது பட்ஸ்மன். அப் போதெல்லாம் பெரும்பாலும் இவர் பௌலர்களுடன் தான் கூட்டணிபோட வேண்டியிருக்கும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 11 ஓட்டங்களில் அவுட். ஆனால், இரண்டாவது இன்னிங்ஸில், "இவனுக்குள் என்னவோ இருக்கு" எனப் புரிய வைத்தார். டெஸ்ட் கிரிக்கெட்டைப் பொருத்தவரை முதல் இன்னிங்ஸில் பெரிய இன்னிங்ஸ்கள் ஆடுவது என்பது பெரிய விடயம் கிடையாது. இரண்டாவது இன்னிங்ஸில் தோல்வியைத் தவிர்க்க, வெற்றியைத்தொட பெரிய இன்னிங்ஸ்கள் ஆட வேண்டும். மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை மீட்டு கரைசேர்க்க வேண்டும். அப்படித்தான் இந்தியாவை முதல் டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்ஸிலேயே கரை சேர்த்தார் லட்சுமண்.

இந்தியா 91 ஓட்டங்களுக்கு டிராவிட் உட்பட 5 விக்கெட்டுகளை இழந்துவிட சுனில் ஜோஷி, ஸ்ரீநாத், கும்ப்ளே ஆகியோருடன் பார்ட்னர்ஷிப் போட்டு இந்தியாவின் ஸ்கோரை உயர்த்தினார். லட்சுமண் அடித்த 51 ஓட்டங்கள் தான் அன்று இந்தியாவின் டொப்ஸ்கோர். இந்தியா இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

இரண்டாவது டெஸ்ட்டில் சச்சின், கங்குலி, டிராவிட், லட்சுமண் என எல்லோருமே சொதப்பல் ஆட்டம் ஆடினர். ஆனால், லட்சுமணுக்கு மட்டும் மூன்றாவது ரெஸ்ட்டில் இடம் கிடைக்கவில்லை. லட்சுமணுக்கு பதிலாக டபிள்யூ. வி.ராமன் சேர்க்கப்பட்டார். 22 வயது இளம் பட்ஸ்மனுக்கு வாய்ப்பளித்து வளர்த்துவிட வேண்டியவர்கள் 32 வயது ராமனை அணிக்குள் கொண்டு வந்தார்கள். அதுவும் சொதப்ப, பல போட்டிகளில் ப்ளேயிங் லெவனுக்குள் இருப்பதும், வெளியே போவதுமாக இருந்தார் லட்சுமண்.

திடீரென 1997 இல் மேற்கிந்தியத் தீவுக்குப் போன இந்திய அணியில் நவ்ஜோத் சிங் சித்துவோடு ஓப்பனிங் பட்ஸ்மனாக இறக்கப்பட்டார் லட்சுமண். 167 பந்துகளில் 64 ஓட்டங்கள். மிகமிக அழகாக, நேர்த்தியாக அளந்து அளந்து ஆடிய லட்சுமணின் ஸ்பெஷல் இன்னிங்ஸ் இது. 5 டெஸ்ட்டுகள் கொண்ட இந்தத் தொடரில் 4 டெஸ்ட்களிலுமே ஓப்பனிங் பட்ஸ்மேனாக ஆடினார் லட்சுமண். 4 ஆவது டெஸ்ட்டில் மீண்டும் அரைச்சதமும் அடித்தார். ஆனால், 5 ஆவது டெஸ்ட்டில் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டு கழித்து 1998 இல் கொல்கத்தாவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்தான் லட்சுமணுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான பூர்வஜென்ம பந்தத்தை தொடங்கி வைத்தது. இந்த டெஸ்ட்டிலும் சித்துவோடு ஓப்பனிங் பட்ஸ்மனாகத்தான் ஆடினார் லட்சுமண். ஓப்பனிங் பார்ட்னர்ஷிப்பே 191 ஓட்டங்கள். சித்து 97 ஓட்டங்கள் அடிக்க, லட்சுமண் 95 ஓட்டங்கள் அடித்தார். இதுதான் லட்சுமணின் முதல் பெரிய இன்னிங்ஸ். இந்தியா இந்தப் போட்டியில் இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடர் முடிந்ததுமே அவுஸ்திரேலியா, சிம்பாவே அணிகளுடனான பெப்ஸி முத்தரப்பு ஒருநாள் போட்டி நடந்தது. கிட்டத்தட்ட இந்திய அணிக்குள் அறிமுகமாகி இரண்டு ஆண்டுகள் கழித்து முதல் முறையாக ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டார் லட்சுமண். இந்தத்தொடரில் வினோத் காம்ப்ளி தொடர்ந்து சொதப்ப, அவருக்குப் பதிலாக சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது லீக்போட்டியில் சேர்க்கப்பட்டார். இப்போதைய இந்திய அணியில் கோலியின் இடமான ஒரு டவுன் பட்ஸ்மனாகத் தான் லட்சுமண் அணிக்குள் இறக்கப் பட்டார். ஆனால், முதல் ஒருநாள் போட்டியிலேயே டக்அவுட். இதனால் அடுத்த போட்டியிலேயே ப்ளேயிங் லெவனில் இருந்து அவர் பெயர் டெலீட் செய்யப்பட்ட்து.

(தொடர்ச்சி அடுத்தவாரம்)

# ட்ரம்புக்கே பாடம் சொன்ன கொரோனா!



"ஒரே ஒருவர் தான் சீனாவில் இருந்து வந்தார். அவருக்குத்தான் கொரோனா. அவரையும் முடக்கிவிட்டோம். எல்லாம் நம் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றன."

"காய்ச்சலால் மட்டும் அமெரிக்காவில் ஆண்டுக்கு 50,000 பேர் இறக்கிறார்கள். இந்தக்கொரோனா வைரஸால் இறப்பு எண்ணிக்கை ஜீரோவாகத்தானிருக்கும்"

இப்படியெல்லாம் சொன்னவருக்கு இன்று கொரோனா. அவர், உலகின் சக்திவாய்ந்த மனிதர், அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். பல உலக நாடுகள் கொரோனாவை ஆரம்பத்திலிருந்தே மிகக் கவனமாக எதிர்கொண்டன. ஆனால், சில நாடுகள் அலட்சியமாக இருந்து பின்னர் சுதாரித்தன. ஆனால், அமெரிக்கா தனிரகம். கொரோனாவிற்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக இருந்தது. கொரோனா விடயத்தில் ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிக்கைகள் உலகம் முழுவதும் சர்ச்சையைக் கிளப்பின.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறார் ட்ரம்ப். "இந்தப் பயணம் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. நான் covid-19 பற்றி நிறைய கற்றுக்கொண்டேன். அதுவும் இது நிஜப்பள்ளிக்கூடம். வெறும்புத்தகங்களால் கற்றுக்கொள்ளும் பாடசாலை அல்ல. நான் கற்றது அனுபவப் பாடம். இப்போது எனக்கு எல்லாம் புரிகின்றன" என்று அந்த வீடியோவில் பேசியிருந்தார். ட்ரம்ப் என்ன கற்றுக் கொண்டார் என்பதை கடந்த ஆறு மாதங்களில் அவர் வெளியிட்ட கருத்துகளின் வழியே அறிந்து கொள்ள முடியும்.

ஜனவரி மாத இறுதியில் கொரோனா வைரஸ் குறித்த ஆரம்பக்கட்டச் செய்திகள் வெளியாயின. அப்போது ட்ரம்ப், "கொரோனா வைரஸை சீனா கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. சீனாவின் வெளிப்படைத் தன்மை பாராட்டத்தக்கது. ஜனாதிபதி ஜீ ஜின் பிங்கிற்கு நன்றி" என டுவீட் செய்திருந்தார். பின்னர் அவரே, இந்த வைரஸ் சீன நாட்டின் சதி எனக் கூறி, 'சீனவைரஸ்' என்றே பெயரிட்டுக் குறிப்பிடத் தொடங்கினார்.

கொரோனா பற்றிய ட்ரம்ப் கருத்துகள் உள்நாட்டிலும் சர்ச்சையைக் கிளப்பின. அமெரிக்காவின் தேர்ந்த அரசு மருத்துவ நிபுணர்கள் கொரோனா குறித்து வெளியிடும் கருத்துகளுக்கு, நேரடியாக மறுப்பு தெரிவித்து வந்தார் ட்ரம்ப். அவர்கள் 'மாஸ்க் அணியுங்கள்' எனப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினால், இவரோ 'மாஸ்க் போட மாட்டேன் போடா' என்று சொல்லாமல் சொல்லிச் சுற்றிக் கொண்டிருந்தார்.

கொரோனா உலகம் முழுக்க தீவிரம் அடைந்த போதும், பொருளாதாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று அமெரிக்காவில் பொது முடக்கத்தை அறிவிக்க மறுத்தார். இதே ட்ரம்ப் தான் அமெரிக்கா - மெக்சிகோ இடையே தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவின் பல்வேறு அரசுத்துறைகளைச் செயல்பாடில்லாமல் முடக்கி வைத்து அமெரிக்க அரசாங்கத்தை 'ஷட்டௌன்' செய்தார். அப்போதெல்லாம் அமெரிக்காவின் பொருளாதாரம் பாதிப்படைவதைப் பற்றி அவர் வருந்தவில்லை என அவரை விமர்சித்தார்கள் அதிருப்தியாளர்கள்.

கொரோனா குறித்து ட்ரம்ப் பேசிய விடயங்கள் அனைத்தும் தினம் புதுச் சர்ச்சைக்கு வித்திட்டன. "கிருமி நாசினியை ஊசிபோல உடம்பில் செலுத்திக் கொண்டால் என்ன?" எனக் கேள்வி கேட்டு உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கினார். "ஜனநாயகக் கட்சி ஆளும் அமெரிக்க மாகாணங்களில்தான்கொரோனா நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்படவில்லை. அந்த மாகாணங்களைக் கணக்கில் எடுக்காவிட்டால் அமெரிக்காவின் நோய்த்தொற்று விகிதம் உலகிலேயே குறைவானதாக இருக்கும்" என்று அரசியல் செய்தார்.

அதேநேரம், கடந்தவாரம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலையொட்டி நிகழ்ந்த விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றார் ட்ரம்ப். நிகழ்ச்சியில் மாஸ்க் அணியாமல் பேசிய ட்ரம்ப், பொக்கெட்டில் வைத்திருந்த மாஸ்க்கை எடுத்துக்காட்டி "தேவையெனில் அணிந்து கொள்வேன்" என்றார். ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோபிடென், நோய்த்தொற்று பாதுகாப்பைப் பற்றி வலியுறுத்த, "ஜோபிடென் மிகவும் பயப்படுகிறார். இந்தத் தேர்தல் பொதுக்கூட்டங்களால் எந்த பாதிப்பும் இல்லை. ஆனாலும் அவர் எப்போதும் மாஸ்க் அணிந்திருக்கிறார். மக்களிடமிருந்து 200 அடி தள்ளி நின்றுதான் பேசப்போகிறார். அப்படியிருந்தும் முகமே மறையும் அளவிற்குப் பெரிய மாஸ்க் போடுகிறார். இவர் ஜனாதிபதியானால், பயந்தே அமெரிக்காவின் பொருளாதாரத்தை முடக்கி விடுவார்" என அவரைக் கிண்டல் வேறு செய்தார் ட்ரம்ப்.

அடுத்த ஒருவாரத்திலேயே ட்ரம்ப் மற்றும் அவர் மனைவி மெலனியா ட்ரம்ப் இருவரும் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்னதான் கொரோனா குறித்து ட்ரம்ப் எக்குத்தப்பாகக் கருத்துகளை உதிர்த்து வந்தாலும் இப்போது அதன் பாதிப்பை நேரடியாக உணர்ந்திருப்பார். அவரும் அவர் மனைவியும் இந்த பாதிப்பிலிருந்து நல்ல படியாக மீண்டு வரவேண்டும் என்பதே அவரின் எதிர்ப்பாளர்கள் உட்பட அனைவரின் விருப்பம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2139

### அஞ்சலி

ஆடுகிற ஆட்டமும் ஓடுகிற ஓட்டமும் ஒருநாள் ஓயும் போது கூடுகிற கூட்டம்தான் சொல்லும் நீ யாரென்பதை...!



### தனன்சயன்



அடுத்தவன் மாதிரி வாழ ஆசைப்படாதே...! ஏன் என்றால் அவனே அடுத்தவன் மாதிரி வாழத்தான் ஆசைப்படுகிறான்...

### விக்னேஸ்வரன்

காயங்களோடு சிரிப்பது எளிதல்ல.



அப்படி சிரிக்க தொடங்கிவிட்டால்...எந்த காயமும் பெரிதல்ல...!(புத்தர்)

### கனகாம்பிகை



உன்னை செதுக்கி கொண்டே இரு... சிலையாகவில்லையானாலும் சரி கல்லாய் இருக்காதே.


### டயானா

தடுமாறும் போதும் தவறி விழும் போதும் கூச்சலிடாமல் இரு. ஏனெனில் அதைக் கொண்டாட ஒரு கூட்டமே காத்திருக்கும்.



### சாரா

வாழ்க்கை குத்துச்சண்டை போன்றது. விழுந்தபோதுதோல்வி அறிவிக்கப்படுவதில்லை... எழாதபோது அறிவிக்கப்படும்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 225

## எம்மைத் தடுத்தாட் கொள்ளப் போவது யார்?

நாம் உடல் ஆரோக்கியத்திற்கு என்று பயன்படுத்தி வருபவற்றை பட்டியலிட்டால் ஓட்ஸ், சத்துக் குளிசைகள், ஆட்டாமா, ரொனிக்குகள், சத்துமாப் பேணிகள், போத்தல்களில் வரும் பானங்கள் போன்றவற்றைக் குறப்பிடலாம். இவற்றை வாங்கி பாவிப்பதில் மன நிறைவும் பெருமையும் கொள்கிறோம்.



எமது மண்ணில் உற்பத்தியாகாத இறக்குமதி செய்து வரும் இந்த பொருட்கள் தான் உண்மையான சத்துள்ளவை என நம்பி பெருமளவு பணத்தை இதற்காக அநாவசியமாக செலவு செய்து கொண்டிருக்கிறோம். எமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் ஆரோக்கியமான, இயற்கையான உணவுப்பொருட்களான தீட்டாத அரிசிமா, ஊர்க்கோழி முட்டை, உடன் பசும்பால், மோர், விளாம்பழம், கொய்யாப்பழம், முருங்கை இலை, வல்லாரை, தவசி முருங்கை, அகத்திப்பூ, தேசிக்காய், ஒடியல், இராசவள்ளி, இளநீர், இளநீரின் வழுக்கல், நுங்கு போன்ற பல அற்புதமான உணவு வகைகளில் நாம் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறோம். இவற்றை ஒழுங்காக பாவித்து வருவோமாக இருந்தால் சத்துமாப் பேணிகளோ விற்றமின் குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை இருக்காது.

மண்ணிற சீனியும் வெள்ளைச்சீனி போலவே நீரிழிவு, உடல் நிறை அதிகரிப்பு, உடம்பில் கொழுப்பு அதிகரிப்பு போன்ற தீயவிளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வெள்ளைச்சீனி போலவே மண்ணிற சீனியும் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மண்ணிற சீனி ஒரு ஆரோக்கியமான உணவுப்பொருள் அல்ல. ஒப்பீட்டளவிலே வெள்ளை சீனியிலும் பார்க்க மண்ணிற சீனியில் சிறிதளவு ஊட்டச் சத்துக்களும் கனியுப்புக்களும் அதிகமாக இருக்கிறது என்ற ஒரு சிறிய விடயத்தை மூலதனமாக்கி மண்ணிற சீனிக்காக பாரிய விளம்பரப்படுத்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக பல நீரிழிவு நோயாளர்களும் பொதுமக்களும் மண்ணிற சீனியை அதிகளவு பயன்படுத்த தொடங்கியிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இதுதவிர்க்கப்பட வேண்டும்.

விரும்பிய உணவு வகைகளால் நாம் அளவான நிறையைப் பேண முடியும். உதாரணமாக ஒருவர் வடை, ரோல்ஸ், ஐஸ்கிறீம் என்பவற்றை மேலதிகமாக உண்ண வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவற்றை மனச்சந்தோசமாக சுவைத்து உண்ட பின் அவரின் அடுத்த பிரதான உணவை பால், பழமாக மாற்றிக்கொண்டால் அது அவரின் சுகாதார நிலையிலோ நிறையிலோ பெரிய மாற்றத்தை ஏற்படுத்த மாட்டாது. எமது உடலின் அன்றாட தேவைக்கு மேலதிகமாக உண்பதே உடல்நிறை அதிகரிப்பிற்கு காரணமாக அமைகிறது.

ஒவ்வொரு உடலுக்கும் தேவைப்படும் கலோரியின் அளவு மாறுபடும். சராசரியாக ஒரு பெண்ணிற்கு தினம்தோறும் தேவைப்படும் சக்தியின் அளவு 1900 கிலோ கலோரி ஆகும். அதேபோல ஒரு சாதாரண நிறை உயரம் உடைய நடுத்தர வயதுடைய ஆணுக்கு தினம் தோறும் தேவைப்படும் சக்தியின் அல்லது கலோரியின் அளவு 2500 கிலோகலோரி ஆகும்.

உடலுக்கு தேவைப்படும் சக்தியின் அளவு அவரின் உயரம், வயது, நிறை, அவரின் தொழிற்பாடு வீதம் போன்றவற்றில் தங்கி இருக்கின்றது. நிறை குறைக்க விரும்பும் ஒவ்வொருவரும் தனது உடல் பராமரிப்புக்குத் தேவைப்படும் கலோரிப் பெறுமானத்திலும் பார்க்க குறைந்த கலோரிப் பெறுமானமுள்ள உணவை உண்டு வருவார்களாக இருந்தால் அவர்களது நிறை குறைய ஆரம்பிக்கும்.

ஒவ்வொருவரும் தான் சேமித்து வைத்திருக்கும் சக்தியில் 6500 கிலோ கலோரியை இழக்கும் பொழுது அவரின் நிறை **1Kg** இனால் குறைவடைகின்றது. அதாவது ஒருவர் உடற்பயிற்சி மூலமோ அல்லது உணவுக்கட்டுப்பாட்டு மூலமோ 6500 கிலோ கலோரி சக்தியை இழந்தால் அவரின் நிறை **1Kg** இனால் குறைவடையும்.

ஒருவர் தனது உடற்தேவைக்கு மேலதிகமாக **50g** சீனி சேர்க்கப்பட்ட தேநீரை அருந்துபவராக இருந்தால் அவரின் உடல்நிறை 30 நாட் களில் **1Kg** இனால் அதிகரிக்கும். தினம் தோறும் ஒருவர் தனது உடற்தேவைக்கு மேலதிகமாக ஒரு தேநீரையும், ஒரு ரோல்ஸையும் உண்டு வந்தால் 17 நாட்களில் அவரின் நிறை **1Kg** இனால் அதிகரிக்கும். அதாவது நாம் இடைநேரங்களில் உண்ணும் உணவுகளும் எமது நிறை அதிகரிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.

நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றினதும் கலோரிப்பெறுமானம் என்ன என்பதை அறிந்து வைத்திருப்போமாக இருந்தால் எமது உடற் தேவைக்கு வேண்டிய உணவின் அளவை நாமே தீர்மானிக்க முடியும். நாம் உண்ணும் உணவின் அளவை மாற்றி நிறை குறைப்பையும் செய்து கொள்ள முடியும்.

சத்துமா பேணிகளில் தான் சத்து என்று சத்தியமும் செய்து கொண்டு நம் ஊர்க்கோழி முட்டைகளையும், உடன் பாலையும் ஆபத்தான உணவுகள் என அறிவித்துவிட்டு ஊதிப்போன உடம்பை குனிந்து பார்க்கவோ நிறுத்துப்பார்க்கவோ நேரமில்லாமல் அலைந்து திரியும் எம்மை தடுத்தாட்கொள்ளப்போவது யார்?



Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்